


கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை



ஆயுதக்குழுவின் வசம் உக்ரைன் விமானத்தளம் பக். 07


சாமானியர் வாழ்வில் இது இருண்ட யுகம் பக். 12


நவஜீவன்ஸ் சம்பியன் பக். 22


ரியல் மட்ரிட் கோல் மழை பக். 23



# உதயன்

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily


சுடர்: 29 கதிர்: 095 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 17, சனி 01.03.2014


# இலங்கையின் உரிமை மீறல்களை நீண்ட பட்டியலிட்டது அமெரிக்கா

**பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் குறித்து கொழும்பு அசண்டையீனம். இதன் காரணமாகவே ஜெனிவாவில் தீர்மானம் என்றும் அறிவிப்பு**

வொசிங்டன்,மார்ச் 01
பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அடிப்படைக் கோரிக்கைகளுக்கு இலங்கை அரசு இன்னும் பதிலளிக்காத நிலையே நீடிக்கின்றது. துரதிஷ்டவசமாகச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் இன்னமும் அங்கு தொடர்கின்றன. இந்த நிலைமைகள் பற்றிய எமது கவலைகளே, ஐ.நா மனித உரிமைகள் சபையின் எதிர்வரும் மார்ச் அமர்வில் இன்னொரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு வழி வகுத்துள்ளன என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் செய

21 ஆம் பக்கம் பார்க்க


ஜோன் கெரி.

# ராணுவத்தின் ஷெல் தாக்குதலில் இறந்த 9 பேரின் எலும்புகளே மீட்பு

**மூங்கிலாறு புதைகுழி நேற்றுத் தோண்டப்பட்டது. பாய்களில் சுற்றப்பட்ட நிலையில் அடுத்தடுத்து கிடைத்தன சடலங்கள் . அ.அட்டை ஒன்றும் வெளிவந்தது.**

கிளிநொச்சி, மார்ச் 1
முல்லைத்தீவு, மூங்கிலாற்றில் நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து நேற்று 9 சடலங்கள் மீட்கப்பட்டன. இவை இறுதிப் போரின்போது இராணுவத்தினரின் பல்குழல் எறிகணைத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் என்று சாட்சியின் போது ஒருவர் தெரிவித்தார்.
இறந்தவர்களுடையது என்று கருதப்படும் ஆடைகள் மற்றும் அடையாள அட்டை ஒன்றும் புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. பாய்களில் சுற்றி ஒன்றன் மீது ஒன்றாகச் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தன.
மூங்கிலாறு, 200 வீட்டுத் திட்டம் பகுதியில் உழவு இயந்திரத்தால் காணியை உழுத போது மனித மண்டையோடும் எலும்பு எச்சங்களும் மேற்கிளம்பின. இது குறித்து உடனடியாகப் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.
நேற்று அந்த இடத்தில் மேலும் சடலங்கள் இருக்கின்றனவா என்பதை அறிவதற்காக அந்த இடம் தோண்டப்பட்டது. முல்லைத்தீவு பதில் நீதிவான் தங்கராஜா பரஞ்சோதி முன்னிலையில் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்

21 ஆம் பக்கம் பார்க்க


நேற்று தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள்

## மஹிந்தவின் மருத்துவர் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு,மார்ச்01
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மருத்துவரின் வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.
நேற்று அதிகாலை 4.30 மணிக்கு மீரிஹான பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
ஜனாதிபதியின் மருத்துவர்

21 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் மின் தாக்கி 13 வயது சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 01
நெடுந்தீவில் மின்சாரம் தாக்கி 13 வயதுச் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றபோதும் பொலிஸார் நேற்று இரவு சுமார் 7 மணியளவிலேயே பதில் நீதிவானுக்குத் தகவல் தெரிவித்

21 ஆம் பக்கம் பார்க்க

## 2016 க்கு முன் இல்லை ஜனாதிபதித் தேர்தல்


கொழும்பு, மார்ச் 1
2016ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தப்போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களை ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் கொழும்பில் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.
ஜனாதிபதித் தேர்தலை முன்

21 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்திலும் பெண்களை இராணுவத்தில் இணைக்க முயற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 01
கிராமசேவையாளர்களைக் கொண்டு, யாழ்ப்பாணத்திலும் இராணுவத்திற்குப் பெண்களை இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பகிரங்கமாகக் கிராம சேவையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
தென்மராட்சிப் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த கிராம சேவையாளர்கள் இராணு வத்தினரின் இந்த நடவடிக்கைகள்

21 ஆம் பக்கம் பார்க்க


விபத்து நடந்த இடத்தில் சடலம்

## டிப்பர் - மோ.சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் தலை நசிந்து சாவு

**இருபாலையில் நேற்றுப் பரிதாபம்**

யாழ்ப்பாணம், மார்ச் 01
இருபாலையில் நேற்று இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் டிப்பர் சில்லில் தலை நசிந்து

21 ஆம் பக்கம் பார்க்க

## மிரட்டல், கப்பம் பெறுதலில் ஈடுபட்டு வருகிறது ஈ.பி.டி.பி

**அமெரிக்க அறிக்கையில் சாடல்**

வொசிங்டன்,மார்ச் 01
இலங்கை இராணுவத்துடன் இணைந்து ஈ.பி.டி.பி தொடர்ந்தும் பணியாற்றுவதாகவும் அவர்கள் மிரட்டல், கப்பம் பெறுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ள அமெரிக்கா, யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு ஈ.பி.டி.பி வன்முறையில் ஈடுபட்டது எனவும் தனது மனித உரிமை அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டத்தை ஒருபோதும் நீக்கமுடியாது

**மனித உரிமைகள் ஆணையாளரின் கோரிக்கையை நிராகரித்தது அரசு**

கொழும்பு,மார்ச் 01
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின், கூட்டத்தொடரில் ஐ.நா.

21 ஆம் பக்கம் பார்க்க

## அரசு மீது விசுவாசம் உள்ளவர்கள் முஸ்லிம்கள்

**கோத்தா புகழாரம்**

கொழும்பு,மார்ச் 01
முஸ்லிம் சமூகம் ஒரு போதும் நாட்டுக்குத் துரோகமிழைக்கவில்லை. அவர்கள் அரசுக்கு விசுவாசமாகவே இருக்கின்றனர். இதனை நாம் ஒரு போதும் மறவோம். இறுதிக் கட்டப் போரின்போது எமக்குப்

21 ஆம் பக்கம் பார்க்க

## உதயன் மீது தொடரும் தாக்குதல்களால் கவலை

வோஷிங்டன்,மார்ச் 01
'உதயன்' மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்களைப் பட்டியல் படுத்தியுள்ள அமெரிக்கா, தாக்குதல் சம்பவங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை என்ற வாக்குறுதியை காப்பாற்றுக

**கமரூனிடம் பிரிட்டன் தமிழர்கள் வலியுறுத்தல்**

லண்டன்,மார்ச் 01
சர்வதேச விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்படும் என்று பிரிட்டன்தெரிவித்ததற்குஅமைய, அதனைச் செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பிரிட்டன் பிரதமரின் வாசஸ்தலத்தின் முன்பாகப் பிரிட்டன் வாழ்

21 ஆம் பக்கம் பார்க்க

## கடையில் சிலிண்டர் திருடியவர் வசமாக மாட்டினார் பெண்ணிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியை அண்மித்து கடை ஒன்றில் சிலிண்டர் திருட முற்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த மூவரில் ஒருவரை கடையில் நின்றிருந்த பெண் ஒருவர் சேர்ட் கொலரில் பிடித்து இழுத்து வீழ்த்தினார். பின்னர் அங்கு கூடியவர்களால் அவர் உரிய கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

கடையில் வைத்து அவருக்குக் கொடுத்த உரிய கவனிப்பை அடுத்து சிலிண்டர்களைத் திருடிச் சென்றவர்கள் அவற்றை ஓட்டோ ஒன்றில் திருப்பிக் கடைக்கு அனுப்பிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அதன் பின்னரே மாட்டிக் கொண்ட நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

ஹன்ரர் ரக வாகனத்தில் மூவரும் குறித்த கடைக்குச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் மட்டும் கடையின் உள்ளே சென்று சில பொருள்களைக் கேட்டுக் கதை கொடுத்துள்ளார். அந்த நேரம் பார்த்து கடைக்கு வெளியே நின்றிருந்த இருவரும் கடையில் இருந்த இரண்டு சிலிண்டர்களைத் தூக்கி ஹன்ரரில் ஏற்றி விட்டு வாகனத்தை ஸ்ராட் செய்து விட்டு நின்றனர். இதனையடுத்து கடைக்குள் நின்றவர் தான் வைத்திருந்த கைத்தொலைபேசியைக் காதினுள் வைத்து தன்பாட்டுக்குக் கதைத்தபடி கடையை விட்டு வெளியேறினார்.

இதன்போதே அவர் கதைக்கும் கைத்தொலைபேசிக்குப் பின் மூடி இல்லாதிருப்பதை அவதானித்த கடைக்காரப் பெண் கைத்தொலைபேசிக்கு பற்றரியும் இல்லாதிருப்பதை அவதானித்துவிட்டர். அவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட அந்தப் பெண் வெளியே வந்து பார்த்தபோதே அங்கிருந்த சிலிண்டர்களைக் காணவில்லை. கைத்தொலைபேசியுடன் நின்றிருந்தவரும் ஓடிச் சென்று வாகனத்தில் ஏற முற்பட்டுள்ளார்.

இதன்போது விரைந்து செயற்பட்ட அந்தப் பெண், அவரது சேர்ட் கொலரைப் பிடித்து இழுத்து வீழ்த்திக் கூக்குரலிட்டார். அதனால் அவ்விடத்திலிருந்தவர்கள் ஒன்று சேர்ந்து அவரைப் பிடித்து திருடப்பட்ட சிலிண்டர்களை மீள எடுப்பித்ததோடு உரிய கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(த-4)

# வட்டிக்குப் பணம் கொடுக்காதீர்கள்

## யாழ்.பொலிஸார் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.குடாநாட்டில் பொருள் கொள்வனவில் காசோலை மோசடிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், வட்டிக்குப் பணம் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாகக் காசோலையை வாங்குகின்றனர்.வட்டியையும் பணத்தையும் குறித்த நபர் திருப்பிக் கொடுக்காத நிலையில் அது காசோலை தொடர்பான முறைப்பாடாகப் பதிவாகிறது. எனவே எவருமே வட்டிக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று யாழ். பிராந்திய விசேட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி அமரசேகர தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

> “வட்டிக்குப் பணம் கொடுக்கவோ சட்டவிரோதமாகச் சீட்டுக் கட்டவோ வேண்டாம். குறைந்த வட்டி வீதம் என்றாலும் வங்கியில் வைப்பிலிடுங்கள்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காசோலை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. பொருள்கள் விற்பனை செய்து அல்லது கொள்வனவு செய்து அதற்குரிய பணத்துக்குப் பதிலாகவே காசோலை வழங்கப்படுகிறது. ஆனால் தற்போது வட்டிக்குப் பணம் கொடுத்து அதற்குப் பதிலாகக் காசோலையைப் பெறுகின்றனர். பணம் கொடுத்து ஒவ்வொரு மாதமும் வட்டி கட்டவேண்டும் என்ற நிபந்தனையிலேயே அவ்வாறு வட்டிக்குப் பணம் கொடுக்கப்படுகிறது. சிலர் வட்டி கட்டுவதற்கு ஏற்ற நிலையில் இல்லை. பலர் சில மாதங்களுக்கு வட்டியைக் கட்டிவிட்டுப் பின்னர் வட்டியையும் பணத்தைக் கூடக் கட்ட முடியாமல் விட்டு விடுகின்றனர்.

இந்நிலையிலேயே வட்டிக்குப் பணம் கொடுத்தவர்கள் காசோலை மோசடி என்று முறைப்பாடு பதிவு செய்கின்றனர். வட்டிக்குக் கொடுத்த பணம் திருப்பித் தரப்படவில்லை என்று சட்டரீதியாக முறைப்பாடு செய்ய முடியாது. அதனாலேயே காசோலை முறைப்பாடாகப் பதிவு செய்கின்றனர்.

காசோலை முறைப்பாடாகப் பதிவு செய்தாலும் நீதிமன்றில் அது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வரும்போதே அவர்கள் வட்டிக்குப் பணம் கொடுத்தமை தெரியவருகிறது. அதனால் நீதிமன்றினால் கூடச் சட்டரீதியாக ஒன்றும் செய்ய முடியாத நிலையே ஏற்படுகிறது. ஆனால் இதனை எவரும் புரிந்து கொள்கிறார்களில்லை. அதனாலேயே பணத்தை இழக்கிறார்கள்.

எனவே எவருமே வட்டிக்குப் பணம் கொடுக்கவோ சட்டவிரோதமாகச் சீட்டுக் கட்டவோ வேண்டாம்.குறைந்த வட்டி வீதம் என்றாலும் வங்கியில் வைப்பிலிடுங்கள்-என்றார் அமரசேகர.

(த-4)

## சைக்கிளிலிருந்து விழுந்த மூதாட்டி நேற்றுச் சாவு

தென்மராட்சி,மார்ச் 1

ஆலயத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய வேளையில் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த மூதாட்டி சிகிச்சை பயனின்றி யாழ்.போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சிவராத்திரி பூஜைக்காக பகல் ஆலயத்துக்குச் சென்றுவிட்டு, பேரனின் சைக்கிளில் வீடு திரும்புகையில் தவறி வீழ்ந்த போது அங்கு காணப்பட்ட கல் அவரின் தலையில் தாக்கிக் காயமேற்பட்டது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

கச்சாய் தெற்கை சேர்ந்த முருகர் சரஸ்வதி (வயது - 71) என்பவரே உயிரிழந்தவராவார்.

(த-9)

# இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து சுயாதீன - சர்வதேச விசாரணை வேண்டும்

## சர்வதேச சட்ட வல்லுநர் சங்கம் கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 1

இலங்கையில் இடம்பெற்றவை எனக் குற்றஞ்சாட்டப்படும் போர்க்குற்றங்கள், கடந்தகால மனித உரிமைச் சட்டமீறல்கள் ஆகியவை தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையை சர்வதேச சட்ட வல்லுநர் சங்கத்தின் மனித உரிமைகள் கழகம் வலியுறுத்தியுள்ளது.

சமீபத்திய தமது அறிக்கையிலும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளை இதனையே வலியுறுத்தியுள்ளார் என்றும் மேற்படி கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கழகத்தின் இணைத் தலைவர் பரோனஸ் யஹலினா கென்னடி கியூ.ஸி. இது குறித்துக் குறிப்பிடுகையில், இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சண்டை முடிவுக்கு வந்தது முதல் கிரமமாக நிறைவேற்று அதிகாரம் பரிசீலிக்கப்பட்டு சமநிலைப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு சுயாதீனமான நீதி விசாரணை இல்லாமையால், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் ஆகியவை தொடர்பாக இலங்கையின் சட்டமுறைமையின் திறமையற்ற நிலைப்பாட்டால் அநேக சந்தர்ப்பங்களில் தீர்வை முன்வைக்க முடியாதிருந்துள்ளது. இதனை எம் கழகம் அவதானித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள பரிந்துரைகளை சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கத்தின் மனித உரிமைகள் கழகம் முழுமையாக ஆதரிக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

சுவிற்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறும்.

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்டம் ஆகியவை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேலும் விசாரணையைத் தொடர்வதற்கான சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்று நிறுவப்படவேண்டும் என்றும் உள்ளக பொறுப்புக் கூறும் கடப்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள் அவதானிக்கப்பட வேண்டும் என்றும் தமது அறிக்கையில் நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த)

## போதைப் பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 1

இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒரு வகைப் போதைப் பொருளுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப் பொருள் தூள் அடங்கிய 28 சிறிய பொதிகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பதுளை நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதையடுத்து, 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நகரில் வாகனங்களை சோதனையிட்டபோது பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து குறித்த நபர் சோதனையிடப்பட்டதுடன் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

(ச)

## பெண்ணுடன் தவறாக நடக்க முயன்ற மருத்துவ பீட மாணவனுக்குத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.போதனா வைத்தியசாலையில் பயிற்சி பெறும் மருத்துவ மாணவர் ஒருவர் அங்கு விடுதியில் தங்கிய பெண் ஒருவருடன் மொட்டை மாடியில் தவறான நடத்தையில் ஈடுபட முயன்ற சம்பவத்தை அடுத்து, அவர் பல்கலைக்கழகத்துக்குள்ளோ அல்லது பல்கலைக்கழக விடுதியினுள்ளோ அல்லது வைத்தியசாலையினுள்ளோ நுழைவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

> “பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது. பிற மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவரே இவ்வாறு செய்ய முற்பட்டு மாட்டிக்கொண்டார்.

அதனை அவதானித்த வைத்தியசாலைப் பாதுகாப்பு ஊழியர்கள் அவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். அது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து குறித்த மருத்துவ மாணவனும் சம்பந்தப்பட்ட பெண்ணும் நிர்வாகத்தினரால் அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டனர். பின்னர் மாணவன் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

இந்நிலையிலேயே அவருக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.பல்கலைக்கழகத் தரப்புத் தெரிவித்தது.

(த-4-17)

## தேவை

பழைய காலத்துப்பித்தளை, செம்புப் பொருள்கள் மற்றும் கருங்காலி மரத்தினாலான மேசை, கதிரை போன்ற தளபாட வகைகள் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு : 078 284 6666

## நாற்சார் வீடு தேவை

யாழ். நகரில் இருந்து 10Km இற்குள் நாற்சார் வீடு விற்பனைக்கு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 078 284 6666

# அரசியல் கைதியின் சாவுக்கு நீதி கோரி போராட்டம் நாளை

யாழ்ப்பாணம்,மார்ச் 1

மகஸின் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த அரசியல் கைதியான கோபிதாஸின் உயிரிழப்புக்கு நீதியான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நாளை ஞாயிற்றுக்கிழமை வடமராட்சியில் ஜனநாயக ரீதியான போராட்டம் இடம் பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வடமராட்சி புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் காலை 9 மணி முதல் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2007 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட விஸ்வலிங்கம் - கோபிதாஸ் சிறையில் இருந்த காலப்பகுதியில் கடுமையான உடல் உள சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார் என அவரது பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சூழ்நிலையில் இவர் கடந்த 24ஆம் திகதி மகஸின் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந் தார். இவரது மரணத்துக்கு நீதியான சர்வதேச விசாரணை நடத்தப்படல் வேண்டும். சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மீதான துன்புறுத்தல்கள் சித்திரவதைகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்துதல், அனைத்துச் சிறைக் கைதிகளையும் உடன் விடுதலை செய்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஜனநாயக ரீதியான போராட்டம் இடம் பெறவுள்ளது.

எனவே தமிழ் அரசியற் கைதிகள் மீது தொடரும் துன்புறுத்தல்கள், சித்திரவதைகள், படுகொலைகள் மற்றும் மருத்துவ வசதிகள் மறுக்கப்படுதல் உட்பட சிறைச்சாலைகளில் இடம்பெறும் அடக்கு முறைகளை சர்வதேச சமுகத்துக்கு அம்பலப்படுத்தவும், இவற்றைத் தடுத்து நிறுத்தவும், சர்வதேச சமூகம் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உரிய தரப்பினர் மீது அழுத்தங்களை பிரியோகிக்க வேண்டும் என வலியுறுத்தியும் நாளை நடைபெறும் இந்தப் போராட்டத்தில் வேறுபாடுகளையும் மறந்து சகல தரப்பினரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றும் உள்ளது.

(கு-400)

# சட்டவிரோத மின்சாரம்; கடந்தவாரம் 20 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 11 பேரும், சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 2 பேரும், களவெடுத்த குற்றச்சாட்டில் ஒருவரும் மோசடி செய்த குற்றச்சாட்டில் 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்"-என்றார். (வ-4)

**'மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

# ரூ. 33 லட்சம் பெறுமதியான பொருள்கள், நகை அபகரிப்பு

## செய்தியாளர் மாநாட்டில் பொலிஸார் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் நகைகள் உட்பட 33 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"மானிப்பாயில் வங்கி ஒன்றின் முன்பாக உள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் 15 லட்சத்து 41 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். ஏழாலை மத்தியில் வீடு புகுந்த திருடர்கள் 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

உரும்பிராயில் வீடொன்றில் திருடர்கள் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். கோண்டாவிலில் பட்டப்பகலில் வீடு புகுந்த திருடர்கள் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அளவெட்டியிலுள்ள வீடொன்றில் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். யாழ். நகர் வைத்தியசாலை வீதியில் கடை உடைத்து 47 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

சுதுமலையில் வீதியால்சென்றுகொண்டிருந்த 62 வயதுடைய பெண்ணொருவர் அணிந்திருந்த சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மூளாய் வீதியில் வீடு புகுந்து 23 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

எனினும் இந்தக் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று நிஹால் பெரேரா மேலும் தெரிவித்தார். (வ-4)

# காசோலை மோசடி; 4 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

காசோலை மோசடி தொடர்பில் கடந்த வாரம் 4 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்தும் மொத்தமாக 13 லட் சத்து 84 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பிலானவையே என்று யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"4 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் புத்தளத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். 4 லட்சத்து 4 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடிகள் தொடர்பில் நல்லூரைச் சேர்ந்த ஒருவரும், பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்த ஒருவரும் முறைப்பாடு செய்துள்ளனர். அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (வ-4)

# இறுதி ஊர்வலத்தில் வெடி, அதீத ஒலி தவிர்த்து ஜெபம், ஒப்பாரி, வியாகுலப் பிரசங்கம் செய்க

## பருத்தித்துறை மறைக் கோட்டம் தீர்மானம்

கொழும்புத்துறை, மார்ச் 1

பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்களின் சாவு நிகழ்வு இறுதி ஊர்வலங்களில் ஆடம்பர செயற்பாடுகளைத் தவிர்த்து பண்பாட்டு மரபுவழி சமயம் சார் வழிபாடுகளைப் பின்பற்றுவது என்று மறைக் கோட்ட மேய்ப்பு பணிச் சபைகளால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கத்தோலிக்கத்தில் சாவு ஊர்வலங்களில் தத்தமது வசதிக்கேற்ப மேற்கொள்ளும் வெடி கொளுத்துதல் மற்றும் அதீத ஒலி யெழுப்பும் கருவிகளின் பயன்பாட்டைக் குறைத்து ஜெப, பக்திப்பாடல்கள், பாரம்பரிய கலை வடிவங்களான ஒப்பாரி, வியாகுல பிரசங்கம் என்பவற்றை இசைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக மறைக்கோட்ட குருமுதல்வர் ஏ.ஜே. மவுலிஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பங்குக் கோயில்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ஒப்பாரி, பசாம், ஜெப, பாடல் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்த மாதம் தொடக்கம் இந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

# தென்மராட்சியில் வீதிகள் சில மூடப்படும் அபாயம்

தென்மராட்சியில் வீதிகள் சில மூடப்படும் அபாயம் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். தண்டவாளம் இல்லாத காலத்தில் ஒழுங்கைகள் நுணாவில் கொல்லங்கிராய் ஊடாக சாவகச்சேரிக்கு வருவதற்கு ரயில் பாதை ஊடாக ஒழுங்கைகளை உருவாக்கி மக்கள் பயன்படுத்தினர்.

தற்போது தண்டவாளம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதால் கடவைகள் இல்லாததால் குறித்த ஒழுங்கை களைப் பயன்படுத்தியோர் சிரமங்களை எதிர்நோக்கு வதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள பொன்னம்பலம் வீதி கடந்த 2010 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு கற்கள் பறிக்கப் பட் டுள்ளபோதிலும் வீதி புனரமைப்பு வேலை இடம்பெறவில்லை. (வ-9)

# பாலை வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதால் கால்வாய் நோய்க் கிருமிகள் தாக்கம் பரவும் அபாயம்

## கால்நடை வளர்ப்போரை ஒத்துழைக்குமாறு கோருகிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

மாடுகளுக்கு ஒருவித கால்வாய் நோய் கிருமித்தாக்கம் ஏற்பட்டுள்ளதால் பாலை வேறு பிரதேசங்களுக்கு கொண்டு செல்லாமல் அந்தந்தப் பிரதேசங்களிலேயே பாலைப் பயன்படுத்துமாறு வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். வசீகரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டம், வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டங்களில் பால் தரும் மாடுகளுக்கு கால்வாய் நோய்க் கிருமித்தாக்கம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தெல்லிப்பழை, கோப்பாய், வட்டுக்கோட்டை பிரதேசங்களில் இந்த நோய்த்தாக்கம் அடை யாளம் காணப்பட்டிருந்தது.

தற்போது தெல்லிப்பழை, கோப்பாய் பிரதேசங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும் வட்டுக்கோட்டை பிரதேசத்தில் ஓரளவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்துள்ளது.

எனினும் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை கள் வழங்கப்பட்டு அவற்றை முற்றுமுழுதாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வவுனியா நகரப் பிரதேசத்திலும் இந்த நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதனைப்போன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் இந்த நோய்த்தாக்கம் இனங் காணப்பட்டுள்ளது. எனினும் நல்லின மாடுகளுக்கு ஏற்கெனவே தடுப்பூசி கள் ஏற்றப்பட்டுள்ளதால் இந்த நோய்த் தாக்கம் பெரியளவில் ஏற்படவில்லை .

நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் பாலை காய்ச்சிக்குடிப்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால் வேறு பிரதேசங்களுக்கு குறிப்பாக நோய்த்தாக்கம் இல்லாத பிரதேசங்களுக்கு பாலைக் கொண்டு செல்வதால் பாலுடன் நோய்க் கிருமியும் காவிச் செல்லப் படும். இதனால் ஏனைய இடங்களுக்கும் நோய்க்கிருமித்தாக்கம் ஏற்பட்டு, மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பால் சேகரிப்பு நிலையங்களும் கால்நடை வளர்ப்போரும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மாடுகளுக்கு நோய்த்தாக்கம் ஏற்பட்ட பின்னர் தடுப்பூசி ஏற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். எனவே நோய்த்தாக்கம் ஏற்பட முன்னர் கால்நடைக ளுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு தமது பிரதேச கால்நடை வைத்திய நிலையங்களுக்கு தகவல் கொடுத்தால் அவர்கள் நேரடியாகவே தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர். நோய்த்தாக்கம் ஏற்பட்ட பின்னர் 2 வீதமான மாடுகளே உயிரிழக்க நேரிடும். உணவு உட்கொள்ள முடியாத நிலை ஏற்படும் போதே அவை உயிரிழப்பைச் சந்திக்கும் .

எனவே கால் நடை வளர்ப்போர் மிக அவதானத்துடன் அந்தந்த காலப்பகுதிகளுக்கு ஏற்ப தடுப்பூசிகளை ஏற்றுவது பாதுகாப்பானது. அத்துடன் நோய்த்தாக்கம் காணப்படும் மாடு, ஆடுகளை வெளியிடங்களில் மேய்ச்சலுக்கு விடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கடந்த 2 மாதங்களில் யாழ். மாவட்டத்தில் 40 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் வரையான மாடுகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் 60 ஆயிரம் மாடுகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 ஆயிரம் மாடுகளுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசிகள் அதிகமாக நல்லின மாடுகளுக்கே ஏற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (ஒ-14,11)

# மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று சிரமதானம்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச் சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வளாகத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர் என்றும்-

நாளை ஞாயிறு பிற்பகல் ஒரு மணி தொடக்கம் சங்க எல்லைப் பரப்பில் உள்ள மாதர்கள், ஆடவர்கள் ஆகியோருக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும் என்றும் சங்கத் தலைவர் திருமதி ம. கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (ஒ-9)

# பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ளலாம்

தென்மராட்சி, மார்ச் 1

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் இந்த வருடத்துக்கான தையல், கணினி, மணப்பெண் அலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளை பின்வரும் பாடசாலைகளில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் அந்தந்தப் பாடசாலைகளில் அன்றையதினம் இணைந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், கொடிகாமம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் தையல் பயிற்சி வகுப்புகளும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, உசன் இராம நாதன் ம.வி. ஆகியவற்றில் கணினிப் பயிற்சி வகுப்புக ளும், வரணி மத்திய கல்லூரியில் மணப்பெண் அலங்காரப் பயிற்சி வகுப்புகளும் இடம் பெறும் என்று அவர் அறிவித்துள்ளார். (வ-9)

# விவசாயப் பாட மாணவர்களுக்கான இயற்கைப் பசளை தயாரிக்கும் தொட்டி

## முதன்முதலாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளில்

தென்மராட்சி, மார்ச் 1

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக பாடசாலை யொன்றில் விவசாயப் பாடம் கற்கும் மாணவர்களுக்கான இயற்கைப் பசளை தயாரிக்கும் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியை சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் முன்மாதிரியான பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு குறித்த தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ண குமார் தலைமையில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்து ழைப் புக்குமான நிறுவன யாழ்.மாவட்ட திட்ட முகாமையாளர் திருமதி வீ.மோசர், பொறியியலாளர் ராஜ்குமார், தொழில்நுட்ப அலுவலர் சோதிலிங்கம் ஆகியோர் இது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர். இந்தத் தொட்டிகளில் இயற்கைப் பொருள்களின் கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கைப் பசளை தயாரிக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. சுற்றாடல் அதிகார சபையின் ஆதர வுடன் பசளை உருவாக்கும் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# இனப்படுகொலை தொடர்பில் விசாரணைக்கு வலியுறுத்துக

### டென்மார்க் அரசிடம் நீதிக்கான நடைபயணக்குழு வேண்டுகோள்



டென்மார்க் அரசுடனான சந்திப்பின்போது

கொழும்பு,மார்ச்.1

இலங்கை இனப்படு கொலைக்கு எதிராக சுதந்திரமான சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதுடன் இதற்கு ஆதரவளிக்குமாறு டென்மார்க் அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நீதிக்கான நடைபயணத்தை மேற்கொண்டு சென்றுள்ள குழுவே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ஜெனிவா நோக்கி நடைபயணத்தை மேற்கொள்ளும் குழுவினர், டென்மார்க்கை நேற்று முன்தினம் சென்றடைந்தனர். அங்கு, சோசலிச ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், சர்வதேச - இணைவாக்க குழுவின் தலைவரும் மற்றும் கலாசார ஊடகத்துறை பேச்சாளருமான ற்றோல்ஸ் பாவு, மனித வுரிமை பிரதிநிதி எறிக் ஹென்றியுடனுமான சந்திப்புக்களிலேயே மேற்படி கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இனப்படுகொலைக்கு எதிராக சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்துவதற்கு டென்மார்க் தனது முழுமையான ஆதரவை அளிக்க வேண்டும், சிறைச்சாலையில் வாடும் எமது உறவுகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் தமிழ் மக்களின் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் - என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. (வ-5)

# மியன்மாரில் மஹிந்தவை சந்திக்கவே வேண்டாம்

### ராமதாஸ் மன்மோகனுக்கு வலியுறுத்து

சென்னை, மார்ச்.1

போர்க்குற்றவாளியாகக் கருதப்பட வேண்டிய இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மியன் மாரில் சந்தித்துப் பேச வேண்டாம் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மியன்மாரில் நடைபெறவிருக்கும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்கக் கடல் முன்முயற்சி அமைப்பின் மூன்றாவது மாநாட்டில் பங்கேற்க அந்நாட்டுக்கு அடுத்த வாரம் செல்லும் பிரதமர் மன்மோகன் சிங், அங்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க இருப்பதாக வெளியுறவுத்துறை அறிவித்திருக்கிறது.



ராமதாஸ்



மன்மோகன் சிங்

இலங்கை மீது போர்க்குற்ற மற்றும் இனப்படுகொலை விசாரணை நடத்த வலியுறுத்தும் தீர்மானத்தை இந்தியாவே கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடையே எழுந்திருக்கிற சூழலில், போர்க்குற்றவாளியாகக் கருதப்பட வேண்டிய இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசவிருப்பது பெரும் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

இந்த நேரத்தில் ராஜபக்ஷவை மன்மோகன்சிங் சந்தித்தால், அது பெரும்பான்மையான ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும் வாய்ப்புள்ளது.

எனவே, ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசுத் தலைவரை மியன்மார் மாநாட்டின் போது பிரதமர் மன்மோகன் சிங் சந்திக்கக் கூடாது. மாறாக, இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற மற்றும் இனப்படுகொலை விசாரணை நடத்த வலியுறுத்தும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (வ)

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயற்பாடுகள் உறங்கு நிலையில்

### பொதுமக்கள் கவலை

அச்சுவேலி,மார்ச் 1

வலி.கிழக்கு பிரதேச சபையின் வழமையான செயற்பாடுகள் உறங்கு நிலையில் காணப்படுகின்றன. குறித்த சபை நிர்வாகம் உரியமுறையில் செயற்படாமல் இருந்து வருவதால் வரியிறுப்பாளர்கள் பொதுமக்களுக்கான சேவைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முடக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலி.கிழக்கு பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் இரண்டு தடவை தோற்கடிக்கப்பட்டதை அடுத்து சபையின் தவிசாளர் பதவி இழந்தார். இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில் சபையின் செயற்பாடுகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வசதியாக மக்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டவர்களில் இருந்து புதிய தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும். அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் கீழ் பிரதேச சபையின் நிர்வாகம் விசேட ஆணையாளர் (அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்) ஒருவரிடம் குறிப்பிட்ட கால வரையறையின் கீழ் கையளிக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் இரண்டு செயற்பாடுகளில் ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் உறங்கு நிலையில் இருப்பதாகவும் இது தொடர்பில் சபையின் நிர்வாகத்தை தேர்தலின் மூலம் பொறுப்பேற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) நிர்வாகமோ வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சோ இதுவரை ஏற்புடையநடவடிக்கைஎதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் பொதுமக்கள், வரியிறுப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச சபைகளில் வலி.கிழக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் கடந்த காலங்களில் உட்கட்சிப்பூசலுடன் இழுபறிநிலையில் இருந்து வந்தன. சபையின் செயற்பாடுகள் உரிய முறையில் நடைபெறவில்லை என்று கூறப்படுகின்றது. தவிசாளருக்கும் சபையின் செயலாளருக்கும் இடையே நிலவிய முரண்பாடு, சபையின் ஆளுங்கட்சி பிரதிநிதிகளுக்கு இடையே நிலவிய உட்கட்சி முரண்பாடு என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளை விசாரணை செய்வதற்கு மாவட்ட நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்ட விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது.

இதுவரை காலமும் குறித்த வகையில் ஒழுங்கு முறையாகச் செயற்படாதது மட்டுமல்லாது அபிவிருத்தித் திட்டங்களும் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமல் முடக்கப்பட்டு வந்த வலி.கிழக்குப் பிரதேச சபை தொடர்ந்து தகுந்த நிலையில் செயற்படுவதற்கு சபை நிர்வாகத்துக்கு பொறுப்பான தமிழரசுக் கட்சியோ, வடக்கு மாகாண முதலமைச்சரோ ஏற்புடைய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் வரியிறுப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-11)

# இளைஞரைக் கடத்தியோர் வாகனத்துடன் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

2 லட்சம் ரூபா பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக ஒருவரை வீட்டிலிருந்து கடத்தியவர்கள் அவரைத் தாக்கிய பின்னர் வேறொரு இடத்தில் விட்டுச் சென்றுள்ளனர்.

கடத்தல் தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் பொலிஸ் அவசர தொடர்பு இலக்கமான 119 மூலமாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டதையடுத்து நெல்லியடிப் பொலிஸார் கடத்தியவர்களை வாகனத்துடன் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் 2 லட்சம் ரூபா பணம் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்டுள்ளார். அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கப்படாதமையால் வடமராட்சியைச் சேர்ந்த மூன்று பேர் நேற்று முன்தினம் கோண்டாவிலுக்குச் சென்று குடும்பஸ்தரைத் தேடியுள்ளனர். அவர் அங்கு இல்லாததனால் அவரது மகன் ஒருவரைத் தமது வாகனத்தில் கடத்திச் சென்றுள்ளனர் என்று கடத்தப்பட்டவரின் தந்தையால் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இதனடிப்படையிலேயே சம்பவம் தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. கடத்திச் சென்ற வாகன இலக்கத்தைக் குறிப்பெடுத்துக் கொண்டமையால் அதன் மூலமாக விசாரணை மேற்கொண்டே குறித்த வாகனத்தையும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 3 பேரையும் வடமரட்சிப் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து கோப்பாய் பொலிஸில் ஒப்படைத்தனர். (து-4-9)

# கால்கோள் விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 1

இனப் பெருக்க சுகாதாரம் தொடர்பான கல்வி தகவல் ஆலோசனை மையமாக 'தலையாரி' நிறுவனத்தின் கால்கோள் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சுக வாழ்வுக்கான தலைவர் ஜி. நக்கீரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை பேராசான் மருத்துவர் என்.சிவராஜாவும், கௌரவ விருந்தினர்களாக மருத்துவர் பி.எ.டி கூங்ஜே மருத்துவர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (400)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

பூச்சி நீக்கப்பட்ட 40 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் (Original) பொமேரியன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 075 9880000

மல்ரிபாம்

# வடக்கில் 60,000 புதிய வீடுகளுக்கு 300 மில்லியன் டொலர் வேண்டும்

### ஆயினும் நிதியைப் பெறமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,மார்ச் 01

வடக்கு மாகாணத்தில் 60 ஆயிரம் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 300 மில்லியன் அமெரிக்க டொலரிலும் கூடுதலான நிதி தேவைப்படுவதாகவும், இருப்பினும் இதற்கான நிதி எதுவும் தற்போது கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்த கையோடு நாம் வீடமைப்புக்களுக்கு நிதியை மும்முரமாக கேட்டுப் பெற்றிருக்க வேண்டும். காலம் கடந்துவிட்டதாலும் இதைவிட முக்கிய பிரச்சினைகள் உலகின் பல பகுதிகளிலும் ஏற்பட்டமையினாலும் நிதி வளம் அற்றுப்போகக் காரணமாகின என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் அபேசிங்க கூறினார்.

வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 651 குடும்பங்களில் 32 சதவீதமானோர் மட்டும் தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்ந்துவருகின்றனர். 6 சதவீதமானோர் உறவினர், நண்பர்களுடன் வாழ்ந்து வருகின்றனர் என்று 2013 இல் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நடத்திய ஆய்வில் கூறப் பட்டது.

போர் முடிந்த பின்னர் ஒரு லட்சத்து 46 ஆயிரம் வீடுகள் தேவைப்பட்டிருந்தன. ஆனால் அரசு மற்றும் நன்கொடையாளர்களினால் 83 ஆயிரம் வீடுகள் மாத்திரம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 41 ஆயிரம் வீடுகள் மீளக்குடியமர்ந்தோருக்கு மட்டும் வழங்கப்பட்டன. 10 ஆயிரத்து 500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இன்னும் 63 ஆயிரம் வீடுகளுக்கு நிதி தேவையென அதிகாரிகள் கூறுகின்றார்கள். (து-5)

# ஜப்பான் பங்கேற்காது

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படும் தீர்மான வரைவு தொடர்பான வாக்கெடுப்பில் ஜப்பான் பங்கெடுக்காமல் தவிர்க்கவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கு எதிராக எதிர்வரும் ஜெனிவா அமர்வில் அமெரிக்காவினால் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது. இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த வாக்கெடுப்பின் போது பங்கெடுக்காமல் தவிர்ப்பதற்கு ஜப்பான் தீர்மானித்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கடந்த ஆண்டும் இதே போன்று ஜப்பான் நடுவு நிலைமை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (து-5)

**வேலையாள் தேவை**

யாழ்.நகரில் பாம் ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வெளி மாவட்டத்தைச் சேர்நதவர்கள் தேவை. தொடர்பு : 075 9880000

## மாநகர சபைக் கூட்டங்களை உரிய நேரத்தில் ஆரம்பிக்குக

*சபை மாதாந்தக் கூட்டத்தில் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மார்ச் 1

மாநகர சபைக் கூட்டங்கள் உரிய நேரத்துக்கு கூட்டப்படுவதில்லை என்றும், இதனால் ஏனைய முக்கிய பணிகளைக் கவனிக்க முடியாமல் இருப்பதாகவும், உரிய நேரத்தில் அதை ஆரம்பிக்குமாறும் புதன் கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் திருமதி மேரியம்மா வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் :-

சபையின் குழுக் கூட்டங்கள் நடைபெறவுள்ள நேரத்தை அறிவித்து விட்டு நீண்ட நேரம் தாமதித்தே கூட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. மராமத்துக் குழுக் கூட்டத்துக் குரிய அறிவிப்பில் 11.02.2014 முற்பகல் 10 மணிக்கு கூட்டம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து உறுப்பினர்கள் காலை 9 மணிக்கே சமுகமளித்தனர். நண்பகல் 12 மணி வரை கூட்டம் இடம் பெறாத நிலையில் திரும்பிச் சென்றனர். அதன் பின்னரே ஏனைய ஒரு சில உறுப்பினர்களுடன் கூட்டம் நடைபெற்றது. சபையின் மாதாந்தக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படினும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் தம்மிடையே நீண்ட நேர உரையாடலின் பின்னர் 10.45 அல்லது 11 மணிக்கே சபைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இதனால் உறுப்பினர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய நேரங்களில் கூட்டத்தை ஆரம்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார். (வ-7-14)

## சத்துணவு திட்டத்துக்கு நிதி போதாது; தர்மசங்கடமான நிலையில் அதிபர்கள்

*நிலைமையை விவரித்து கல்வி அமைச்சருக்கு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் கடிதம்*

வலி.தென்மேற்கு, மார்ச் 1

பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டத்துக்கு வழங்கப்பட்டு வரும் நிதி போதுமானதாக இல்லை. அதனால் மாணவர்கள் மட்டுமல்ல அதிபர்களும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். செயற்படுத்த முடியாத திட்டங்களை அதிபர்கள் தலையில் சுமத்தி அவர்களையும் தர்மசங்கடத்துக்குள் ஆழ்த்துவது முறையற்றதாகும். எனவே இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை பிரதேசங்களிலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக பெற்றோர் மூலம் மேற்கொள்வது பொருத்தமாக இருக்குமெனக் கருதுகிறேன். இது குறித்து உரியநடவடிக்கை எடுக்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல் என்னும் தலைப்பில் பிரதேச சபை தவிசாளர், கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன வுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

மாணவர்களுக்கு ஒரு கோப்பை பால் வழங்கல் மற்றும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கல், முட்டை வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ஒரு கோப்பை பால் வழங்கலுக்கான கொடுப்பனவு, சத்துணவுத் திட்டத்துக்கான மரக்கறிக் கொடுப்பனவு மற்றும் முட்டைக்கான கொடுப்பனவு கடந்த ஜூலை மாதத்தின் பின் எமது பகுதி பாடசாலைகளுக்கு வழங்கப் படவில்லை என பாடசாலை சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். சத்துணவுத் திட்டத்துக்கான அரிசி உள்ளிட்ட பொருள்கள் உலக உணவுத் திட்டத்தின் மூலம் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்ற நிலையில் அதற்கான மரக்கறி வகைகள் மற்றும் முட்டைக்கான கொடுப்பனவு அரசால் வழங்கப்பட்டு வந்தது. ஆயினும் கடந்த சில காலமாக இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் இந்தச் சத்துணவுத் திட்டத்தை வழங்கும் பாடசாலை அதிபர்களும் சத்துணவைப் பெறும் மாணவர்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒரு மாணவருக்கு சத்துணவுத் திட்டத்தின் கீழான உணவு வழங்குவதற்கு ரூபா 2.50 மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

இந்த ஒதுக்கீட்டிலேயே அம் மாணவருக்கான மரக்கறி அது சமைப்பதற்குரிய தூள், உப்பு மற்றும் புளி என்பவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இதற்கு மேலாக சமைப்பதற்குரிய விறகு பெற்றுக்கொள்வதற்கு எதுவித கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை.

இவ்விறகை பெற்றோரிடம் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலாக சமைப்பதற்கு பெற்றோரை பயன்படுத்த வேண்டும். இந்த நிலையில் அதிபர் காலை 7.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளித்ததாலேயே பாடசாலையின் ஆரம்ப கருமங்களை ஆற்ற முடியும். இந்த நிலையில் குறிப்பிட்ட சத்துணவுத் திட்டம் தொடர்பில் அதிபரே கொள்வனவுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் ஒரு மாணவனுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூபா 2.50 இல் சராசரியாக 100 மாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒன்றுக்கு ரூபா 250 இற்கு மதிய உணவுக்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அதிபர்கள் பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதேவேளை பெற்றோரை சமைப்பதற்கும் விறகு பெறுவதற்கும் பயன்படுத்த கொள்ளமுடியுமா, செயற்படுத்த முடியாத திட்டங்களை அதிபர்கள் தலையில் சுமத்தி அவர்களை தர்மசங்கடத்தினுள் ஆழ்த்துவது முறையற்றதாகும். இத்திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பை பிரதேசங்களிலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக பெற்றோர் மூலம் இத்திட்டத்தைச் செயற்படுத்துவது பொருத்தமானது என கருதுகின்றேன். இத்திட்டத்தினை பாடசாலைகளில் செயற்படுத்துவதில் பெரும் இடர்பாடுகள் உள்ளன என்பதை இந்நாட்டின் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதேவேளை தற்போது பால் மற்றும் முட்டை என்பன மாணவர்களுக்கு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இந்நிலையில் இதனை சத்துணவு திட்டம் என குறிப்பிடுவது பொருத்தமற்றதாகவே உள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும் - என்றுள்ளது.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 1

இரு இடங்களில் மோட்டார் சைக்கிள்களும் சைக்கிள்களும் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐயாத்துரை மனோரஞ்சன் (வயது -52) என்பவரும் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த கச்சாய் தெற்கைச் சேர்ந்த கந்தையா மனோகரன் (வயது-49) என்பவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் (ஒ-9)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பால் சமூக விரோத செயற்பாடுகள்

*நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தல்*

வலி.தென்மேற்கு, மார்ச் 1

வலி.மேற்கு பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் சமூக விரோத நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவை அறிவிக்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மக்களின் நலன் கருதி கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் யாழ்ப்பாணம் அரச அதிபரைக் கோரியுள்ளார்.

'சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி' என்ற தலைப்பில் பிரதேச சபை தவிசாளர் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதாக அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டு உள்ளனர். மேற்படி விடயம் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் பலருக்கும் அறியத்தந்தும் இதுவரை பொருத்தமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பகுதி சனத்தொகை அதிகமாக உள்ள பகுதியாகும். இதே வேளை தொடர்ச்சியாக இந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வரும் நிலை யில் சமூக விரோத நடவடிக்கைகளும் இடம்பெற வாய்ப் புண்டு. எனவே மேற்படி விடயம் தொடர்பில் எமது பிரதேச மக்களது நலனைக் கருத்தில் கொண்டு உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு மக்களது நல்வாழ்வுக்கு உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன் -என்றுள்ளது.

(ஒ-115)

## கழிவு வாய்க்காலுக்கு அருகில் பழங்கள் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 1



*கழிவு வாய்க்காலுக்கு அருகில் அமைந்திருக்கும் பழக்கடை*

யாழ்ப்பாணம் அரச பஸ் நிலையத்தின் பிரதான காரியாலயம் அமைந்துள்ள பகுதியின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள கழிப்பறைத் தொகுதியின் ஓரமாக அமைந்துள்ள திறந்த நிலையில் உள்ள கழிவு நீர் வாய்க்காலின் அருகில் பழ வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று இயங்குகின்றது. கழிவு நீர் வழிந்தோடும் நிலையில் அதனூடாக எழும் துர்நாற்றம் மூலம் கிருமித்தொற்று ஏற்படும் இடத்தில் குறித்த பழக் கடை இயங்குகின்றது. அங்கு விற்பனை செய்யப்படும் பழங்கள் மீது தூசிகள் படிந்து தொற்று நோய் கிருமிகளும் அவற்றை ஆக்கிரமிக்கும் நிலை காணப்படுகிறது.

இத்தகைய பழங்களை பெற்றோர் வாங்கித் தமது பிள்ளைகளுக்கு அவ்விடத்தி லேயே சாப்பிடக் கொடுக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதன் மூலம் பெற்றோர் தாம் அறியாமலேயே பிள்ளைகளுக்கு நோயைப் பரப்புவதற்கு காரணகர்த்தாக்களாக உள்ளனர். இது தொடர்பில் பிரதேச சுகாதாரப் பகுதியினர், யாழ்.மாநகர சபை நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்து இதுபோன்ற பழ விற்பனைக் கடைகளை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புத்திஜீவி கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரையான தனியார் பயணிகள் சேவை குறித்த பகுதியில் இருந்து செயற்படுகின்றதுடன் இந்தப் பகுதியூடாகவே பயணிகள் பஸ் நிலையப் பகுதிக்குள் செல்வதற்கும், வெளியேறுவதற்கும் பிரதான வழியாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

## அபராதம்

தென்மராட்சி, மார்ச் 1

ஆவணங்கள் எதுவுமின்றியும் மதுபோதையுடனும் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்று முன்தினம் 17 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வாகனம் செலுத்துவதற்குரிய சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி, வாகனவரி ஆகியவை இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக இந்த நபருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குற்றங்களுக்காக 17 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் சைக்கிள் திருட்டு

தென்மராட்சி,மார்ச் 1

சிவராத்திரிப் பூசைக்காக ஆலயத்துக்கு சென்ற பாடசாலை மாணவனின் புதிய சைக்கிள் பூட்டு உடைக்கப்பட்டு திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு தனது தாயாருடன் சென்றிருந்தார். ஆலய முன்றிலில் சைக்கிளை நிறுத்திப் பூட்டியிருந்தார்.

வழிபாட்டை முடித்துக் கொண்டு வந்து பார்த்தபோது சைக்கிள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் வசதி குறைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கல்வி அபிவிருத்தி நிதியை இந்த மாணவன் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## ஆய்வுகூட உத்தியோகத்தரை நிரந்தரமாக நியமிக்குக

*சாவகச்சேரி மருத்துவமனைக்கு*

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நிரந்தர ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரொருவரை நியமிக்குமாறு நோயாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். சாவகச்சேரி மருத்துவமனையில் பூநகரி, பளை, வடமராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வெளிநோயாளர் பிரிவிலும், விடுதியிலும் தங்கிச் சிகிச்சை பெறவருகின்றனர். மாதாந்தம் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவிலும் 500 இற்கும் மேற்பட்டோர் விடுதிகளிலும் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அங்குள்ள ஆய்வு கூடத்துக்கு நிரந்தர உத்தியோகத்தர் இல்லாததால் பருத்தித்துறை மருத்துவமனையிலிருந்து வரும் உத்தியோகத்தர் வார மொன்றில் மூன்று தினங்களுக்கும் நடமாடும் ஆய்வு கூட சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் வாரத்தில் இரு நாள்களும் நோயாளர்களுக்கு சேவையாற்றி வந்தனர்.

கடந்த 15 தினங்களாக பருத்தித்துறை மருத்துவமனை உத்தியோகத்தர் சுகவீனம் காரணமாக வருகை தராததால் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் தனியார் ஆய்வு கூடங்களில் தமது பரிசோதனை அறிக்கைக்காக பணம்செலுத்தவேண்டியுள்ளது. தனியார் ஆய்வுகூடங்களில் பணம் செலுத்தி பரிசோதனை செய்ய முடியாதவர்கள் புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இயங்கும் ஆய்வுகூடத்தில் பரிசோதனை மேற்கொள்ள நிரம்பி வழிகின்றனர்.

குறிப்பிட்ட அளவு பரிசோதனை மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டபோதிலும் இந்த இரு தினங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சிரமம் பாராது தனது வேலை நேரம் முடியும் வரை பணியாற்றுகின்றனர். மருத்துவமனையில் அனைத்துப் பிரிவுகளும் சிறப்பாகச் செயற்பட்டு மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெறும் வேளையில் நிரந்தர ஆய்வுகூட உத்தியோகத்தர் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. இதனால் மருத்துவமனைக்கு நிரந்தர ஆய்வுகூட உத்தியோகத்தரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நோயாளர்கள் கேட்டுள்ளனர். (வ-9)

# ராகுலை விடவும் மோடிக்கே ஆதரவு

## அமெரிக்க நிறுவனத்தின் கருத்துக் கணிப்பு கூறுகின்றது

நியூயோர்க், மார்ச் 1

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியை விடவும் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்குத்தான் ஆதரவு அதிகமாக உள்ளது என்று தெரிவித்துள்ளது அமெரிக்காவைச் சேர்ந் 'பியூ' என்று நிறுவனம். தாம் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவுகளின்படியே இவ்வாறு தெரிவித்துள்ளது அந்த நிறுவனம்.

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் 2 ஆயிரத்து 464 வாக்காளர்களைத் தெரிந்தெடுத்து இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளது அந்த நிறுவனம். கருத்துக் கணிப்பின் முடிவுகளின்படி,

பா.ஜ.கவுக்கு 60 சதவீத வாக்காளர்களும், காங்கிரஸ் கட்சிக்கு 20 சதவீத வாக்காளர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். மத்திய அரசில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி அமைவதை 10 பேரில் 6 பேர் விரும்புகிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்று 10 பேரில் 2 பேர் மட்டுமே விரும்புகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் பரப்புரைகளை முன்னெடுத்துச் செல்லும் அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியை விடவும் பா.ஜ.க. பிரதமர் பதவி வேட்பாளர் நரேந்திர மோடிக்கே அதிக வாக்காளர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். கிராமப் புறங்களில் 64 சதவீத வாக் காளர்களும், நகரங்களில் 60 சதவீத வாக்காளர்களும் பா.ஜ. கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். (ற)

## பா.ஜ.க. கூட்டணியில் லோக் ஜனசக்தி

புதுடில்லி, மார்ச் 1

பாரதிய ஜனதாக் கூட்டணியில் ராம்விலாஸ் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி இணைந்துள்ளது.

வாஜ்பாய் பிரதமராகப் பதவி வகித்தபோது லோக் ஜனசக்தி கட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றிருந்தது. அதன்பின்னர் குஜராத் கலவரத்தைத் தொடர்ந்து கூட்டணியிலிருந்து விலகிய அக்கட்சி, 2004 ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகித்தது.

இந்தநிலையில் தற்போது மீண்டும் பாரதிய ஜனதாக் கூட்டணியில் ராம்விலாஸ் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி இணைந்துள்ளது. (ற)



மகாராஷ்டிர மாநிலம் ரைகாட் மாவட்டத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். 20க்கும் அதிகமானவர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகின்றன. தற்போது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், விபத்துக் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## தமிழகத்தில் களமிறங்கும் ஆம் ஆத்மி

சென்னை, மார்ச் 1

நாடாளுமன்றத் தேர்தலில் தமது கட்சி சார்பாக 15 வேட்பாளர்களைத் தமிழகத்தில் நிறுத்த முடிவு செய்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

கோவையில் செய்தியாளர்களைச் சந்தித்த அந்தக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் ஷாசியா இல்மி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "தமிழகத்தில் ஆம் ஆத்மி கட்சி சார்பாக 15 வேட்பாளர்கள் களமிறக்கப்படுவார்கள். வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படும். முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கு எதிராக ஆம் ஆத்மி வேட்பாளர் ஒருவரை நிறுத்தும். அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் ஆம்ஆத்மிகட்சியுடன்இணைந்து தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார். அது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, மார்ச் 1

ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் இருந்து தெலுங்கானாவைப் பிரித்து புதிய மாநிலம் உருவாக்குவதற்கான சட்டமூலத்துக்கு இந்திய அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி தனது பதவியிலில் இருந்து விலகியிருந்தார்.

அதனையடுத்து அந்த மாநில ஆளுநர் அங்கு ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துமாறு மத்திய அமைச்சரவைக்கு பரிந்துரை வழங்கியிருந்தார். அதனை ஆராய்ந்த மத்திய அமைச்சரவை ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலை நேற்று வழங்கியது. அதே வேளை தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சீமாந்திரா பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (ற)

## மன்னிப்புக் கேட்கும் தைரியம் பாரதிய ஜனதாவுக்கு இல்லை

### பீகார் முதலமைச்சர் சாடுகின்றார்

பாட்னா, மார்ச் 1

குஜராத் கலவரம் தொடர்பாக முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்பதற்கு பா.ஜ.கவுக்கு தைரியம் இல்லை என்று சாடியுள்ளார் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார்.

அண்மையில் "கடந்த காலங்களில் ஏதாவது தவறுகள் நேர்ந்திருந்தால் முஸ்லிம் மக்கள் எங்களை மன்னிக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார் பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே நிதிஷ் குமார் இவ்வாறு சாடியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மன்னிப்புக் கேட்பதற்கு ஒருவருக்கு தைரியம் என்பது மிகவும் அவசியமாகும். ஆனால் அந்தத் தகுதி பா.ஜ.கவுக்கு முற்றிலும் கிடையாது. அவர்களின் இந்தக் கோரிக்கையை மக்கள் கண்டிப்பாக நிராகரிக்க வேண்டும். கருத்துக் கணிப்புகள் அனைத்தும் மக்களை ஏமாற்றுவதற்காக பணக்காரர்கள் விளையாடும் விளையாட்டு. கருத்துக் கணிப்புகள் அனைத்தும் மோடிக்கே சாதகமாக இருக்கும்போது அவரால் ஏன் இதுவரை முதலமைச்சர் நாற்காலியில் உட்கார முடியவில்லை?"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தலைக்கும் வாலுக்குமான வித்தியாசமே மோடிக்கும் ராகுலுக்கும் இடையிலானது

### மத்திய பிரதேச முதலமைச்சர் ஆவேசம்

போபால், மார்ச் 1

பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் மோடிக்கும், காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் ராகுலுக்கும் உள்ள வித்தியாசத்தை கூற வேண்டுமானால், தலைக்கும் வாலுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தான் கூறவேண்டும் என்று ஆவேசத்துடன் தெரிவித்துள்ளார் மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான்.

மிகவும் அமைதியானவர். அதிர்ந்து பேசாதவர் என்று பெயர் பெற்றவர் மத்திய பிரதேச மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான். அப்படிப்பட்டவரையே கொந்தளிக்க வைத்துள்ளதுள்ளது மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் அண்மையில் மோடி ஆண்மையற்றவர் என்று தெரிவித்திருந்த கருத்து. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் சிவராஜ் சிங் சவுகான்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"பா.ஜ.க. பிரதமர் வேட்பாளரும் குஜராத் முதல்வருமான நரேந்திர மோடி எங்கே? ராகுல் எங்கே?. மோடி மீசையில் உள்ள முடி போன்றவர். ராகுலோ வாலில் உள்ள முடி போன்றவர். மீசை ஒருவரின் கம்பீரத்தையும் நன்மதிப்பையும் தெரிவிப்பவை. அதுவே ஆண்களின் அடையாளம். வாலில் உள்ள முடி குறித்து நாம் கவலைப்படவேண்டியதில்லை. நரேந்திர மோடி நான்கு முறை குஜராத் முதல்வராக இருந்து மாநிலத்தைச் சிறப்பாக ஆட்சி செய்து வருகிறார். ஆனால் ராகுலோ குறைந்தபட்சம் ஒரு அமைச்சர் பதவியை ஏற்கக் கூடத் தயங்கி வருகிறார். அமைச்சர் பதவியைக்கூட ஏற்கத் துணிவு இல்லாத ராகுல், எப்படி பிரதமர் பதவியை அடைய தகுதியானவராவார்?" - என்று தெரிவித்துள்ளார். (ற)



வாரணாசி கங்கைக் கரையில் மகாசிவராத்திரி வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றன. அந்த வழிபாடுகளின்போது சிவனுக்கு அபிஷேகம் செய்து வழிபடும் மேற்கு நாட்டவர் ஒருவர்.

## ராகுலை திடீரென முத்தமிட்ட பெண்கள்; அசாம் பரப்புரைக் கூட்டத்தில் பரபரப்பு

கவுகாத்தி, மார்ச் 1

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் தேர்தல் பரப்புரைச் சுற்றுப் பயணம் செய்திருந்த ராகுல் காந்திக்குப் பெண்கள் திடீரென முத்தம் கொடுத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரான ராகுல்காந்தி அசாம் மாநிலத்துக்கு இருநாள் தேர்தல் பரப்புரைச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். சுற்றுப் பயணத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் கவுகாத்தி நகருக்கு பரப்புரை செய்வதற்குச் சென்றிருந்தார் அவர்.

அந்தப் பரப்புரைக் கூட்டத்தில் 600க்கும் அதிகமான பெண்கள் கலந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு மத்தியில் உரையாற்றிய ராகுல்காந்தி, "நாட்டின் வளர்ச்சியில் எல்லாத் துறைகளிலும் பெண்களின் பங்கு அதிகமாக வேண்டும். ஜனாதிபதி, பிரதமர், முதல்வர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை பெண்களுக்கு வழங்க காங்கிரஸ் எப்போதும் பாடுபட்டு வருகிறது" - என்று உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அவரைச் சூழ்ந்து கொண்ட பெண்கள் அவரிடம் கைகுலுக்க முண்டியடித்தனர். அவர்களில் ஒரு பெண் திடீரென ராகுலின் உச்சந் தலையில் முத்தமிட்டார். இன்னொரு இளம்பெண் ராகுலின் கன்னத்தில் முத்தமிட்டார். அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் ராகுலோ அமைதியாகப் புன்னகைத்த வண்ணம் இருந்தார். (ற)



கூட்டத்தில் இருந்த இளம்பெண் ஒருவர் திடீரென ராகுலின் கன்னத்தில் முத்தமிட்டார்.

# மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்

*சீனாவிடம் கோருகின்றது அமெரிக்கா*


காய் லோகே.

பீஜிங், மார்ச் 1

மனித உரிமைகள் தொடர்பில் சீனா மதிப்பளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் சீனாவுக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றிய காய் லோகே.

கடந்த இரு ஆண்டுகளாக சீனாவுக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றியவர் காய் லோகே. இவர் தற்போது தனது பணிகளை முடித்து நாடு திரும்பவுள்ளார். அதையடுத்து செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்பேதே சீனாவின் மனித உரிமைகள் செயற்பாடு குறித்துக் கவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சீனா தனது நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகின்றது. ஆனால் தனி மனித சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றை நசுக்குகின்றது. பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்று மனித உரிமைகளுக்கும் சீனா மதிப்பளிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டாண்டுகளாக லோகே மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவே அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே வர்த்தக உறவில் மேம்பாடு ஏற்பட்டது. (ற)


தாய்லாந்து தலைநகர் பாங்ஹொக்கில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 13 மாணவர்கள் மற்றும் இரு ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளனர். பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ், லொறியொன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் சிக்கிய 11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 30 பேரில் நால்வர் சிகிச்சை பயனின்றி மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர். மேலும் ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. மாணவர்கள் அனைவரும் 10 முதல் 14 வயதுடையவர்கள். விபத்துக்கான காரணம் இதுவ்ரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)


டோபி லேன்ஸர்

# முற்றிலும் அழிக்கப்பட்ட தென்சூடானின் நகரம்

நியூயோர்க், மார்ச் 1

தெற்கு சூடான் நகரமான மலகல் முற்றிலும் அழிக்கப்பட்டு மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது என்று கவலை வெளியிட்டுள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

இதுகுறித்துக் கூறிய ஐ.நாவின் மனிதாபிமான நடவடிக்கை ஒருங்கிணைப்பாளர் டோபி லேன்ஸர்,

"கடந்த வாரம் நடைபெற்ற புதிய உள்நாட்டுக் கலவரத்தால் அந்த நகரமே அழிக்கப்பட்டுவிட்டது. அந்த நகரத்திலிருந்த அனைத்தும் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டுள்ளன. வீதிகள் எங்கும் சடலங்கள் இறைந்து கிடக்கின்றன. வீடுகள், கடைகள் என எதுவும் தற்போது இல்லை. அங்குள்ள மருத்துவமனையிலிருந்த நோயாளிகள் சிகிச்சைப் படுக்கையிலேயே சுடப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

தென் சூடானில் ஐ.நாவின் பாதுகாப்புத் தளங்களில் தற்போது சுமார் 75 ஆயிரம் மக்களுக்கு தற்காலிக பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. அங்கு கடந்த டிசெம்பர் மாதம் முதல் நடந்து வரும் உள்நாட்டு கலவரங்களினால் 9 லட்சம் மக்கள் இதுவரை இடம்பெயர்ந்துள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# ஆயுதக்குழுவின் வசம் உக்ரைன் விமானத்தளம்

*ரஷ்யாவின் கைவரிசை எனச் சந்தேகம்*



விமான நிலையத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள இராணுவ உடை தரித்த ஆயுததாரிகள்

உக்ரைனின் க்ரைமியா கிம் கெரோபோல்விமானத்தளத்தை இராணுவ உடை தரித்த ஆயுதக் குழு ஒன்று தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விமானத்தளம் ரஷ்ய பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள விமானத் தளமாகும்.

இனந்தெரியாத இராணுவ உடை தரித்த ஆயுததாரிகள் விமானத்தளத்தின் கட்டுப்பாட்டுக் கோபுரத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். எனினும் அவர்கள் இதுவரை கோரிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை. இதுகுறித்து உக்ரைனின் பாதுகாப்புத்துறை எதுவித உத்தியோபூர்வ அறிவித்தல்களையும் விடுக்கவில்லை.

அதேவேளை, குறித்த மாகாணத்தில் உள்ள சட்டசபையை நேற்றுமுன்தினம் ஆயுதம் ஏந்திய குழு ஒன்று கைப்பற்றியது. அத்துடன் அந்தக் கட்டடத்தில் ரஷ்யக் கொடியையும் ஏற்றியிருந்தது. அதனால் இந்தச் சம்பவங்கள் ரஷ்ய அரசின் ஆதரவுடன் நடத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் சந்தேகங்கள் கிளம்பியுள்ளன.

அதேவேளை, ரஷ்யாவுக்கான எல்லையை அவர்கள் கடந்தால் அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று உக்ரைன் எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன. அதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்றது. (ற)

## பனிப்பொழிவால் இடிந்து வீழ்ந்தது கூரை

நியூயோர்க், மார்ச் 1

அமெரிக்காவின் மிக்சிகன் மாகாணத்தில் உள்ள வணிக வளாகத்தின் கூரை இடிந்து வீழ்ந்துள்ளது. அங்கு நிலவும் கடுமையான பனிப்பொழிவு காரணமாகவே கூரை இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதையடுத்து குறித்த வணிக வளாகத்தின் ஏனைய பகுதிகளும் மூடப்பட்டு மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். (ற)

## தாய்லாந்து பிரதமரின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்

பாங்ஹொக், மார்ச் 1

தாய்லாந்து பிரதமரின் ஆதரவாளர்கள் அந்நாட்டின் ஊழல் தடுப்பு அமைப்பு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளிடமிருந்து அதிக விலைக்கு நெல் வாங்கும் திட்டத்தில் நடந்த முறைகேடு விவாகாரத்தில் யிங்லக் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர் நிரபராதி, அவருக்கு நீதி வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ற)

# மிகப்பழைமையான தேவாலயம் ஜேர்மனியில் கண்டுபிடிப்பு



பெர்லின், மார்ச் 1

ஜேர்மனியின் மெயின்ஸ் நகரில் மிகப் பழைமையான தேவாலயம் ஒன்று தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேவாலயம் சார்லி மாகினி என்ற மன்னர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது, 1000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்று தொல்லியல் ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஹெடன்பேர்கின் கலை வரலாறு நிறுவக பேராசிரியர் மத்தியஸ் அன்டர்மான்,


"தேவாலயத்தின் அடித்தளம் முதல் கூரை வரை 7 ஆம் நூற்றாண்டில்வாழ்ந்த காரோலிங்கியன் வம்சத்தின் தடயங்கள் காணப்படுகின்றன" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ரொனால்ட் கோசிலின் என்ற மற்றொரு தொல்லியல் ஆய்வாளர் கூறுகையில், "மெயின்ஸ் நகரில் ரோமானியர்கள் ஆட்சி புரிந்த காலத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் இருந்திருக்கின்றனர். ஆராய்ச்சியின் போது புதைந்திருந்த 2 மனித எலும்பு கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

மோசல் நதியோரம் ரோமானியர் காலத்தின்போது கட்டப்பட்டு பழைமை மிக்கது என்று கருதப்படும் கதீட்ரல் தேவாலயத்திற்கு அடுத்தபடியாக மெயின்ஸ் நகர கதீட்ரல் தேவாலயம் பழைமை மிக்கதாகக் கருதப்படுகின்றது. (ற)

# மழையைக் கண்காணிக்க புதிய செயற்கைக்கோள்

*விண்ணுக்குச் செலுத்தியது ஜப்பான்*


தனேகஷீமாவில் இருந்து செலுத்தப்படும் செயற்கைக் கோள்

டோக்கியோ, மார்ச் 1

சர்வதேச நாடுகளில் ஏற்படும் மழைவீழ்ச்சியைக் கண்காணிப்பதற்காக புதிய செயற்கைக் கோள் ஒன்றை விண்ணுக்குச்செலுத்தியுள்ளது ஜப்பான்.

இந்தச் செயற்கைக் கோள் மூலம் மழைவீழ்ச்சியை மட்டுமல்லாதுபுயல்போன்ற இயற்கையின் மாற்றங்களையும் கண்காணித்து எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று ஜப்பான் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த செயற்கைக் கோள் அமெரிக்காவின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்கைக் கோள் ஜப்பானின் கியூஷு தீவில் உள்ள தனேகஷீமா மையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் விண்ணுக்குச் செலுத்தப்பட்டது.

இந்தச் செயற்கைக் கோள் ஏனைய நாடுகளின் செயற்கைக் கோள்களுடன் இணைந்து செயற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ற)

## இஸ்ரேல் இராணுவம் மீது குற்றச்சாட்டு

லண்டன், மார்ச் 1

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் நிகழ்த்தும் கொலைகள் போர்க் குற்றத்துக்கு ஈடானது என சர்வதேச பொது மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

மேற்குக் கரைப் பகுதியில் கடந்த இரண்டுஆண்டுகளில் 45 பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் ராணுவம் கொலை செய்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ற)

# இரண்டாம் வார வெற்றியாளர்கள் (23.02.2014)

உதயன் சூரியகாந்தி தரும் பரிசு மழையில் நனையுங்கள்

வெற்றி நிச்சயம்

வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

வாரம் 50 பரிசுகள் 10 வாரங்களுக்கு

கொண்டாட்டம் குதூகலம்

## ரூ.4500 பெறுமதியான 3 பரிசு கூப்பன்கள்

Kiruba Learners Driving School

1. ஜனனி சந்திரராசா
கூவில், புலோலி மேற்கு.
2. செல்வி ராம் சுடரொளி
ஆற்றுப்புலவு, கைவேலி, புதுக்குடியிருப்பு.
3. அமிர்தலிங்கம் கவிச்செல்வி
04, வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

## ரூ.1000 பெறுமதியான 10 பரிசு கூப்பன்கள்

லலிதா ஜுவலரி

Rasi Collections
மின்சார நிலைய வீதி, யாழ்.

1. திருமதி அன்ரனி றூபதாஸ்
மாரீசன்கூடல், இளவாலை.
2. கௌரி சச்சிதானந்தம்
வைத்தியர் வளவு, யானைக்குட்டி ஒழுங்கை, தெல்லிப்பழை.
3. மாரிமுத்து பரமேஸ்வரன்
1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
4. சியாம்சுந்தர் நிவேதா
தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.
5. சச்சிதானந்தமூர்த்தி கஜன்
பழைய கொலனி, மாங்குளம்.
6. நிரோஷா கிறிஸ்ரியோசவ்
இல. 137/03, மில் வீதி, உக்கிளாங்குளம், வவுனியா.
7. எம்.ஆரணி
பிறதேர்ன் பொலோசிப், இல.360, கொடிகாமம் வீதி, கரவெட்டி.
8. எறின் டினுஜா உமாகாந்
தரம்-3, யா/திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலை.
9. டிலக்சனா உமாகாந்
தரம்-5, யா/ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
10. டிலக்ஷிகா உமாகாந்
தரம்-9, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## ரூ.500 பெறுமதியான 22 பரிசு கூப்பன்கள்

செந்தூர் குமரன் களஞ்சியம் பருத்தித்துறை வீதி
லக்கி பான்ஸி ஹவுஸ் இருபாலைச் சந்தி, கோப்பாய்
முருகன் ஸ்ரோர்ஸ் சிறுப்பிட்டி மத்தி, கோப்பாய்.
உதயன்
கோகில்ஸ் பேபி நீட்ஸ் பிரதான வீதி, நெல்லியடி.
Green Grass யாழ்ப்பாணம்.

1. தியானந்தராசா கஜேந்திரா
நெல்லண்டை, தும்பளை
2. நிலாஜினி இசையநீலன்
தம்பாட்டி, நாரந்தனை வடமேற்கு.
3. கந்தசாமித்துரை சுந்தரேஸ்வரன்
இல.109, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை.
4. சின்னத்தம்பி ஆறுமுகம்-
கலைவாணி பவனம், கரணவாய் மத்தி.
5. வாகீசன் கோமளா
முத்துமாரியம்மன் கோயிலடி, அல்வாய் வடக்கு.
6. மகிந்தன் பிறையாளன்
இல.581, யூனிற் 06, இராமநாதபுரம்.
7. ராம் தயாளினி
2 ஆம் வட்டாரம், ஆற்றுப்புலவு (கைவேலி)
8. தர்மலிங்கம் தர்மசந்திரன்
கல்வீரன்குளம், வவுனியா.
9. கிசாந்தன் ஜன்சிகா
புஸ்பாராணி ஸ்ரோர்ஸ், உப்புக்குளம், மன்னார்.
10. கணேசமூர்த்தி ஆதவன்
காசிப்பிள்ளை கறாஜ், முல்லை வீதி, மாங்குளம்.
11. பரமேஸ்வரன் ஜஸ்விதா
1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
12. ஹம்சினி அமலநாதன்
கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்,
13. சூசைப்பிள்ளை யோசெவ் மரியதாசன்
அலுக்கை, அளவெட்டி கிழக்கு,
14. திருமதி கலாவதி குலநாயகம்
வட்டு.வடக்கு, சித்தன்கேணி.
15. சிதம்பரம் அன்னலிங்கம்
நெல்லியான் வீதி, கல்விளான், சுழிபுரம்,
16.துரைராசா பிரபாகரன்-தூபாலகம், சுன்னாகம்.
17. நவரத்தினம் துவாரகன்
முருகன் கோயிலடி, புலோலி வடமேற்கு.
18. லாவண்யா சிவராமன்
'சிவபதி', இல. 12/1, 2 ஆம் ஒழுங்கை, ஓயார்சின்னகுளம், வவுனியா
19. லோ.கிருஷ்ணதாசன்
ஏழாலை கிழக்கு, ஏழாலை.
20. கேதாரலிங்கம் பிரதீபன்-இந்திரம்மன் கோயிலடி, அல்லைப்பதி, கரவெட்டி.
21. பிரசாந்தி வெற்றிவேலு-
எல்லை ஒழுங்கை, தும்பளை.
22.கிருஷ்ணமூர்த்தி தவநேசன்-
ஐயனார் வீதி,கல்வயல், சாவகச்சேரி

## ரூ.200 பெறுமதியான 15 பரிசு கூப்பன்கள்

பொதிகை மல்ரி சென்ரர் புதுக்குடியிருப்பு
அறிவொளி புத்தகசாலை முல்லைத்தீவு
தாயன்பு புத்தகசாலை கிளிநொச்சி

1.சிதம்பரநாதன் தியாகேஸ்வரி
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.
2.ஜெயந்தன் குபிதா
அம்பன், குடத்தனை.
3.தருமலிங்கம் சரவணபவன்
தேவமாதா கோயில் ஒழுங்கை, தும்பளை.
4.விநாயகமூர்த்தி நிரேஷன்
பன்னயம்பதி புலோலி வடக்கு.
5.பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம்
கரணவாய் கரவெட்டி.
6.ஜீத்தா கோவிந்தராஜா
இந்திரம்மன் கோயிலடி அல்லையம்பதி.
7.வெற்றிவேலு எழிலரசி
புலோலி வடமேற்கு,தும்பசிட்டி,
8. ஜெயதிலகம் சாமுவேல் தேவதயாளன்
சாமியன் அரசடி, கரவெட்டி
9. நந்தகுமார் பிரியங்கன்-
ஆத்தியடி ஒழுங்கை, கச்சாய் வீதி,
10. தவலிங்கம் லினோஜ்-
அளவெட்டி மேற்கு, தும்பளை,
11. பா.யோசேப்- கூவில் புலோலி தெற்கு, புலோலி
12. வினோதன் சுகந்தினி-
பாலிநகர், வவுனிக்குளம்
13. அப்துல் கபூர் முகம்மது பஸீர்-
324, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
14.சிங்காரவடிவேலு விநாயகமுதலி
நாகலிங்கமுதலியார் வீதி, பருத்தித்துறை.
15. முகம்மது பாரூக் முகம்மது இர்ஷாத்
குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்.

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

# பொதுக் கட்டடங்கள் பொலிஸாரின் பிடியில்

## விடுவிக்கக் கோருகின்றனர் கனகராயன்குளம் மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கனகராயன்குளம் கமநல சேவை நிலையம், பொது நோக்கு மண்டபம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் கட்டடங்களில் நிலை கொண்டுள்ள பொலிஸார் அவற்றைக் கையகப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கனகராயன் குளம் பொது நோக்கு மண்டபம் அமைந்துள்ள காணியில் தற்போது பொலிஸார் நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

கனகராயன்குளம் பெரிய குளம் பகுதியில் பொலிஸ் நிலையத்துக்கென காணி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் பொலிஸார் அங்கு தமது அலுவலகத்தை அமைக்காது பொதுக் கட்டடங்களில் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஏற்கெனவே ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜயதுங்க, குறித்த பொது இடங்களில் இருந்து பொலிஸாரை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் அப்பகுதி மக்களுக்கு உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் பொலிஸார் குறித்த கட்டடங்களைவிட்டு வெளியேறுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளமை சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


தற்போது கமநல சேவை நிலையம், கனகராயன் குளத்துக்கு அருகில் தற்காலிக இடம் ஒன்றில் நெருக்கடிகளுடன் இயங்கி வருகிறது. அத்துடன் பொது நோக்கு மண்டபமும் பொலிஸாரிடம் இருப்பதால் பொது நிகழ்வுகளை நடத்துவதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த சேவை நிலையங்களில் இருந்து பொலிஸாரை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நெடுங்கேணி பிரதேச செயலரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தபோதும், அரச அதிபர் ஊடாகவே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் பதிலளித்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த காணிகளை பொலிஸ் அதிகாரத்துக்கு உட்படுத்தும் வகையிலான நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கட்டடங்களை விடுதலைப்புலிகள் போருக்கு முன்னர் பயன்படுத்தியதாக அரச அதிகாரிகளைக் கொண்டு ஆவணங்களைத் தயாரிக்கும் முயற்சியிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறிப்பிட்ட பொதுக் கட்டடங்களில் இருந்து பொலிஸார் விலகவில்லையாயின் தாம் அதற்கு எதிராக போராட்டம் நடத்தப் போவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)



நூல் வெளியீட்டின் போது

# கண்ணிவெடி குறித்த கைநூல் வெளியீடு

கிளிநொச்சி, மார்ச் 1

கண்ணிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கும் நூல் வெளியீட்டு நிகழ்வும் கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.


வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கண்ணிவெடி அபாயத் திட்டப் பணிப்பாளர் இசற். நாஜீயின், யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.ரவிநிரன் உட்பட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கண்ணிவெடி அபாயம் தொடர்பில் வட மாகாண கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட நூலின் மீள் பதிப்பும் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, மன்னார், வவுனியா தெற்கு, வடக்கு வலயங்களைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-18)

# பெண் நோயியல் விடுதி திறப்பு

வவுனியா, மார்ச் 1

வவுனியா பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவுக்கான விடுதி கடந்த 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பொறுப்பதிகாரி கே.அகிலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் மற்றும் பெண் நோயியல் வைத்திய நிபுணர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-402)



சட்ட விரோதமாக காட்டு மரங்களைத் தறித்து அரிந்து டிராக்டரில் ஏற்றிச் சென்றவர்களை அக்கராயன் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். (ஐ-18)

# மாந்தை கிழக்குப் பகுதியில் 'நெல்சிப்' திட்டம் வெற்றி

கிளிநொச்சி, மார்ச் 1

முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் கடந்த வருடம் நெல்சிப் திட்டத்தின் கீழ் 62 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

நட்டாங்கண்டல் பொதுச் சந்தை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நெல்சிப் திட்டத்தின் கீழ் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 102 மில்லியன் ரூபா மாந்தை கிழக்கிற்கு ஒதுக்கப்பட்டது. அதில் கடந்த வருடத்தில் 62 மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. நட்டாங்கண்டல் பொது சந்தை 9.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்படுகிறது.

எஞ்சிய வேலைத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ-55)

# மழை ஒழுக்கில் அக்கராயன் மகா வித்தியாலய கட்டடங்கள்

கிளிநொச்சி, மார்ச்.1

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தின் வகுப்பறைகள் சீரின்மையால் மழை பெய்யும் வேளைகளில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட முடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து கடந்த ஞாயிற்றுக் கிழமை கல்வியமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் 800 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். போர் காரணமாகக் கட்டடங்கள் சேதம் அடைந்து, அவை தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளன. எனினும் அதனூடாக மழை நீர் உட்புகுவதாகவும் இதனால் மாணவர்கள் நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1 ஏபி பாடசாலையாக அக்கராயன் மகா வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்ட போதிலும், அடிப்படை வசதிகள் சீரின்மையால் பெரும் இடர்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-18)

# வவுனியா வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு கோரிக்கை



வவுனியா மருத்துவமனை

வவுனியா, மார்ச் 1

வவுனியா பொது வைத்தியசாலையை மாகாண வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பொறுப்பதிகாரி கே. அகிலேந்திரன், வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கத்திடம் கோரிக்கை மனு ஒன்றைக் கையளித்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையை மாகாண வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துவதன் மூலம் மக்களுக்கு அதிக சேவைகளை வழங்க முடியும் எனவும் குறிப்பாக மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் மேலதிக சிகிச்சைகளை வவுனியா வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண ரீதியான நிதி ஒதுக்கீட்டின் மூலம் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்து வைத்திய நிபுணர்களையும் வைத்தியர்களையும் உள்வாங்கி சேவைகளை துரிதப்படுத்த வசதியாக அமையும் எனவும் வவுனியா பொது வைத்தியசாலைத் தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ-402)

# கிளிநொச்சி மக்கள் சம்மதித்தால் யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நிறைவேற்றியது தீர்மானம்

கிளிநொச்சி, மார்ச் 1

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் தேவைகள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர், அந்த மாவட்ட விவசாயிகளது சம்மதத்துடன் இரணை மடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குடி தண்ணீரைக் கொண்டுசெல்லலாம் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த புதன்கிழமை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபைத் தலைவர் பொன்னாந்து டொமினிக் அன்ரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆளுந்தரப்பு உறுப்பினர் சு.சுரேன் இந்தப் பிரேரணையை முன்வைத்தார். அதில் யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் கொண்டுசெல்லப் படுவதாயின் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் சம்மதம் பெறப்படுவதோடு, அங்குள்ள விவசாயிகளது தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது. பிரேரணையை எதிரணி உறுப்பினர் ஏற்றுக் கொண்டு வழிமொழிந்தார். தொடர்ந்து பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

> பிரேரணையை எதிரணி உறுப்பினர் ஏற்றுக்கொண்டு வழிமொழிந்தார். தொடர்ந்து பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. அத்துடன் தமது சபை மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் போது சபைத் தலைவர், வடமாகாண முதலமைச்சர் ஆகியோரது படங்களைப் பொறித்து வேலைத் திட்டத்துக்கான விளம்பரப் பலகை நடுதல். வடமாகாண சபையின் தலைமை அலுவலகத்தை கொக்காவில் பகுதியில் அமைக்க நடவடிக்கை எடுத்தல், சபை உறுப்பினர்களது கருத்துக்களை உள்வாங்கி எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீர்மானங்களும் சபையில் நிறைவேற்றப்பட்டன. (ஐ-426)

## நாட்டின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

### அமைச்சர் சேகுதாவூத் தெரிவிப்பு

வாழைச்சேனை,மார்ச்1
இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவி வந்த இனப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.


பஷீர் சேகுதாவூத்

வாழைச்சேனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மை மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பதை அனைவரும் ஒத்துக் கொள்கின்றார்கள். இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் நோக்கிலேயே அரசு நாடாளுமன்ற தெரிவுக் குழுவை உருவாக்கி இருக்கின்றது.

நாடாளுமன்றதெரிவுக்குழு உருவாக்கப்பட்டுள்ள போதிலும் சிறுபான்மை இன மக்களுடைய பிரதானமான கட்சி யான தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன தெரிவுக்கு அதில் அங்கம் வகிக்கவில்லை. பல இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் அதில் உள்வாங் கப்படவில்லை.

இந்த நாடாளுமன்றக் குழு முறைமை மீள் பரிசீலனை செய்யப்பட்டு, புதிதாக தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கின்ற மாகாண தலைமைத்துவமாக இருக்கின்ற வடமாகாண சபையின் பிரதி நிதிகளும், மூவின மக்களும் சமமாக வாழ்கின்ற கிழக்கு மாகாண சபை பிரதி நிதிகளும் புதிதாக உள்வாங்கப்பட்டு பேச்சுக்கான களம் திறக்கப்பட வேண்டும். -என்றார்.(ச)

# கிழக்கில் தொடர்ந்து கொட்டுகிறது மழை

### நெல் அறுவடை ஸ்தம்பிதம்; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு


மட்டக்களப்பு,மார்ச்1
கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த மூன்று நாள்களாக தொடர்ந்து கடும் மழை பெய்து வருகின்றது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பெரும்போக நெல் அறுவடையும் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

ஆறுகளை அண்மித்துள்ள மற்றும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள நெல்வயல்கள் மழையால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் தமக்கு பெரும் நட்டம் ஏற்படலாம் என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளின் சில தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் பரவிச் செல்வதால் வாகனங்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே பயணிக்கின்றன. ஒரு சில இடங்களில் வெள்ளம் பரவிச் செல்வதால் சிறியரக வாகனங்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்போக நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேளையில் மழை பெய்து வருவதால் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். உரிய காலத்தில் அறுவடை செய்யத் தவறும் பட்சத்தில் நெற்கதிர்களுக்கு சேதம் ஏற்படலாம் என்று அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஏற்கனவே வெள்ளத்தினால் சேதமாயிருந்த இறக்காமம் குளத்தாவழி விவசாய மண் வீதி தற்போது பெய்து வரும் அடைமழையால் முற்றாக பாதிப்படைந்து போக்குவரத்து துண்டிக்கப்படலாம் என்று மக்கள் கூறுகின்றனர். (ச)


*அம்பாறை மாவட்டத்தில் தொடரும் அடைமழையால் அறுவடைக்குத் தயாராகவிருந்த வயல் நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. வயல் நிலங்களில் அறுவடை இயந்திரம் வெள்ளத்தில் புதையுண்டுள்ளதைக் காணலாம்.*


## மணிவிழா வாழ்த்து

01.03.2014இல் மணிவிழாக் காணும்
J/108, நல்லூர் தெற்கு கிராம உத்தியோகத்தர்
லயன் சீமாட்டி திருமதி இராகினி இராமலிங்கம்
அவர்களை வாழ்த்துகின்றோம்.




அன்பினால், அறிவினால், அரியபொதுப் பணியினால்
அமைந்திட்ட இல்லச் சிறப்பினால்
பண்பினால் பலருக்கும் உதவுகின்ற பரிவினால்
நட்பினால் எவரையும் நயந்திடும் குணத்தினால்
நல்லவர் வாழ்த்திடும் நன்மையால்
ஆசையால் அன்னையே! வாழ்த்துகின்றோம்.
சேவையால் சிறந்திட்ட கிராம உத்தியோகத்தர் எனும் பெயரை
பயனுறப் பெற்றதனால் சமூகத்தில் வாகைகள் பல சூடி
வருகின்ற உனை - நாடி
வாழ்ந்திடும் உள்ளங்கள் பலகோடி
வல்லான் ஆசியினால் வாழ்க்கையிலே வளம்பெருகி
வற்றாத நீரூற்றாய் வாழியவே

*வாழ்த்துவோர்: J/ 108, முருகன் சனசமூகநிலையம்,*
*J/ 108, கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் அபிவிருத்திச் சங்கம்,*
*மகளிர் விவகாரக்குழு.*

வாழ்த்து அனுசரணை: திரு. திருமதி சத்தியசீலன்,
ராஜா கிறீம்கவுஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(45047)(12.3.6)


## வீட்டைச் சேதப்படுத்திய காட்டு யானைக் கூட்டம்

### மக்கள் அல்லோலகல்லோலம்


*காட்டு யானைகளால் சேதப்படுத்தப்பட்ட வீடு.*

மட்டக்களப்பு,மார்ச்1
மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெல்லாவெளி கிராமத்தினுள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு புகுந்த காட்டுயானைக்கூட்டம் அந்தப் பகுதியைத் துவம்சம் செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு 4 யானைகள் கூட்டமாக இந்தக் கிராமத்தினுள் புகுந்ததால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டதாக கிராம வாசிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு கிராமத்துக்குள் புகுந்த யானைகள் பிரதேச செயலக வீதியில் உள்ள வீடு ஒன்றை முற்றாக உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன், அந்த வீட்டிலிருந்த சொத்துக்கும் சேதம் விளைவித்துள்ளன என்று வெல்லாவெளி கிராம சேவை உத்தியோகத்தர் க.இராகுலன் தெரிவித்தார்.

இந்த வீட்டில் உள்ளவர்கள் சிவராத்திரி பூசைக்கு சென்ற வேளையே யானைக் கூட்டம் வீட்டை சேதப்படுத்தியுள்ளன என்று அவர் கூறினார். (ச-32)

## பேடன் பவலின் பிறந்ததினத்தை முன்னிட்டு சைக்கிள் பவனி

மட்டக்களப்பு,மார்ச்1
சாரணிய இயக்கத்தின் ஸ்தாபகர் றொபட் பிவின்சன் ஸ்மித் பேடன் பவலின் 157 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சைக்கிள் பவனியில் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரி பாடசாலையின் சாரணிய இயக்க மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பவனி புனிதமிக்கல் கல்லூரியில் ஆரம்பமாகி கல்லடி பால மூடாக வந்தடைந்து மீண்டும் திருமலை வீதி வழியாகச் சென்று மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்துடன் நிறைவடைந்தது. (ச)


*சாரண மாணவர்களின் சைக்கிள் பவனி*

## கரைந்தன பாம்பு போன்ற உயிரினங்கள்

கிண்ணியா பிரதேசத்திலுள்ள வாவியொன்றிலிருந்து திடீரென அதிகளவில் திரண்டு வந்த பாம்பு போன்ற அரியவகையான உயிரினங்கள் தற் போது துண்டு துண்டாக உடைந்து கரைந்துள்ளன.

இந்தத் தகவலை கிண்ணியா வலயக் கல்வி அலுவலக ஆசிரிய வள நிலைய முகாமையாளர் ஏ.டபிள்யூ.முஜீப் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவை பாம்புகள் அல்ல. ஒரு வகையான அரிய உயிரினாங்களாகும். நீருள்ள நிலத்தில் வாழும் இந்த உயிரினங்களால் நீரில்லா நிலத்தில் வாழ முடியாது. நீரில்லா நிலத்துக்கு வந்தால் இந்த உயிரினங்கள் கரைந்துவிடும். அதனால் இந்த உயிரினங்கள் தற்போது கரைந்துள்ளன-என்றார்.

இதேவேளை, இவ்வாறு அரிய வகையான உயிரினங்கள் திரண்டு வந்ததால், இயற்கை இடர் நிகழ்வதற்கு அறிகுறி யாக இருக்கலாம் என்று பிரதேச வாசி கள் அஞ்சுகின்றனர்.

கடந்த சுனாமி இடர் ஏற்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் கிண்ணியாவின் கட்டையாறுபிரதேசஆற்றில்இவ் வகையான உயிரினங்கள்; திரண்டு வந்ததை பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச)

# நல்லாட்சி தொடர்பில் எவரும் பாடம் புகட்டத் தேவையில்லை

## சகல திறமைகளும் எம்மிடம் உள்ளன என்கிறார் கோத்தபாய

கொழும்பு,மார்ச்1

நல்லாட்சி செய்யும் திறமை எமக்கு உள்ளது. எனவே நல்லாட்சி தொடர்பில் எமக்கு எவரும் பாடம் புகட்டத் தேவை யில்லை. இவ்வாறு பாதுகாப்பு மற்றும்நகர அபிவிருத்தி அமைச் சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

**நல்லாட்சி ஏற்படுத்துவதற்கான உத விகளையோ அல்லது வழி காட் டல்களையோ இலங்கை எந்த ஒரு நாட்டிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை.**


குளியாப்பிட்டியில் இடம்பெற்று வரும் தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண் காட்சி வளாகத்தில் பொலிஸ் காட்சிக் கூடத்தில் அமைக்கப் பட்டுள்ள தானியங்கி கைவிரல் ரேகை அடையாள வலைய மைப்பை ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகவியலாளர்க ளுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறி னார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப் பவர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு முன்னர் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக அரசு ஏற்கனவே முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்கள் தொடர் பில் பார்க்க வேண்டும்.

அர்ப்பணிப்பு மூலம் சகலவற் றையும் சாதிக்க முடியும். சர்வ தேசபடையினரை, பொலிஸாரை விட எமது பொலிஸ் அதிகாரிக ளிடமும், புத்தி ஜீவிக ளிடமும் சுயமான திறமை உள்ளது.

எனவே, சகல விடயங்களுக் கும் நாங்கள் வெளிநாடுகளிடம் சென்று கையை நீட்டிக் கேட்கத் தேவையில்லை. நல்லாட்சிசெய் யும் திறமை எமக்கு உள் ளது. எனவே நல் லாட்சி தொடர்பில் எமக்கு எவ ரும் சொல்லித் தரத் தேவை யில்லை.

நல்லாட்சி ஏற்படுத்துவதற் கான உதவிகளையோ அல் லது வழி காட்டல்களையோ இலங்கை எந்த ஒரு நாட்டிட மிருந்தும் எதிர்பார்க்க வில்லை- என்றார். (ச)



குளியாப்பிட்டியில் இடம்பெற்று வரும் தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண் காட்சி வளாகத்தில் பொலிஸ் காட்சிக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி கைவிரல் ரேகை அடையாள வலையமைப்பை பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார். (ச)

## ஜனாதிபதியின் மருத்துவர் வாகனம் மீது துப்பாக்கி சூடு



*கோப்புப்படம்*

கொழும்பு,மார்ச் 1

ஜனாதிபதியின் மருத்துவர் எலியந்த வைற்றின் வாகனம் மீது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

எலியந்த வைற்றின் உத்தியோ கபூர்வ வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக் குதல் மிரிஹான பிரதேசத்தில் இடம்பெற்றுள் ளது.

மோட்டார் சைக்களில் சென்ற நபர்கள் வாகனத்தில் மீது துப் பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட போது மருத்துவர் காரில் பயணம் செய்யவில்லை. அவரது சாரதி மருத்துவரின் தாயாரது வீட் டுக்குப் பயணம் செய்து திரும் பிய போது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற் படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்ப வம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச)

## ஜனாதிபதித் தேர்தலை உடன் நடத்துங்கள்

### கோருவோம் என்கிறார் ரணில்

கொழும்பு,மார்ச்1

இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என கோரவுள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



*ரணில் விக்கிரமசிங்க*

வனாத்தமுல்ல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே அவர் இவ் வாறு கூறினார்.

தற்போதைய ஆட்சி யில் மாற்றத்தை ஏற்ப டுத்தும் நோக்கில் இந்தக் கோரிக்கை விடுக்கப் பட உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டைத் தொடர்ந்து ஜனாதி பதித் தேர்தலை நடத் துமாறு கோரி போராட் டங்கள் நடத்தப்படவுள் ளன என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலை வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## கண்காட்சியை பார்வையிட 19 இலட்சம் பேர் வருகை

கொழும்பு,மார்ச்1

குளியாப்பிட்டியில் இடம்பெற்றுவரும் தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியின் 7 ஆவது நாளான நேற்றுமுன்தினம் அதிகூடிய மக்கள் கண் காட்சியை பார்வை யிட வருகை தந்துள்ள னர்.

அதற்கமைய நேற்று முன்தினம் நள்ளிரவு வரை கண் காட்சியைப் பார்வையிட 19 லட் சத்து 36 ஆயிரத்து 046 பேர் வருகை தந்துள்ளனர் என்று கண்காட்சி ஏற்பாட்டுக் குழுத் தலைவர் தெரி வித்தார்.

கண்காட்சியைப் பார் வையிட இதுவரை 10,89,486 ஆண்க ளும், 8,46,560 பெண் களும் வருகை தந் துள்ளனர். (ச)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
04*07*1934
அம்பிகை அடியில்
12*03*2013
திதி: பிரதமை

**அமரர் குணரட்ணம் மகேஸ்வரி**



வருடங்கள் ஐந்து ஆனதே அம்மா
ஆனாலும் எங்கள் மூச்சு உள்ளவரை
நீங்கள் வாழ்வீர்கள் எங்களுடன்
மீதி இருக்கும் நினைவுகளை
மீட்டு மீட்டுப் பார்க்கின்றோம்
கனவில் உங்களைப் பார்ப்பதற்கு
கரம் கூப்பி வணங்குகின்றோம்
நீங்கள் இன்னொரு ஜென்மம்
எங்கள் அம்மாவாக இருக்க வேண்டும் என்று!

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.





# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்லத்துரை தனேந்திரகுமாரன்**
(கான இசைமணி ரங்கன்)

தோற்றம் 1948.10.15
மறைவு 2005.03.10
திதி: 01.03.2014

பாரினிலே பார்புகழ வாழ்ந்து விட்டுப்
பாதியிலே போனதென்ன - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டுமென்று எந்நாளும்
இறைவனை வேண்டுகின்றோம்.

16/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்
குடும்பத்தினர்.

(45145)(2.6.3)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**ஞானேஸ்வரி இரத்தினசிங்கம்**

தோற்றம் 01.01.1946
மறைவு 30.01.2014

அன்பின் திருவுருவமாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்
ஊர் புகழும் உத்தமியாய் வாழ்ந்த எம் தாயே!
எங்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய
அன்புத் தெய்வமே!
என்றுமே உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு
அகலாதம்மா!

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உக்ரைனில் பெரும் அரசியல் நெருக்கடி; மக்களே தீர்க்க வழிவிட வேண்டும்

அரசியல் நெருக்கடி வெடித்துள்ள உக்ரைனின் விடயத்தில் தலையிடப் போவதில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறார். எனினும் ஜோர்ஜியாவில் இடம்பெற்றமை போன்று ரஷ்யாவின் இராணுவத் தலையீடு எந்நேரமும் இடம்பெறும் ஆபத்து இருந்து வருகிறது என்று அவதானிகள் கருது கிறார்கள்.

ரஷ்ய ஆதரவாளரான உக்ரைனின் ஜனாதிபதி வின்டர் யானுகோவிச் தலைநகரைவிட்டு வெளியேறியுள்ள நிலையில், அவருக்கு சாதக நிலையை உருவாக்கும் பொருட்டு, உக்ரைனுக்குள் ரஷ்யா படைகளை அனுப்பலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன. இதனை உறுதிப்படுத்துவது போன்று ஜனாதிபதி புடின் தனது இராணுவத்தை உசார்ப்படுத்தியுள்ளார்.

உக்ரைன் நாட்டின் தலைநகர் கியூவில் கடந்த வாரம் நடைபெற்ற கலவரங்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். போராட்டம் கட்டுக்குள் வராததால், ஜனாதிபதி வின்டா யானுகோவிச் தலைமறைவானார். ஜனாதிபதியைப் பதவிநீக்கம் செய்துவிட்டதாக உக்ரைன் நாடாளுமன்றம் அறிவித்தது. உக்ரைனின் இடைக்கால ஜனாதிபதியாக அலெக்ஸாண்டர் துருச்சினோவ் பொறுப்பேற்றுள்ளார்.

இத்தகைய நிலையில் தனது ஆதரவாளரான வின்டா யானுகோவிச்சை மீண்டும் பதவிக்கு கொண்டுவர ரஷ்யா இராணுவ ரீதியில் தலையிடலாம் அல்லது உக்ரைனின் ஒரு பகுதியைத் துண்டாட முயற்சிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பதவிநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி வின்டா யானுகோவிச் தலைமறைவாக இருப்பதாக நம்பப்படும், ரஷ்ய எல்லைக்குச் சமீபமான கிரிமியா மாகாணத்தின் சட்டப் பேரவைக் கட்டடத்தில் ரஷ்யக் கொடி பறப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் மத்தியில், உக்ரைனில் ரஷ்யா இராணுவ ரீதியாகத் தலையிடுவதென்பது மோசமான தவறு என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரி எச்சரித்துள்ளார். இந்தப் பிரச்சினையால் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பனிப்போர் அதிகரிக்கும், வெடிக்கும் சாத்தியம் உள்ளது. புடின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ரஷ்யா இராணுவ ரீதியில் பலமடைந்து வருகிறது. அதனால் அனைத்துலக விவகாரங்களில் அது அமெரிக்காவுடன் முரண்பாடான நிலைப்பாட்டைக் கூடுதலாகக் கடைப்பிடித்து வருகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் யூனியன் சிதறுண்ட பின்னர் பெருமைமிக்க, பலமுள்ள ரஷ்யா புடினின் தலைமையில் வளர்ச்சியடைந்து வருகிறது.

உக்ரைனில் தற்போது இடம்பெற்றுள்ளமை போன்றதொரு நிலைமைதான் 2008 இல் சோவியத் யூனியனின் மற்றொரு முந்தைய குடியரசான ஜோர்ஜியாவிலும் இடம்பெற்றது. ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்து தனிநாடாகப் பிரகடனம் செய்த தென் ஒஸ்சேத்தியாவுக்கு ஆதரவாக ரஷ்யா படைகளை அனுப்பி இருந்தது. அந்தப் பிராந்தியம் தற்பொழுது தனிநாடாக உருவெடுத்து விட்டது.

உக்ரைனில் ரஷ்ய இராணுவத் தலையீட்டை ரஷ்ய அதிகாரிகள் மறுத்தபோதிலும், விஷமத்தனமான குற்றச்சாட்டு என்று தெரிவித்துள்ள போதிலும், உக்ரைனின் எல்லையில் ஒன்றரை லட்சம் ரஷ்யத் துருப்புகள் இராணுவ ஒத்திகையில் ஈடுபட்டுவருகின்றன. அதனை ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டுக்கான ஓர் எச்சரிக்கையாகக் கருதலாம்.

உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாட்டை ரஷ்யா மதிக்க வேண்டும் என்று நேட்டோவும் அமெரிக்காவும் விடுத்த எச்சரிக்கைக்குப் பதிலடியாக, ரஷ்யப் படைகள் எல்லையில் இராணுவ ஒத்திகையை ஆரம்பித்திருப்பதால் வல்லரசுகளின் பலப்பரீட்சைக்கு உக்ரைன் பலியாகும் ஆபத்து உண்டு.

ரஷ்ய ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கிரிமியாவுக்கு ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்திருப்பதும், கிரிமியா மக்களுக்கு ரஷ்ய கடவுச்சீட்டுகளை வழங்குவதும், 1954இல் சோவியத் யூனியனால் உக்ரைனுக்கு வழங்கப்பட்ட கிரிமியா மாகாணத்தை ரஷ்யா மீண்டும் தன்னுடன் இணைத் துக்கொள்ளும் நடவடிக்கைக்கான முன்னேற்பாடகாகக் கொள்ளத்தக்கது.

உக்ரைனில் ரஷ்யாவின் தலையீடு நிறுத்தப்பட வேண்டும். உக்ரைன் மக்கள் தமது பிரச்சினையைத் தாங்களே தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

# சாமானியர் வாழ்வில் இது இருண்ட யுகம்



சேரலாதன்

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை காரணமாக மக்கள் தமது அன்றாட வாழ்க்கையையே கொண்டு செல்ல முடியாத நிலையில் அல்லல்படுவதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. பொருள்களை வாங்கும் சக்தி மக்களிடம் வற்றிப் போனதால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விற்பனையாகாது தேங்கிக் கிடக்கின்றன. இதனால் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் வேறு வழியின்றித் தமது உற்பத்திகளை மட்டுப்படுத்தி விட்டன. இதனால் உலகெங்கும் மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். பொருளாதார வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ஜேர்மனி, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் என்பன கூட இதிலிருந்து தப்ப முடியவில்லை. அமெரிக்காவுக்குச் சவால் விடுகின்ற அளவுக்குப் பொருளாதாரத்தில் துரிதமாக வளர்ந்து வரும் சீனா கூட உற்பத்திகளைக் கட்டுப்படுத்தி தொழிலாளர்கள் பலரை வீடுகளுக்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வளர்ந்து வரும் நாடுகளும், வறிய நாடுகளும் செய்வதறியாத நிலையில் கைகளைப் பிசைந்தவாறு விழித்துக் கொண்டிருக்கின்றன. வளர்ந்துவரும் இந்தியப் பொருளாதாரம் கூட சமீப காலமாக முடங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் வறிய மக்களின் தொகை அதிகரித்துச் செல்லும் நிலையும் அங்கு உருவாகிவிட்டது.

ஆனால் எமது நாட்டின் நிதியுடன் தொடர்புடைய உயரதிகாரிகள் வேறு விதமாக அறிக்கைகளைச் சமர்ப்பித்து வருகின்றனர். இலங்கை உலக சவால்கள் யாவற்றையும் முறியடித்து பொர்ருளாதார வளர்ச்சி பெற்று வருவதாக அந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைக்கும் மத்தியில் இலங்கை பொருளாதார ரீதியில் தலை நிமிர்ந்து நிற்பதாகவும் , இங்கு வாழும் மக்களின் ஆண்டுச் சராசரி வருமானம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கேட்கும் இலங்கைக் குடிமக்கள் நிச்சயம் மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும். ஆனால் முடியவில்லையே. வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்குத் தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத வகையில் இங்குள்ள மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் கூட அவர்களுக்குச் சிரமங்கள் தோன்றியுள்ளன. அபி விருத்தி, மீள் கட்டமைப்பு எனப் பல்வேறு வார்த்தைப் பிரயோகங்கள் காதுகளில் கேட்கின்றனவே தவிர சாதாரண மனிதர்களின் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கான திட்டங்கள் தொடர்பாக எதுவுமே வகுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை.

ஒருவனின் வயிற்றுப்பசி தணியும் போதுதான் அவன் ஏனைய விடயங்கள் தொடர்பாகச் சிந்திக்க ஆரம்பிப்பான். வயிற்றுப் பசி ஏற்படும்போது அவனது ஐம்புலன்களும் செயலிழந்த நிலையில் காணப்படும். ஆகவே நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினையான உணவுப் பிரச்சினைக்கு நல்ல தொரு தீர்வொன்றைக் காண்பதே அரசொன்றின் முக்கியமான கடமையாகும். ஆனால் எமது நாட்டில் இது கவனிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. உணவுப் பொருள்களின் விலைகள் சாதாரண மனித னொருவன் எட்டிப் பிடிக்க முடியாத அளவு உயரத்துக்குச் சென்றுவிட்டன. இவை இறங்கி வருமெனக் கனவிலும் நினைக்க முடியாது. ஏறியது ஏறியது தான்.

அரிசி, தானியங்கள், மாவுப் பொருள்கள்,சமையல் எண்ணெய், எரிபொருள்கள், மருந்து வகைகள், தேங்காய், கடல் உணவுகள், போக்குவரத்துக் கட்டணங்கள், தொலைபேசிக் கட்டணங்கள், ஆடை வகைகள், கட்டடப் பொருள்கள் என நீண்ட பட்டியலைச் சமர்ப்பிக்கும் அளவுக்கு விலைவாசி உயர்வு அனைத்துத் துறைகளிலும் புகுந்து விளையாடி வருகின்றது. இதில் வாகனங்களின் இறக்குமதி வரி அறிவிக்கப்பட்டதால் அவற்றின் விலைகளில் பெரும் உயர்வு ஏற்பட்டமையும் உள்ளடங்குகின்றது.

கடந்த வரவு- செலவுத் திட்டத்தின் போது அரச உத்தியோகத்தர்களுக்கு வெறும் ஆயிரத்து 200 ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு 500 ரூபாவும் உச்ச பட்சமாக அதிகரிக்கப்பட்டன. இதில் ஒரு சாரார் இதிலும் குறைவான தொகையைப் பெற வேண்டிய பரிதாப நிலை வேறு- தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் இந்தத் தொகைகளை ஒப்பிடும்போது "யானைப்பசிக்கு சோளப்பொரி" என்ற வாக்கியமே நினைவுக்கு வருகின்றது.

**அரச உத்தியோகத்தர்களுக்கு வெறும் ஆயிரத்து 200 ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு 500 ரூபாவும் உச்ச பட்சமாக அதிகரிக்கப்பட்டன. இதில் ஒரு சாரார் இதிலும் குறைவான தொகையைப் பெற வேண்டிய பரிதாப நிலை வேறு– தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் இந்தத் தொகைகளை ஒப்பிடும்போது "யானைப் பசிக்கு சோளப்பொரி" என்ற வாக்கியமே நினைவுக்கு வருகின்றது.**

இங்குள்ள ஆட்சியாளர்கள் தமது சொகுசான வாழ்க்கை தொடர்பாகவே முழு நேரமும் சிந்திக்கிறார்களேயொழிய சாதாரண மக்களைப் பற்றி நினைப்பதாகவே தெரியவில்லை. கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இன்றைய நாள் வரை இறுதிப்போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பாகவே தென்னிலங்கை மக்களிடம் கூறப்பட்டு வருகின்றது. இந்த வெற்றியை ஓர் அரசியல் மூலதனமாகவும் இங்குள்ள அரசியல்வாதிகள் பயன்படுத்தி வருகின்றனர். இந்தப் போரின் போது தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்கள், அழிவுகள் தொடர்பாக அவர்கள் மூச்சுக்கூட விடுவதில்லை. தப்பித் தவறி யாராவது இது தொடர்பாகக் கேள்வி எழுப்பும்போது அதனை உடனடியாகவே பொய்யெனக் கூறி மறுக்கும் அரசியல் வாதிகள் தான் இங்கு காணப்படுகின்றனர். இறுதிப் போரைச் சொல்லிச் சொல்லியே மக்களைத் திசை திருப்பி விடுவதிலும் , அவர்களின் பசியை மறக்கச் செய்வதிலும் இவர்களை வெற்றி கொள்வதற்கு எவராவது இனித்தான் பிறக்க வேண்டும்.

அண்மையில் செயற்கையாக உருவாக்கப்பட்ட பால்மாவுக்கான தட்டுப்பாடு மக்களிடையே பெரும் த்தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. சாதாரணமாகக் கடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பால்மாப் பெட்டிகள் சில வாரங்கள் அஞ்ஞாதவாசம் புரிந்தன. அஞ்ஞாதவாசம் என்பதை புராணங்களைப் படித்தவர்கள் புரிந்து கொள்வார்கள். பின்னர் அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டதன் பின்னரே அவை ஓரளவு காட்சியளிக்க ஆரம்பித்தன. அதுவும் முழுமையாக இடம்பெறவில்லை. இன்னுமொரு தடவை இவற்றின் விலைகள் எகிறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதாகத் தெரியவரு கின்றது. இதன் பின்னர் இவை முழுமையாகப் பவனி வர ஆரம்பித்து விடுமென நம்பலாம்.

சுருக்கமாகக் கூறினால் எமது நாட்டின் தற்போதைய நிலவரங்களின் பிரகாரம் இம்முறை நெற் செய்கையில் எதிர்பார்த்த அறுவடை கிடைக்கவில்லை. தானியங்களின் விளைச்சலிலும் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. குளங்களில் மேற்கொள்ளப்பட்ட நன்னீர் மீன் வளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டுள்ளதால் அவற்றிலிருந்து பய னைப் பெறுவதிலும் தடைகள் ஏற்பட்டுள்ளன. உலக சந்தையில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் அதன் தாக்கம் இங்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பது போன்ற தகவல்கள் சாமா னிய மக்களின் வயிற்றில் புளியைக் கரைத்து விடுகின்றன.

எனவே எதிர்வரும் நாள்கள் நெருப்பாற்றைக் கடப்பதற்கு ஒப்பானதொரு நிலையை நாட்டின் சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படுத்தப் போகின்றது என்பதுதான் யதார்த்தம்.

# இலங்கையில் மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள்

## பட்டியலிட்டது அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம்



**இலங்கையில் நிலவும் மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழில்:வீகேஆர்.

இலங்கை ஓர் அரசியல் சாசனத்தைக் கொண்டுள்ள பல கட்சி ஆட்சி முறையின் கீழானதொரு குடியரசாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலும் வெற்றி பெற்றுத் தமது இரண்டாவது பதவிக் காலத்தில் அமர்ந்துள்ளார். நாடாளு மன்றத் தேர்தல்களும் 2010 ஆம் ஆண் டிலேயே இடம்பெற்றது. நாடாளு மன்றம் அரசியல் சாசனத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது.

ஜனாதிபதியின் மூன்று சகோதரர்கள் முக்கிய பொறுப்புகளில் அமர்ந்துள்ளனர். ஒருவர் பாதுகாப்புச் செயலாளராகவும், அடுத்தவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும், மூன்றாமவர் நாடாளு மன்றத்தின் சபாநாயகராகவும் பதவி வகிக்கின்றனர்.

இவர்களை விட ஜனாதிபதியின் மகன் உள்ளிட்ட அவரது உறவினர்கள் பலர் அரசியல் மற்றும் இராஜதந்திரத்துடன் தொடர்புடைய பதவிகளில் அமர்ந்துள்ளனர்.

இங்கு இடம்பெறும் தேர்தல்கள் யாவுமே பிரச்சினைகளுக்கு உரிய வகையில் இடம்பெறுவதாக சுதந்திரமான கண்காணிப்பாளர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்தத் தேர்தல்கள் மோசடிகள் நிறைந்தவையாகவும், தேர்தல் விதிமுறைகளை மீறுபவையாக இடம்பெறுவதாகவும் கூறும் அவர்கள் அரசு சார்புக் கூட்டடணிக் கட்சியினர் அரச வளங்களைத் தமது சுய இலாபத்துக்காகப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோர் தாக்கப்படுவதும், தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுவதும் முக்கியமான மனித உரிமைகளை மீறும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

மேலும் படையினர் மற்றும் துணை இராணுவப் பிரிவினரால் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நியாயமற்ற கொலைகளும் மோசமான மனித உரிமைகளை மீறும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மீது படையினரும், பொலிஸாரும் துன்புறுத்தல்களை மேற்கொள்வதும் மோசமான விளைவுகளாகக் காணப்படுகின்றன. மேலும் அரசு குடிமக்களின் அந்தரங்க உரிமைகளிலும் அத்துமீறி நடந்து கொள்கின்றது.

அநேகமான பெரிய ஊடகங்கள் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. மேலும் ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் அரசினால் தணிக்கை செய்யப்படுகின்ற தன்மையும் காணப்படுகின்றது.

அரசில் ஊடுருவிக் காணப்படும் ஊழல் மிகப்பெரிய விடயமாக உருவெடுத்துள்ளது.

அரசு, அதன் முகவர்கள், துணை இராணுவப் பிரிவினர் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் கொலைகள் தொடர்பாக முறைப்பாடு தெரிவிப்பதில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தயக்கம் காட்டுகின்றனர். பயமே இதற்கான முக்கிய காரணமாகும்.

வெலிவேரியாவில் மூன்றுபேர் கொல்லப்படவும் டசின் கணக்கானவர்கள் காயங்களுக்கு ஆளாகவும் படையினரின் துப்பாக்கிப் பிரயோகமே காரணமாக இருந்துள்ளது. மேலும் அரசு சார்பில்லாத சிலரின் கொலை தொடர்பான வழக்குகள் முடிவு காணப்படாத நிலையில் இழுத்தடிக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

சிறைக் கைதியான கணேசன் நிமலரூபனின் மரணம் தொடர்பாக இறந்தவரின் தந்தையாரால் தொடுக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரம துங்கவின் கொலைச் சந்தேக நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான கே.பிரியவன்சவை மவுண்ட்லவினிய பிரதம நீதிவான் விடுதலை செய்து வழங்கிய தீர்ப்புத் தொடர்பாகப் பலரும் அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.யினர் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான பணம் பறித்தல், லஞ்சம் வாங்குதல், வன்முறை ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு உதாரணமாக கடந்த செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி மாலை மற்றும் மறுநாள் காலை ஆகிய நேரங்களில் அடையாளம் காணப்பட்ட ஈ.பி.டி.பி. அங்கத்தவர்களும் இராணுவ உடை தரித்த சிலரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட திருமதி அனந்தி சசிதரனின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன் போது எட்டுப்பேர் காயங்களுக்கு உள்ளானர்கள்.

மேலும் கடந்த மே மாதம் 6 ஆம் திகதி ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் 12 பேர் அடங்கிய குழுவினர் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்பின் தலைவரான வி.சகாதேவன், அந்த அமைப்பின் பொருளாளரான பி.புஸ்பராசா ஆகியோர் மீது கிரிக்கெட் மட்டைகளால் தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அருகில் இடம்பெற்றது. சகாதேவனும், புஸ்பராசாவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சட்ட விரோத வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த போது இந்த தாக்குதல் இடம்பெற்றது.

மேலும் கடந்த மார்ச் மாதம் ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த கந்தசாமி ஜெகதீஸ்வரன் என்பவர் 13 வயதான யேசுதாசன் லக்ஸ்சினி என்ற சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கிய, பின்னர் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் அரசு சார்பான ஈ.பி.டி.பி. போன்ற துணை இராணுவப் பிரிவினருக்கும் படையினருக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் அரசியல் சாசனத்தில் பேச்சு, எழுத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசு இவற்றை மதித்து நடப்பதில்லை. ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகங்களின் மீதான தாக்குதல் சம்பவங்களும் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

கடந்த மே மாதம் வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களைக் குடியமர்த்துவது தொடர்பாக ஊடகவியலாளரிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாம் கூறியவற்றை ஊடகவியலாளர் தவறாகப் புரிந்துகொண்டு செய்திகளை வெளியிட்டால் அவர்களின் கழுத்துக்களை நசுக்குவதற்கான அதிகாரம் தம்மிடம் உள்ளதாகவும், அவ்வாறு செய்திகள் வெளியிடும் ஊடகங்கள் மீது தம்மால் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் தமிழ்ப் பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவங்கள் ஒரே மாதிரியான பாணியில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து தொடர்ந்து வருடம் முழுவதும் இடம்பெற்றது. 2012 நவம்பர் மாதம் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் தே.பிரேம்ஆனந் யாழ். பல்கலைக்கழகத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைப் பதிவு செய்வதற்கு முயற்சி செய்தபோது தாக்குதலுக்கு உள்ளானார். இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் சிவில் உடை தரித்த படையினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான வாகனத்தின் கண்ணாடிகளும் சேதமாக்கப்பட்டன. அவர் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்திக் கொண்டிருந்த போது சிவில் உடை தரித்த படையினர் அவரது வாகனத்துக்கு பொலிஸாரும், படையினரும் பார்த்துக்கொண்டிருக்க சேதங்கள் ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனவரி 10 ஆம் திகதி சில நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து உதயன் பத்திரிகையின் விநியோகஸ்தரான நா.பிரதீபன் மீது தாக்குதலை மேற்கொண்டனர். மேலும் அவர் கொண்டு சென்ற பத்திரிகையின் பிரதிகளும் அவரது மோட்டார் சைக்கிளும் தீயிடப்பட்டு அழிக்கப்பட்டன. ஜனவரி 15 ஆம் திகதி இராணுவ புலனாய்வுப் பிரிவினர் எனக் கருதப்படுபவர்கள் உதயன், தினக்குரல், வலம்புரி ஆகிய பத்திரிகைகளின் ஊடகவியலாளர்கள் மீது கழிவு ஓயிலை வீசியுள்ளனர். ஜனவரி 18 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் இராணுவ உயர் அதிகாரியொருவரை சம்பந்தப்படுத்தி வெளிவந்த செய்தியொன்று தொடர்பாக விசாரிக்கவுள்ளதாகத் தெரிவித்து புலனாய்வுப் பிரிவினர் பத்திரிகை ஆசிரியர் தே.பிரேம்ஆனந்துக்கு அழைப்பாணை அனுப்பி வைத்தனர். பெப்ரவரி 7 ஆம் திகதி இனம் தெரியாத இரண்டு பேர் உதயன் பத்திரிகையின் விநியோகஸ்தர் ஒருவரைத் துரத்திச் சென்றுள்ளனர். ஆனால் அவர் தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டார். பெப்ரவரி 15 ஆம் திகதி உதயன் ஒன்லைன் ஊடகவியலாளர் ஒருவரின் புகைப்படக் கருவியைச் சேதப்படுத்தினர். இந்த ஊடகவியலாளர் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற வலிகாமம் வடக்கு மக்களின் உண்ணாவிரதப் போராட்ட நிகழ்வுகளைப் படம்பிடித்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் குழப்ப முற்பட்ட போது அந்த ஊடகவியலாளர் அதனையும் படம்பிடித்த போது அவரது புகைப்படக் கருவி பறிக்கப்பட்டது.

மார்ச் 20 ஆம் திகதி சிவில் உடை தரித்த உயர் இராணுவ அதிகாரி ஒருவர் உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் ஒருவரைப் பயமுறுத்தியுள்ளார்.

ஏப்ரல் 3ஆம் திகதி முகமூடி அணிந்த ஏழுபேர் உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்த போது விநியோக வாகனம் ஒன்றிலிருந்து பத்திரிகைக் கட்டுக்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதில் காயமடைந்த உதயன் பணியாளர்கள் நான்கு பேர் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

மேலும் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கணினிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் என்பனவும் சேதமாக்கப்பட்டன.

ஏப்ரல் 13 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் பிரதான அலுவலகத்தினுள் நுழைந்த தலைக்கவசம் அணிந்த துப்பாக்கிதாரிகள் அங்கிருந்த பிரதான அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்த முடியாதவாறு சேதப்படுத்தினர். அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த பத்திரிகையின் பிரதிகளையும் தீயிட்டுக் கொளுத்தினர். ஜூலை 10 ஆம் திகதி ஓட்டோவில் வந்த மூன்று பேர் மோட்டார் சைக்கிளில் பத்திரிகை அலுவலகத்திலிருந்து வீடு சென்றுகொண்டிருந்த உதயன் பத்திரிகை நிருபரான குணாளன் திலீப் அமுதனை மோதிக் கீழே தள்ளியுள்ளனர். வேறொரு வாகனம் சம்பவ இடத்துக்கு வருவதைக் கண்ட தாக்குதலாளிகள் அங்கிருந்து சென்றுவிட்டனர். ஒருவாரத்துக்குப் பின்னர் இதுவொரு விபத்துச் சம்பவம் என யாழ்ப்பாணம் பொலிஸார் அறிக்கை விடுத்துள்ளனர். பின்னர் இது தொடர்பாகப் பொலிஸார் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. மேலும் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக நடவடிக்கைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

மேலும் இந்த அறிக்கையில் முன்னாள் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்தின மீதான தாக்குதல் சம்பவம், யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கு ஈ.பி.டி.யினரால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல், காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக முடிவு காணப்படாத விடயங்கள், ஊடகவியலாளர் பிரகீத் எக்னிலிகொட விவகாரம், முன்னாள் புலி உறுப்பினர்கள் தவறாக நடத்தப்படுகின்றமை, பொலிஸாரும் படையினரும் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கின்றமை, சிறைச்சாலைகளின் பரிதாபகரமான நிலைமை, கைது செய்யப்படுகின்றவர்கள் உரிய வேளையில் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்படாமை, நீதிமன்ற விசாரணைகளில் காணப்படும் தாமதம், அரசியல் காரணங்களுக்காகப் பலர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை, போர் இடம்பெற்ற இடங்களில் பொது மக்களின் பெருமளவு காணிகளைப் படையினர் அபகரித்து வைத்திருக்கின்றமை, சுதந்திரமாகக் கூடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள், சுதந்திரமான சமயவழிபாடுகளுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகள், சுதந்திரமாக நடமாட முடியாத நிலை, ஊழல் தொடர்பாக அரசின் அசிரத்தை, மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை, தொழிலாளர் உரிமை மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**இடபம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**மிதுனம்**: அவசரப்பட வேண்டாம். பூர்த்தியடையாத வேலைகள் முடியும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். மனநிம்மதி கிடைக்கும்.

**கடகம்**: மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் பதற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிங்கம்**: எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

**கன்னி**: எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**துலாம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**விருச்சிகம்**: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**: சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மகரம்**: பதற்றம் இருக்கும். மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். பழைய பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**கும்பம்**: சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சிறுசிறு ஏமாற்றங்கள் வந்துபோகும். உத்தியோகத்தில் சின்னச் சின்ன இடர்ப்பாடுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

**மீனம்**: அடுக்கடுக்கான வேலைகளால் அவதிப்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம்.

## நாளை

**மாசி-18 ஞாயிற்றுக்கிழமை | 02.03.2014**

திதி: பிரதமை பி.ப.12.49 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
மு.இ.07.18 வரை

சுபநேரம்: 09.27-10.57 வரை
இராகுகாலம்:.04.57-06.27 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### பக்தி யோகம்

பக்தி யோகம் என்பது இறைவனுடன் ஒன்றுபடுவதற்கான ஒழுங்குபடுத்தப் பெற்ற பக்தி நெறியேயாம். சமயத்துக்கும் மெய்யுணர்வுக்கும் அதுவே எளிய உறுதியான நெறி யாகும்.

ஆண்டவன் மீது அன்பு செலுத்தல் மட்டுமே இப்பாதையில் சித்தி பெறுவதற்குத் தேவையான ஒன்று.

அந்த அன்பில் ஐந்து நிலைகள் உள்ளன.

முதல்நிலை : மனிதனுக்கு உதவி தேவை; அவனிடம் சிறிது அச்சமும் உள்ளது.

இரண்டாம் நிலை : கடவுளைத் தந்தையாகக் கருதல்.

மூன்றாம் நிலை : ஆண்டவனைத் தன் அன்னையாகக் காணல். அப்போது பெண்கள் எல்லாருமே அன்னை பராசக்தியின் வடிவங்கள் என்ற நோக்கு உண்டாகும். பராசக்தியை அன்னையாகக் கருதும் நிலை எய்தியதும் உண்மை அன்பு உதயமாகிறது.

நான்காம் நிலை : பக்திக்காகவே பக்தி. இது, குணங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலை.

ஐந்தாம் நிலை : இறைவனுடன் ஒன்றி நிற்பதில் ஆர்வம். இரண்டற்ற ஒன்றிய நிலைக்கு அழைத்துச் செல்கிறது; பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்கிறது. நம்மைப் போலவே ஆண்டவனும் குணங்குறியற்றவன். இரண்டும் உடையவனும் கூட.

பக்தி நெறியின் வளர்ச்சிக்குப் பிரார்த்தனையும் துதி பாடுதலுமே முதல் வழி. இறைவன் நாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவது அற்புத சக்தியை அளிக்கிறது. மந்திரம் என்பது சிறந்த சொல்; புனிதச் சொற்றொடர் . சீடன் ஒருவன் மீண்டும் சொல்வதற்காகவும், சிந்திப்பதற்காகவும் குருநாதரால் தேர்ந்தெடுக்கப்படுவது. பிரார்த்தனை செய்யவும், துதி செய்யவும் , ஏதாவது ஒரு மூர்த்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவே அவனுடைய இஷ்டதெய்வம். இந்த மந்திரங்கள் எல்லாம் வெறும் சொல் ஓசை மட்டும் அல்ல; அவையே கடவுள். அவை நம்முள்ளேயே உள்ளன. ஆண்டவனைப் பற்றிச் சிந்தியுங்கள். அவனைப் பற்றிப் பேசுங்கள். உலகின் மீது பாசம் வேண்டாம்! "நீ எதை நினைக் கிறாயோ அதுவே ஆகிறாய்" என்பது தான் புத்தர் மலைமீது செய்த உபதேசம்.

# முதிய தந்தையருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு மன அழுத்தம்



1973ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை சுவீடனில் பிறந்த 26 லட்சம் குழந்தைகள் குறித்த தரவுகளைப் பரிசீலித்த ஆய்வாளர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

முதிய தந்தையருக் குப்பிறக்கும் குழந்தைகள் மன நலப் பிரச்சினைகளை எதிர் கொள்வதாக ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. 45 வயதுக்கு மேற்பட்ட தந்தையருக்குப் பிறக்கும் குழந்தைகள் மன நலப் பிரச்சினைகளை அதிகம் எதிர் கொள்ளும் ஆபத்து இருப்பதாகக் கொள்வதற்கான ஆதாரங்களைத் தாங்கள் கண்டறிந்திருப்பதாக சுவீடன் மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

1973ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை சுவீடனில் பிறந்த 26 லட்சம் குழந்தைகள் குறித்த தரவுகளைப் பரிசீலித்த ஆய்வாளர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

20-24 வயதான தந்தைகளுக்குப் பிறக்கும் குழந்தைகளைக் காட்டிலும், முதிய தந்தையருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு, ஆட்டிசம், கவனக் குறைவு, பிளவுண்ட மனோநிலை (ஸ்கிஷோப்ரெனியா) போன்ற பிரச்சினைகள் உருவாகும் சாத்தியக்கூறு அதிகம் காணப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் முதிய தந்தையருக்குப் பிறக்கும் குழந்தைகள் மனநோய்ப் பிரச்சினைகளை நிச்சயம் எதிர்கொள்ளும் ஆபத்து குறைந்த அளவிலேயே இருப்பதாக அவர்கள் கூறினர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 3 | | | 1 | 8 | |
| 5 | | 8 | | 1 | | | | 7 |
| 3 | | | | 2 | | | 6 | 9 |
| 1 | | 7 | 5 | | | 8 | | 4 |
| | 4 | | | | | | 9 | |
| 6 | | 9 | | | 2 | 7 | | 1 |
| 8 | | | | 9 | | | | 5 |
| 4 | | | | 8 | | 9 | | 6 |
| | 9 | 2 | | | 1 | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 6 | 2 | 4 | 1 | 5 | 7 | 8 |
| 4 | 8 | 2 | 7 | 5 | 6 | 3 | 9 | 1 |
| 1 | 5 | 7 | 8 | 9 | 3 | 2 | 4 | 6 |
| 7 | 1 | 3 | 9 | 6 | 8 | 4 | 5 | 2 |
| 9 | 4 | 8 | 1 | 2 | 5 | 7 | 6 | 3 |
| 6 | 2 | 5 | 4 | 3 | 7 | 1 | 8 | 9 |
| 5 | 7 | 9 | 6 | 1 | 2 | 8 | 3 | 4 |
| 2 | 3 | 4 | 5 | 8 | 9 | 6 | 1 | 7 |
| 8 | 6 | 1 | 3 | 7 | 4 | 9 | 2 | 5 |

# நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் செயல்பட...

தொடங்கும் நாள் சிறந்ததாக இருக்க வேண்டுமெனில் காலையில் நல்ல ஆரோக்கியமான உணவுகளை சாப்பிட வேண்டும். ஏனெனில் காலையில் நல்ல ஆரோக்கியமான மற்றும் உடலுக்கு தேவையான ஆற்றல் அதிகம் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால், உடலின் சக்தி சீராக இருந்து, உடல் நன்கு சுறுசுறுப்புடன் செயற்படும்.



**பால்**
பாலில் நிறைய புரோட்டீன் மற்றும் கல்சியம் நிறைந்துள்ளதால், காலையில் ஒரு டம்ளர் பால் அருந்துவது நல்லது.




**தேன்**
காலையில் எழுந்ததும், வெதுவெதுப்பான நீரில் தேன் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து குடித்தால், குடலியக்கம் சீராக இயங்குவதோடு, உடலும் ஒல்லியாகும்.



**வாழைப்பழம்**
காலை எழும் போது உடல் ஆற்றலின்றி சோர்ந்து இருக்கும். அப்போது உடலுக்கு சிறந்த ஆற்றலை வாழைப் பழங்கள் கொடுக்கும்.

**முட்டை**
தினமும் காலையில் ஒரு முட்டை சாப்பிட்டால், நாள் முழுவதும் உடலை ஆரோக் கியத்துடன் வைத்துக் கொள்ளும்.



**அப்பிள்**
அப்பிளில் போதுமான அளவில் இரும்புச்சத்து மற்றும் உடலுக்கு ஆற்றலை அளிக்கும் இயற்கையான சர்க்கரையானது நிறைந்துள்ளது. எனவே இத்தகைய அப்பிளை காலையில் சாப்பிட்டால் மிகவும் நல்லது.



# கின்னஸ் சாதனை படைத்த மிகப் பெரிய சிப்பி



டென்மார்க் கடற்ரையில் சுமார் 14 அங்குலமுள்ள சிப்பியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிக நீளமான சிப்பி இது என்று தெரிவிக்கப்படுகிறது. டென் மார்க் வடபிராந்திய கடற்கரையில் கடந்த ஒக்ரோபர் மாதம் கண்டுபிடிக் கப்பட்ட இந்தச் சிப்பி உயிருடன் காணப் பட்டது. தற்போது 13.97 அங்குல நீளமும் 4.21 அங்குல அகலமும் கொண் டுள்ள இந்தச் சிப்பி மேலும் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இதை உலகின் மிகப்பெரியசிப் பியாக கின்னஸ் சாதனை நூல் வெளி யீட்டாளர்கள் அங்கீகரித் துள்ளனர்.

# புற்றுநோயை கண்டுபிடிக்க உதவும் பேப்பர்

பேப்பர் சோதனை ஒன்றின்மூலம் புற்று நோயைக் கண்டறியும் வழிமுறையை இந்திய வம்சாவளி விஞ்ஞானி ஒருவர் கண்டறிந்துள்ளார்.

வளரும் நாடுகளில் புற்றுநோய் விகிதம் தற்போது அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதேபோல் உலகளாவிய புற்று நோயாளிகளின் இறப்பும் அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் பிறந்த இந்திய வம்சாவளியினரான சங்கீதா பட்டியா என்பவர் ஏற்கனவே அமெரிக்க விஞ்ஞான ஆய்வுகளில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.


இந்தநிலையில் தொழில்நுட்பத்தின் மிகப் பெரும் திருப்புமுனையாக எளியமுறை பேப்பர் சோதனை ஒன்றின்மூலம் புற்று நோயைக் கண்டறியும் வழிமுறையை கண்டறிந்துள் ளார்.

கர்ப்ப சோதனை செய்வதுபோல் ஒருவரின் சிறுநீரைக் கொண்டு நிமிட நேரங்களில் புற்று நோயைக் கண்டறியமுடியும் என்பது இவரது சோதனையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் கூறுகையில்:

இந்த எளிய சோதனைமுறை கண்டறியப் பட்டபோது அதனை பகுப்பாய்வு செய்ய மிகவும் சிறந்த கருவிகளைப் பயன்படுத்தினேன். மேலும் வளரும் நாடுகளில் இந்த எளிய சோதனை முறையை எந்தவித சிறப்பு உபகரணங்களும் இல்லாமல் பயன்படுத்தமுடியும்.

தொற்றுநோய்களைக் கண்டறிய இந்த எளியமுறை உதவுவதுடன் மட்டுமில்லாமல் புதிய தொழில்நுட்பம் கண்டறியப்படாத நோய்களுக்கும் இதே உத்தியைப் பயன்படுத்த முடியும் என்பது இந்த முறைக்கான மற்றொரு சிறப்பாகும் என்றார்.







# பாய் போட்டு படுத்தால் நோய் இல்லை

பாய் போட்டுப் படுத்தால் நோய் விட்டுப் போகும். படுக்கைகள் பலவிதம். எத்தகைய படுக்கையில் படுத்து உறங்கினால் என்ன பலன் ஏற்படும் என்பதை மருத்துவ திறவுகோல் என்னும் சித்த மருத்துவ நூல் விளக்கியுள்ளது.

**கம்பளிப் படுக்கை**
குளிருக்கு இதம். குளிர் சுரம் நீங்கும். கோரைப் பாய் உடல் சூடு, மந்தம், சுரம் போக்கும், உடலுக்குக் குளிர்ச்சியும்,உறக்கமும் ஏற்படும்.


**மூங்கில் பாய்**
உடல் சூடும், பித்தமும் அதிகரிக்கும். தாழம்பாய் வாந்தி, தலை சுற்றல், பித்தம் நீங்கும். பேரீச் சம்பாய் வாதகுன்மநோய், சோகை நீங்கும். ஆனால் உடலுக்கு அதிக உஷ்ணம் தரும்.

**இலவம்பஞ்சு படுக்கை**
உடலில் ரத்தம், தாது பலம் பெறும். தலை முதல் பாதம் வரையிலான அனைத்து நோய்களும் நிவாரணம் பெறும். நன்றாகப் பசியெடுக்கும்.





# தலைமயிர் மூலம் காரரை இழுத்து சாதனை



போலந்தைச் சேர்ந்த சாகசக்கலைஞரான அனஸ்டாஸியா தனது தலைமயிரைப் பயன்படுத்தி 4 தொன் நிறையுடைய காரை இழுத்து புதிய சாதனை படைத்துள்ளார். அவர் பிரிட்டன் ஈஸ்ட்போன் கடற்கரையிலேயே இந்தக் காரை இழுத்து சாதனையை நிறைவேற்றியுள்ளார். அவர் ஏற்கனவே இத்திலிய மிலான் நகரில் 53.4 கிலோ கிராம் நிறையுடைய நபரொருவரை தனது கேசத்தை பயன்படுத்தி தூக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# சங்கானை நிகரை வைரவர் ஆலயத்தில் முன்மாதிரி நிகழ்வுகள்



கலாநிதி ஆறு.திருமுருகனை உபயகாரர் கௌரவிக்கிறார்;



பரிசுத் தொகை பெறுகிறார் மாணவன் யதுர்சன்



மாணவனுக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் சைக்கிளை வழங்குகிறார்.

இந்து ஆலயங்களின் திருவிழாக்களில் மேளக் கச்சேரிகள், வில்லுப்பாட்டு, இன்னிசைக் கச்சேரி நடைபெறுவது தான் வழமை. ஆனால் சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தில் முன்மாதிரியான நிகழ்வுகள் நடந்தன. பெருந்திருவிழா வரிசையில் எட்டாம் திருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் திருவிழா உபயகாரர் இராசரத்தினம் சாந்தன் கிராமத்திலுள்ள மாணவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கினார். இம்முறை உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும், மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் இ.யதுர்சன், உயிரியல் பிரிவில் மாவட்ட மட்டத்தில் ஒன்பதாம் இடத்தைப் பெற்ற யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி இ.கார்த்திகா ஆகியோர் கௌரவிக்கப்பட்டு பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. அத்துடன் சங்கானை சிவப்பிரகாச ம.வி மற்றும் சங்கானை அ.மி.த.க.பாடசாலையின் நான்கு மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன. சங்கானை அ.மி.த.க. பாடசாலை அதிபர் ஊடாக உதவி தேவைப்படுபவர்களுக்கான பாதணிகளுக்கான காசோலையும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ஓ)

## பள்ளிக்குடா அந்தோனியார் திருவிழா

பூநகரி பள்ளிக்குடா புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை ஞாயிறு காலை நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், நாளைக் காலை 7.30 மணிக்குக் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம் பெறும் என்று பங்குத் தந்தை அருட்திரு பா.பிறாயன் அடிகளார் தெரிவித்தார். (ஓ-135)

## லயன்ஸ் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மாதாந்த அங்கத்தவர் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நெல்லியடி செவிப்புலனற்றோர் நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன்.சி.முரளிகரன் அறிவித்துள்ளார். (வ-35)

## சுழிபுரத்தில் எள் விதைப்பு ஆரம்பம்

சுழிபுரம், மார்ச் 1

சுழிபுரம் பகுதியிலுள்ள நெல்வயல்களில் நெல் அறுவடை செய்த கையோடு நிலத்தை உழுது, எள் விதைப்பு நடைபெற்று வருகின்றது. நெல் அறுவடை செய்யாது போனாலும் எள் அறுவடை செய்யலாம் என்ற நம்பிக்கையுடன் வயல் சொந்தக்காரர்கள் எள் விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலங்களில் சுழிபுரம் பகுதி வயல்களில் விளைந்த எள்ளுக்கு பெரும் கிராக்கி இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (வ-28)

**உடனடித் தேவை**

தரமான, சுத்தமான ஒடியல், புளுக்கொடியல் சிறுதொகையாகவும், மொத்தமாகவும் கொள்வனவு செய்யப்படும். (சி/12317) (10.6)

தொடர்பு: அண்ணா பாம், ஸ்ரேசன் றோட், இணுவில்.

**மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளைகளில் 15.02.2013 வரையிலும் அடகு வைத்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாத நகைகள் இன்று (01.03.2014) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கிளை விவரம்:
01. சுன்னாகம்
02. மானிப்பாய்
03. சங்கானை
04. நெல்லியடி
05. அச்சுவேலி
06. ஊர்காவற்றுறை

இந்த ஏலவிற்பனையை இரத்துச்செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்குண்டு.

பிராந்திய முகாமையாளர் (வடக்கு),
தேசிய சேமிப்பு வங்கி.
(45179)(12.6.3)

**பிரத்தியேக/குழு வகுப்புகள்**

A/L கணக்கீடு (தமிழ், ஆங்கில மொழிமூலம்)
ஆங்கிலம் (அனைத்துப் பிரிவினருக்கும்)
தொடர்பு: 077 923 2455
(45075)(12.3.6)

**புலமைப்பரிசில் விசேட வகுப்பு**

* தரம் 4, 5 வகுப்புகளிற்கு, வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.
* 10 வருட வினாத்தாள் மீட்டல்

தொடர்பு: 077 454 1044
(45119)(12.3.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரியாலை கண்டி வீதியில் (புங்கன்குளம் சந்திக்கு அருகில்) ஒரு பரப்பு 14 குழி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 321 1393, 077 687 3150
(45070)(3.6.4)

**காணி கட்டடம் விற்பனைக்கு**

நகரின் மத்தியில் 2 பரப்பு விஸ்தீரணமுள்ள 3500 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ள மாடிக்கட்டடம் விற்பனைக்குண்டு. மேற்பகுதி வீடாகவும், கீழ்ப்பகுதி காட்சியறையாகவும் உபயோகிக்கலாம்.
தரகர்தேவையில்லை.
தொடர்பு: 071 777 5111
(சி/12330)(3.6.4)

**காணி கட்டடம் விற்பனைக்கு**

நகரின் மத்தியில் 3½ பரப்புக்கு மேல் விஸ்தீரணமுடைய காணியுடன் கூடிய அலுவலகத்திற்கு உபயோகமான கட்டடம் விற்பனைக்குண்டு.
தரகர்தேவையில்லை.
தொடர்பு: 071 777 5111
(சி/12330)(3.6.4)

**நாய்க்குட்டிகளும், நாய்களும் விற்பனைக்கு**

35 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் Dasion 30 நாள் குட்டிகள் 2½ வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண் நாய்களும், பொமினேரியன் ஆண், பெண் நாய்களும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 101 6407
(45123)(12.3.6)

**காணி விற்பனைக்கு**

முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்) 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (45185)(3.6.4)
தொடர்பு: 077 526 1407

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222
(சி/12214)(3.6.4)

**மணமகள் தேவை**

* 82 இல் பிறந்த 7இல் செவ்வாய் 28¾ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
* 83இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும் 8¾ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 81இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 23¼ பாவம் உடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
* 83இல் பிறந்த 7இல் செவ்வாய் 46கிரக பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 84இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற BSc மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 80இல் பிறந்த 4இல் செவ்வாய் 28 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற AATமுடித்த மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.
077 607 0862
(45177)(12.3.6)

**வீடு விற்பனைக்குண்டு**

சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 3 அறையும், 2 ஹோல் உடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (45153)(3.6.4)
தொடர்பு: 077 614 6434

**Personal or Group Class**

6-O/L வரையான வகுப்புக்களுக்கு
Science Personal or group classes
பிரபல்யமானபாடசாலையில் கற்பிக்கும் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியரால்
English /Tamil மொழிகளில் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 276 4317
(45147)(3.6.4)

**காணி விற்பனைக்கு**

இருபாலைச் சந்திக்கும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கும் இடையில் றோட்டோரமாக பதினாறு (16) பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 964 0500
(45176)(12.3.6)

**தவறிவிட்டது**

அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த நவரத்தினம் ஸ்ரீமதிதேவி என்பவரின் தே.அ.அ. (537721480v) 08.02.2014 அன்று கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்திக்கும், தாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு.குமாரசாமி, இந்திரவாசம் அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம் எனும் முகவரியுடனோ 021 321 6843 எனும் தொ.பே. இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.
(45184) (3.6.4)

**புலமை கல்வி நிறுவனம்**

தரம் 4 இற்கான புதிய பிரிவுகள் (பிரிவு-II) ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
ஆசிரியர்: க. கலாமோகன் (B.A . Dip.in. Teach)
வகுப்புக்கள் நடைபெறும் காலம்: சனி, ஞாயிறு - பி.ப.4.30, வியாழன்: பி.ப.3.30
குறிப்பு: * தரம் 5 (பிரிவு -II) இற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
* அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன ஆகவே பதிவுகளுக்கு முந்துங்கள்.
சோதி வேம்படி லேன், மானிப்பாய். (45126)(3.6.4) -நிர்வாகி.

**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்**
**ஸ்தாபக தினம் (01.03.2002)**

இன்று 13 ஆவது ஆண்டில் சேவைக்காக காலடி பதிக்கும் எமது கலாமன்றத்தின் சேவைகளை மனதார வாழ்த்தி வணங்குவ தோடு, மன்றத்தின் சேவைகள் மேலும் வளர்வதற்கு ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர். (45183)(3.6.4)
நிர்வாகசபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**

CEYLON THEATRES
(Opposite Jaffna Teaching Hospital)
விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

இப்பொழுது திரையில் DAILY - 10.30am, 2.30pm, 6.30pm




Platinum





Silver




(c 12257)

Bronze

# மரண அறிவித்தல்



## பேரம்பலம் - சிவசுப்ரமணியம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ள வத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சிவசுப்ர மணியம் அவர்கள் 26-02-2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், பரமசாமி காலஞ்சென்ற கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும், கந்தசாமியின் அன்புச் சகோதரரும், சிவதர்சினி (சுவிஸ்), சிவகரன் (லண்டன்), சிவசங்கர் (லண்டன்), சிவதீபன் (சுவிஸ்), சிவசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வ நாதன், பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனும், சாருஜன், சாயித்தியன், சஜிந்த், திஷாந்த் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 4.30 மணிவரை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமாகி அதன் பின்னர் 4.30 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : **மனைவி, பிள்ளைகள்**

No - 08, 3/1, Hampdan Lane, Wellawatte, Colombo - 06

(C/12265)(2.6.3) Tel: 011 2366010

## 21 மில். ரூபா செலவில் எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம் புனரமைப்பு

தென்மராட்சி, மார்ச் 1

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தால் 21 மில் லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

போர்க் காலத்தில் பாடசாலையின் பௌதீக வளங்கள் முற்றாகச் சேதமடைந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு பாடசாலை மீண்டும் ஆரம் பிக்கப்பட்டு தற்காலிக வகுப்பறைத் தொகுதி களிலும், மர நிழல்களிலும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற னர்.

இந்த நிலையில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் திருமதி லீமோசன் பாடசாலையைப் பார்வையிட்டு சேதமடைந்த கட்டடங்களை புனரமைக்க 21 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொடுக்க முன்வந் துள்ளதாக தெரிவிக் கப்பட்டது.

இதற்கான திட்ட வரை புகள் வலயக்கல்வி அலுவலகத்தால் தயாரிப்படுத்தப்பட்டுள் ளதுடன் அது தொடர் பான ஆலோசனைக் கூட்டங்களும் நடத் தப்பட்டு வருவதாக வலயக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்தார்.

(வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## நினைவுடன் ஓராண்டில்....

அன்னை மடியில் 12-03-1950 ஆண்டவன் அடியில் 11-03-2013



அமரர்

**பொன்னையா பரமேஸ்வரன்**

இன்று 01.03.2014 ஒரு வருட நினைவு நாளில் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்

ஞானசம்பந்தன் குடும்பத்தினர், புளியங்கூடல்

மனைவி, பிள்ளைகள். ஜேர்மனி.

(45187)(10.6.3)

## கணக்காளர் தேவை

**இடம்:** சின்பொன் வெதுப்பகம், வவுனியா

**தகைமை:** B.com.BBA, HNDA , AAT உடன் 2 வருட துறைசார் அனுபவம்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:077 710 4559

Email-sinbonbakers01@gmail.com (43193) (3.8.4)

## திறப்பு விழா

நாளை (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை

சுன்னாகத்தில் புதிய கிளை நிறுவனம் திறப்பு விழா

**Abi Baby Mart (Pvt) Ltd.**

திறப்பு விழாவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு மூன்று நாள்கள் பெறுமதியான பணப்பரிசில்கள் மற்றும் சலுகைகள் உண்டு.

குழந்தைகளுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

No. 58, பொலிஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

நிர்வாகம். Abi Baby Mart (Pvt) Ltd.

(சி/12332)(10.6.3)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 35ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்

| | | |
|---|---|---|
| இடம் | : | சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி |
| காலம் | : | 16.03.2014 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | : | முற்பகல் 10.00 மணி |

எமது மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 10.03.2014 இற்கு முன் எழுத்து மூலம் மன்ற செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும்.

1. அமரர் ச. நமசிவாயம் புலமைப் பரிசு நிதியம்
2. அமரர் கு. தவராஜசிங்கம் விதவை நிதியம்
3. சன்றைஸ் ஊனமுற்றோர் நிதியம்
4. அமரர் ச. இரத்தினம் வறிய மாணவர் நிதியம்
5. பொ.தாமோதரம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
6. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிதியம்
7. பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவிப்பு விழா ஏற்பாட்டுக்குழு மாணவர் நிதியம்.
8. அமரர் செ. சபாரத்தினம் மாணவர் நிதியம்
9. அமரர்களான சுப்பிரமணியம்-நேசரத்தினம் மாணவர் நிதியம்
10. முத்துமாரியம்மன் மாரி மைந்தன் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா மாணவர் நிதியம்
11. ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் ச.சந்திரகுமார் மாணவர் நிதியம்
12. கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் மாணவர் நிதியம்
13. அமரர் ச. சண்முகானந்தம் மாணவர் நிதியம்
14. கணபதிப்பிள்ளை முரளி மாணவர் நிதியம்
15. பொ.தாமோதரம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்.
16. சாவகச்சேரி நகர் Hunt Family மாணவர் நிதியம்.
17. அமரர் ஆ. பரமநாதன் மாணவர் நிதியம்.
18. சாவகச்சேரி குகன் ஸ்ரூடியோ உரிமையாளர் அமரர் அ. சித்திரவடிவேலு மாணவர் நிதியம்.
19. மாதாந்தம் எமது உறுப்பினர்களின் பங்களிப்புடன் வழங்கப்படும் மாணவர்களுக்கான கொடுப்பனவு.

போன்ற நிதியங்கள் வழங்கப்படவுள்ளன.

**2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைக்கான தெரிவு நடைபெறவுள்ளது.**

மேற்படி கூட்டத்துக்கு அனைத்து மன்ற உறுப்பினர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்**
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

(சி/7655) (10.6.3)

## வாசகர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

## நாளை முதல் வெளிவருகின்றது மார்ச்மாத ஒளிஅரசி

அன்பு அறிவு அழகு

அமைதி திறமை

வெற்றி கல்வி

மகிழ்ச்சி

போட்டி:
- சமய அறிவு (135000/=)
- கட்டுரை (7000/=)
- தரம் 05 புதிர் (2500/=)
- கவிதை (3000/=)
- குறுக் கெழுத்து (3000/=)
- வர்ணம் தீட்டுதல் (10000/=)
- சொற்றொடர் ஆக்கம் (500/=)
- விளையாட்டு (2250/=)

உரிமை ஆக்கம்

விடுதலை சமூகநீதி

பொழுதுபோக்கு நல்தொகு குடும்பம் சுயதொழில்

இவற்றின் மொத்தப்படைப்பாக மகளிர் தின சிறப்பம்சங்களுடன் சர்வதேச தரத்தில் நாளை முதல் வெளிவருகின்றது.


OLI ARAZI மாத சஞ்சிகை **ஒளி அரசி** இல்லத்தரசிகளின் தோழி

விநியோக தொடர்புகளுக்கு : 021 5677222 071 6182182

(சி/12268)

உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள பத்திரிகை முகவர்களை உடன் நாடவும்.

## மூத்த ஊடகவியலாளர் காலமானார்



கொழும்பு, மார்ச் 1

மூத்த ஊடகவியலாளர் எம்.ஏ.ஸீ.மொஹமட் அவரது சொந்த இடமான மாத்தறை, திக்குவலையில் காலமானார். அவருக்கு வயது 77. சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக ஊடகப் பணியாற்றிய மொஹமட், கொழும்பு பத்திரிகைகளில் நாடாளுமன்றச் செய்தியாளராகவும் செயற்பட்டுள்ளார். தமது இறுதிக் காலத்தில் 'தினக்குரல்' பத்திரிகையின் தென்பிராந்திய செய்தியாளராகப் பணி புரிந்தார்.

அவரது ஜனாஸா நேற்று மாலை 4 மணியளவில் திக்குவலை, சோனக புரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ஓ)

## வடக்கின் கல்விநிலை மேம்பட அனைவரும் பாடுபட வேண்டும்

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானம்*

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடக்கின் கல்வி நிலை மேம்பட அனைவரும் பாடு பட வேண்டும் என்று இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

குறித்த சங்கத்தின் ஆட்சி மன்ற நிர்வாக உறுப்பினர்களுக்கான கூட்டம் கடந்த சனிக்கிழமை சங்கத்தின் தலைமையகத்தில் நடை பெற்றது. இதன்போதே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்போது நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வரு மாறு:-

வடமாகாணத்தின் கல்வி நிலை உயர்வடைந்து எனைய மாகாணங்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்.

கல்வியில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களுக்காக நவீன முறையிலான புதிய விடயங்களை வளர்முக நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக சர்வதேச கல்வியகத்தில் பங்கு தாரராக இருக்கின்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இதன்முதற்கட்டமாக வடமாகாண முதலமைச்சரை கடந்த புதன் கிழமை சந்தித்த சங்கத்தினர் தமது தீர் மானங்கள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர். அத்துடன் வடக்கின் கல்வி மேம்பாட்டுக்கு சங்கம் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கல்வியாலும், கல்வியாளர்களாலும் ஏற்படும் மாற்றங்களே எமது சந்ததியின் எதிர்காலங்களைச் சீராக்கும் எனவும் முதலமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வருடத்துக்கான தேசிய மகாநாட்டை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்துவது என்றும் தீர்மானிக்கப் பட்டது. (வ)

## ஊழல், இலஞ்ச ஒழிப்புக்கு உதவ தேசோதய தலைவர்கள் இணக்கம்



தேசோதய வவுனியா மாவட்ட வருடாந்தக் கூட்டத்தில் நடைபெற்ற விரிவுரையின் போது

வவுனியாவில் இடம்பெற்ற சர்வோதய தேசோதய மாவட்ட வருடாந்த கூட்டத்தில் இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்ரர் நேஷனல் நிறுவனத்தின் வவுனியா பிராந்திய ஒருங்கிணைப்பாளர் இரவீந்திர டி சில்வா கலந்து கொண்டார். இருபதுக்கும் மேற்பட்ட தேசோதய அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 50-55 பிரதிநிதிகளும் அவருடன் கலந்து கொண்டனர்.

பிராந்தியத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப ஊழல்கள் மற்றும் இலஞ்சம் தொடர்பான சம்பவங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை ஒருங்கிணைப்பாளர் எடுத்து விளக்கினார். இந்தப் பிராந்தியத்தை எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான மக்கள் சக்தி மற்றும் பொறுப்புகள் பற்றி கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள். சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற் கான பல்வேறு யோசனைகளையும் இந்த சமுதாயத் தலைவர்கள் முன்வைத்தார்கள்.

ஊழல்களை களைந்தெறிவதற்கான தமக்குள்ள பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட அவர்கள் தமது பகுதிகளில் ஏறத்தாழ 40 விவாதக் குழுக்களை நிறுவி பணி புரிவதற்கும் ஒப்புதல் தெரிவித்தனர்.

விரிவுரை நிகழ்வுகளில் சர்வோதய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமாரன், சர்வோதய மாகாண ஒருங் கிணைப்பாளர் ஏ.கே.சிவசுப்ர மணியன் ஆகியோரும் கலந்துகொண் டனர். வரும் நாள்களில் வவுனியா மாவட்ட குடியிருப்பாளர்களுக்கு பயன்படும் வகையில் சட்ட ஆலோசனை முகாம்களை நடத்துவதற்கு ட்ரான்ஸ் பேரன்சி இன்ரர் நேஷனலும் சர்வோதயமும் இணைந்து செயற்பட ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றன. (ப)

## கல்வி நடவடிக்கை குறித்த கூட்டம்

யாழ். ஒஸ்மானியா கல்லூரி, கதீஜா மகளிர் கல்லூரி ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்த கூட்டம் நாளைமறுதினம் திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமை யில் பிற்பகல் 3 மணிக்கு மேற்படி கூட்டம் நடை பெறும் என்று யாழ். மாநகர சபை உறுப்பினர் பி.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்தார்.

எனவே குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டு மேற்படி பாடசாலைகளின் தேவைகள், எதிர்கால வளர்ச்சிகள் குறித்த தங்களின் கருத்துக்களை முன் வைக்குமாறு பொதுமக்களை அவர் கேட்டுள்ளார். (வ-7)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

'யாழ்.யோக அரங்கத்தினர்' நடத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுகநிகழ்வு நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. யோகா வகுப்புகள் மாலை 5 மணி தொடக் கம் 6 மணி வரை தினமும் ஒரு மணிநேரம் நடைபெறும். (ஓ)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1

பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆறுமுகம் உதயணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீரகத்திப்பிள்ளை இராஜகுலசிங்கமும், சிறப்பு விருந்தினராக கல்மடு படிவம் 2 அ.த.க. பாடசாலை அதிபர் கந்தசாமி கந்தவநேசனும் கலந்து கொள்வர். (வ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 1

சு.குணேஸ்வரன் எழுதிய "உள்ளும் வெளியும்" ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீடு நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். உயில்கலை இலக்கிய சங்க ஏற்பாட்டில் குப்பிளான் ஐ.சண்முகம் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சிறிதரன் வாழ்த்துரையையும், கவிஞர் கருணாகரன், விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (ஓ-9)

## தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

வரணிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நாவற்காடுப் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சயிந்தன் (வயது-23) என்பவரே உயிரிழந்தவராவார். அவரது இறப்பு தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

நீதிவானின் பணிப்பின் பேரில் திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். இதேவேளை இரு தினங்களுக்கு முன்னர் வரணி வடக்கில் 19 வயதுடைய மற்றொரு இளைஞன் தூக்கில் தொங்கி மரணமானமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## இன்று உனக்குப் பிறந்தநாள்



நெஞ்சம் மகிழ 01 . 03 . 1980

நெஞ்சம் துடிக்க 14 . 03 . 2011

**செல்வி ரேணுகா பிள்ளைநாயகம்**

(5ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

உன் அகவை நாளிலும்
அழுது துடிக்கின்றோம்
சிரித்த முகம் காணாமல்
கலங்கித் தவிக்கின்றோம் ரேணுவே...!

ஏனம்மா எமைவிட்டு ஏகினாய்
நீளும் வாழ்க்கைப்பாதையில்
நீ நீங்கிப்போன தேனம்மா!


விழிகள் உறங்கினாலும் - எம்
உள்ளம் எங்கும் நிறைந்து வாழ்கின்றாய்
நாம் இன்றிப் போனாலும் - உன்
நினைவுகள் என்றும் வாழும்.

68/5, 2ஆம் ஒழுங்கை,
பிரம்படி, கொக்குவில்.

குடும்பத்தினர்,
ரேணுகா முன்பள்ளி சமூகம், புங்குடுதீவு.

(45180)(10.6.3)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னையா தர்மலிங்கம்**

தோற்றம் 29.05.1932

மறைவு 13.02.2010

திதி: 01.03.2014

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கு ஆனது ஐயா!
உங்கள் பாதம் பட்ட இடம் எல்லாம்
பார்த்து மனம் ஏங்குது ஐயா!
நீங்கள் எங்கள் இதயங்களில்
வாழ்கிறீர்கள் ஐயா!

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.
077 087 0385

குடும்பத்தினர்.

(வி.12256) (45.6.3)

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் கோபிதாஸ் (கோபி)



புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் 132,Fullersway South, Chessington, Surrey Ktq 1HA, London எனும் முகவரியை வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கோபிதாஸ் (கோபி) 24.02.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கம்-காலஞ்சென்ற ஈஸ்வரிதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், செந்தில்ராணியின் (லண்டன்) அன்புக் கணவரும், எலக்ஷா, பதுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ரிஷிக்குமார் மற்றும் நளினகுமார் (கச்சேரி, வவுனியா) வளவன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கமலராணி, விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), யோகராணி (லண்டன்), விஜயராணி, கதிர்காமநாதன் (பிரான்ஸ்), செந்தில்நாதன் (லண்டன்), யோகநாதன் (பிரான்ஸ்), சுபேந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தெற்கு,
புலோலி.

(33387) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
021 226 3037

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.07.1933

மறைவு 12.03.2013

திதி: வளர்பிறை பிரதமை

ஆண்டொன்று ஆனதம்மா
ஆறவில்லை உங்கள் நினைவு
நீங்கள் இல்லா எம் வாழ்வு
நீர்க்குமிழி ஆனதம்மா
வாடுகின்றோம் உமைநினைத்து
வாராயோ எமை எண்ணி
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி
**கனகமணி மகாலிங்கம்**

குடும்பத்தினர்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(45159)(12)(3.6)


# சிவராத்திரி தினத்தன்று ஈஸ்வரங்களில் நடைபெற்ற விஷேட பூசைகள்



திருக்கேதீஸ்வரத்திலுள்ள லிங்கத்துக்கு பக்தர்கள் பாலாவி ஆற்றிலிருந்து தீர்த்தக் காவடி எடுத்துவந்து சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்கின்றனர்.



கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையின் போது





மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை ஆராதனைகள் நடைபெறுவதையும் பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுவதையும் காணலாம்.

## இரத்த தானம் வழங்கிய நாமல் ராஜபக்ஷ எம்.பி

கொழும்பு,மார்ச் 1

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் உதய கம்மன்பிலவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ராஜகிரிய பிரதேசத்தில் நடைபெற்றது.

பரப்புரைக் கூட்டத்துடன் இரத்ததான முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரத்ததான முகாமுக்கு வருகை தந்த, ஆளும் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேஹான் சேமசிங்க, உதித் லொக்குபண்டா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)

# தமிழர் வரலாறு இருள் சூழ்ந்த காலமே

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மார்ச் 1

தமிழர்களின் வரலாற்றில் கடந்த 67 வருட காலம் இருள் சூழ்ந்த காலமாகவே இருந்து வந்துள்ளது. இன்றும் அதே நிலையே தொடர்கிறது.

இதனைப் புரிந்து கொள்ளாத பேரினவாத அரசுகள் இந்த நாட்டிலே சமாதானம் நிலவுவதாக கூறிவருவது ஒட்டு மொத்த தமிழ் இனத்தையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயலாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து துறைநீலாவணை கிராமத்துக்கு உதவி வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்போராட்டம் என்பது குறிப்பிட்ட ஒரு நாட்டில் தான் ஆரம்பிக்கப்படுகின்றது. அங்கு தான் போராட்டமும் இடம்பெறுகின்றது. விடுதலைப் பயணத்தின் வெற்றியைத் தீர்மானிப்பது சர்வதேசம். அந்த வெற்றியை தீர்மானிக்கும் போராட்டம் தான் தற்போது சர்வதேச மட்டத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின் றது.

இந்தப் போராட்டத்தை வெறுமனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாத்திரம் நடத்தவில்லை. புலம்பெயர் நாடுகளிலே வாழ்கின்ற எமது உறவுகள், அமைப்புக்கள் சர்வதேச ரீதியாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று உலக அரங்கில் பேசப்படும் மிகவும் முக்கியமான பிரச்சினை இலங்கையில் வாழும் தமிழர்களுடைய பிரச்சனையாகும்.

இந்தப் பிரச்சினை தற்போதைக்கு உலகத் தலைவர்களின் மனங்களில் பெரும் பிரச்சனையாக இருந்துகொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வடக்குக்,கிழக்கிலே வாழ்கின்ற தமிழர்களின் தனிப் பெரும் கட்சி என்பதனை சர்வதேசம் உணர்ந்திருக்கின்றது. அதற்காக வேண்டி நாம் இன்னும் உழைக்கவேண்டி இருக்கின்றது.

அடுத்த மாதம் அமெரிக்காவால் கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானம் ஏற்கனவே இரண்டு தடவைகள் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை விட மிகவும் இறுக்கம்வாய்ந்ததாக இருக்கும் என்பதனை உலகத் தலைவர்கள், இராஜதந்திரிகள் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இலங்கை அரசு தொடர்ந்து ஒரு இனப் படுகொலையை செய்து கொண்டு இருக்கிறது. இனப்படுகொலை என்பது வெறுமனே உயிர்களை மாத்திரம் அழிப்பதல்ல.

இனப்படுகொலை என்பது அந்த இனத்தின் இருப்பை, வாழ்வாதாரத்தை, கலை, பண்பாடுகளை, மொழியை, அழிப்பதற்கு இந்த நாட்டு அரசு தொடர்ந்து திட்டம் தீட்டி மேற்கொள்ளும் செயற்பாடு என்பதனை சர்வதேச சமூகங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன.

எமது போராட்டத்தின் வடிவங்கள் அகிம்சை என்றும் ஆயுத போராட்டம் என்றும் பல கோணங்களில் சென்று இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்ட இராஜதந்திரப் போராட்டமாக மாற்றம் பெற்றுச் சென்றுகொண்டு இருக்கின்றது.

இன்று சர்வதேச மட்டத்திலே மிகவும் முக்கியமான விடயமொன்று அம்பலமாகியிருக்கின்றது. அதாவது இந்த நாட்டிலே தமிழ் இனம் சுதந்திரம் காணாத அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற உண்மை அனைத்து புலம் பெயர் நாடுகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டிலே மிகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட இனமாக எமது தமிழ் இனம் இன்னும் தங்களது விடுதலையை வென்றெடுத்து அதன்மூலம் நிரந்தர அரசியல் தீர்வைப்பெறுவதற்காக சர்வதேச ரீதியாக போராடிக்கொண்டு வருகிறது - என்றார். (ச-31)

# பூங்காக்களைப் பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கட்டணம்

## ஆராய்கிறது வனஜீவராசிகள் வளத்துறை அமைச்சு

கொழும்பு,மார்ச் 1

நாடுமுழுவதிலும் உள்ள தேசிய வனவிலங்கு, பூங்காக்களைப் பார்வையிடச் செல்லும் உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணங்கள் அறவிடும் முறையை அறிமுகப்படுத்த வனஜீவராசிகள் வளத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

**வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணங்களை அறவிடும் முறையை அறிமுகப்படுத்த வனஜீவராசிகள் வளத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.**

அதன் அடிப்படையில் புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்கவும், வரி, வாகன கட்டணம் மற்றும் சேவைக் கட்டணங்களை உள்ளடக்கி உரிய தொகை ஒன்றை கட்டணமாக நிர்ணயிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டணங்களின் அடிப்படையில் யால தேசிய வனவிலங்கு சரணாலயத்துக்குள் பிரவேசிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் பத்துப் பேரைக் கொண்ட குழுவினருக்கு 3 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்பட உள்ளது.

பத்துக்கு மேற்படும் ஒரு நபருக்கு தலா 300 ரூபா கட்டணமாக அறிவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிவனொளி பாத மலைக்குச் செல்லும் வயது வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் தலா 10 அமெரிக்க டொலர்கள் அறவிப்பட உள்ளதோடு, சிறுவர்களுக்கு 5 டொலர்கள் அறவிடப்பட உள்ளன. (ச)

## இரண்டு மொழிகளிலும் அடையாள அட்டை

கொழும்பு,மார்ச் 1

சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் அச்சிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் நேற்று வெள்ளிக்கிழமையில் இருந்து விநியோகிக்கப்பட்டு வருவதாக என்று ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார குறிப்பிட்டார்.

இருந்த போதிலும் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் நடைமுறையிலோ அல்லது கட்டணங்களிலோ மாற்றம் ஏற்படமாட்டாது என்று அவர் கூறினார்.

மொழி ரீதியான பிரச்சினைகளைத் தவிர்ப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தேனிலவில் இலங்கை இரண்டாம் இடத்தில்

*வெளிநாட்டவர்கள் தங்களது தேனிலவைக் கொண்டாடுவதற்காகச் செல்ல சிறந்த நாடுகள் பட்டியலிலும் திருமணம் செய்துகொள்வதற்கான சிறந்த நாடுகள் பட்டியலிலும் இலங்கை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. சர்வதேச சுற்றுலாத் துறை நிறுவனமான சுவிஸ்சர்லாந்தின் நிறுவனம் ஒன்று கடந்த 8 வருடங்களாக நடத்திய ஆய்வின் பயனாகவே இலங்கைக்கு இந்த இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.*

*திருமண வைபவங்கள் நடத்துதல் மற்றும் தேனிலவுக்கான ஹோட்டல்களைப் பதிவு செய்தல் போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது என்று குறித்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதன் பிரகாரம், திருமணம் செய்து கொள்ள சிறந்த 10 நாடுகளாக மொரீஷியஸ், இலங்கை, அமெரிக்கா, சென்.லூசியா, அன்டிகுவா, தாய்லாந்து, பாபடோஸ், மெக்ஸிகோ, ஜமய்க்கா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியன தெரிவாகியுள்ளன.*

*தேனிலவு செல்வதற்கு சிறந்த நாடுகள் பட்டியலில் மாலை தீவுகள், இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியம், தாய்லாந்து, மொரீஷியஸ், அமெரிக்கா, இந்தோனே ஷியா, மலேசியா, சென்.லூசியா, இத்தாலி ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.* (ச)

# கிராம சேவகர்களுக்கு 6 ஆம் திகதி நியமனம்

## வழங்கி வைப்பார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,மார்ச்1

திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 3500 கிராம சேவகர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவால் வழங்கப்படவுள்ளன.

**புதிதாக நியமனம் பெறும் கிராம சேவகர்கள் வடக்கு, கிழக்கு உட்பட வெற்றிடமுள்ள பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுவர்.**

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் விசேட வைபவத்தில் ஜனாதிபதி புதிய கிராம சேவகர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கையளிக்கவுள்ளார் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் பி.பி. அபேகோன் தெரிவித்தார்.

மேல் மற்றும் தென்மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் காலங்களில் புதிய அரச நியமனங்கள் வழங்குவது தொடர்பில் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன பேச்சு நடத்தியுள்ளார். அதன் போது எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நியமனங்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய கிராம சேவகர்களின் பெயர் விவரங்கள் கடந்த வாரம் இணையத் தளங்களில் வெளியிடப்பட்டிருந்தன.

அவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அமைச்சினால் தற்போது அனுப்பப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

புதிதாக நியமனம் பெறும் கிராம சேவகர்கள் வடக்கு, கிழக்கு உட்பட வெற்றிடமுள்ள பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வை காணவேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுகோள்



உடுகம புத்தரக்கிததேரர்

கொழும்பு,மார்ச்1

உள்நாட்டு பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என்று கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரக்கிததேரர் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் கட்சித் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசின் சகல திட்டங்களையும் எதிர்ப்பது எதிர்க்கட்சியின் பணியல்ல. வெளிநாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று அவர் கூறினார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்று அவர் குறிப் பிட்டார்.

நாம் வாழ்வதற்கு வேறு நாடுகள்இல்லை. எனவே இந்த நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆளும் கட்சியின் குற்றங்களை சர்வதேச சமூகத்திடம் முறையிட்டால், அதனை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு இலங்கை மீது தலையீடுகளை செய்ய முயற்சிப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை - ஆஸ்திரேலியா கடற்படை கூட்டுப் பயிற்சி

கொழும்பு,மார்ச்1

இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய கடற்படையினர் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பயிற்சிகள் ஹமாஸ் மெல்பர்ன் என்ற ஆஸ்திரேலிய கடற்படைக் கப்பலில் நடத்தப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்தக் கப்பல் இலங்கையில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

இரு நாடுகளினதும் கடற்படையினர் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோத ஆள்கடத்தல் மற்றும்கடற் கொள்ளைநடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (ச)

# இலங்கையின் ரூபா பெறுமதி குறைந்தது

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த மூன்று மாதங்களில் குறைந்த பெறுமதியைப் பதிவு செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் டொலர் ஒன்றுக்கான இலங்கைப் பெறுமதி 131 ரூபா என்ற நிலையில் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

இறக்குமதி மீதான அதிகரித்த கேள்வியே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் பண்டிகைக் காலம் என்பதால் மேலும் இறக்குமதிகள் அதிகரிக்கவுள்ள நிலையில், டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி அடையும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# நீரில் மூழ்கி சிறுமிகள் உயிரிழப்பு

நாகொட மற்றும் வெலிகம பகுதிகளில் நீரில் மூழ்கி 15 வயதான இரண்டு சிறுமிகள் உயிரிழந்துள்ளனர்.

நாகொட கிங் கங்கைக்கு நேற்று முன்தினம் மாலை குளிக்க சென்றபோது மாணவி ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார். அவர் காப்பாற்றப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மிரிஸ்ஸ களு வெல்ல கடலில் நீராடச்சென்ற சிறுமியொருவரும் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளார். (ச)



கொழும்பிலுள்ள விமானப்படைத் தலைமையகத்தில் புதிய விமானப் படைத் தளபதியாக எயார் மார்ஷல் கோலித குணதிலக்க,நேற்று வெள்ளிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.


## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தின் குழுக் கம்பனியான காப்புறுதி நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள்..........

**நிதி ஆலோசகர்கள் Financial Planners**

**தகைமைகள்:-**

1. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. 18-65 வயதுக்குட்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்.
3. அரச/தனியார் துறைகளில் இருந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
4. வடமாகணத்திலிருந்து வேலை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பது விரும்பத்தக்கது.

**சலுகைகள்:-**

1. கவர்ச்சிகரமான மாதாந்த அடிப்படைக் கொடுப்பனவுகள் 22000/=வரை.
2. கவர்ச்சிகரமான இன்னும் பல விசேட கொடுப்பனவுகள்
3. வெளிநாட்டுச் சுற்றுலா செல்வதற்கான அரிய வாய்ப்புகள்
4. குறுகிய காலத்துக்குள் அதிகமாக சம்பாதிக்கக் கூடிய வாய்ப்புகள்
5. திறமை அடிப்படையில் பதவி உயர்வுகள்

மேற்குறிப்பிட்ட தகைமையுடையோர் 07.03.2014 க்கு முன்பாக உங்கள் சுய விபரக் கோவையை விளம்பர இலக்கம் 4488, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா மாணிக்கம்



வரணியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா மாணிக்கம் நேற்று (28.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் வசந்தகுமாரி, நந்தகுமாரி, சாந்தகுணம் (லண்டன்), சுஜாதா, மதியழகன் (சுவிஸ்), செல்வழகன் ஆகியோரின் அன்புத்தாயும் கந்தசாமி காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் சிவநாதன், சுகி, ரூபி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் வரணியில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இடைக்குறிஞ்சி மேற்கு,
வரணி.

தகவல் :
குடும்பத்தினர் (மகன் - செல்வா)
T. P : 077 7498980


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா ? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள்.

077 9086737 Computer Repair

GUNAA BEST PC
52 Hospital Road, Jaffna.

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவரை உடன் எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 078 715 4715 (43192) (3.6.4)

## வாகனம் வாடகைக்குண்டு

GC ஹயஸ் வாகனம் மாத வாடகைக்கு சாரதி இல்லாமல் வழங்கப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 077 455 0599 (43195) (3.6.4)

## சட்டரிங் ஜக் தேவை

சட்டரிங் வேலைக்கான ஜக் விலைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:
077 506 2261 (45256) (10.14)

## காணி விற்பனைக்கு

களவாவோடை ஏழாலையில் 6 பரப்புக் காணி வீடு பயிர்களுடன் உடன் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு:
077 303 6850 (43537) (10.14)


## மரண அறிவித்தல்

### பிலிப்ஸ் கிறிஸ்டோபர்

(இளைப்பாறிய உதவிப்பணிப்பாளர் - சமுர்த்தி வவுனியா - திருகோணமலை)



புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்ஸ் கிறிஸ்டோபர் (இளைப்பாறிய உதவிப்பணிப்பாளர் - சமுர்த்தி வவுனியா திருகோணமலை) (25.02.2014) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அந்தோணிப்பிள்ளை - பிலிப்ஸ் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திரு. திருமதி யோசப் - எட்வேட் தம்பதியரின் அன்பு மருமகனும் எலிசபெத் அன்னபூரணம் (பேபி) அவர்களின் பாசமிகு கணவரும் நிமல்ராஜ், நிரோஷன், நிஹாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரியா, டுனுஷா ஆகியோரின் மாமனும் கெவினின் பேரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனி பொன்ராஜா (இலங்கை) ஜார்ஜ் மரியதாஸ் (லண்டன்) மற்றும் மேரிமக்டலின் பூமணி (இலங்கை), அருட்திரு இம்மானுவேல் ஜேசுதாசன் (OMI மன்னார் - இலங்கை), செல்லம் சூசைதாசன் (கனடா) காலஞ்சென்ற மேரிகிரேஸ் தங்கமணி (இலங்கை) மற்றும் எல்சிருக்கு (இலங்கை), ஜோன் மரியநேசன் (லண்டன்), யுகரிஸ்தா கண்மணி (லண்டன்), ஜோசப் தேவதாஸ் (லண்டன்) காலஞ்சென்ற பிலிப்ஸ், பெஞ்சமின் ஆகியோரின் அன்புசகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொறளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை (28.02.2014) முதல் பார்வைக்காக வைக்கப்பட்டு இன்று சனிக்கிழமை (01.03.2014) பி.ப. 1 மணிக்கு இறை ஆராதனையின் பின்னர் பொறளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் அவரின் அஸ்தி நாளை மறுதினம் (03.02.2014) திங்கட்கிழமை புலோலி தெற்கு புனித சூசையப்பர் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி, குடும்பத்தினர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மஹிந்தவின்

எலியந்த வைற்றின் கார் அவரது வீட்டிலிருந்து அதிகாலை புறப்பட்டுள்ளது. வைற்றின் தாயாருடைய வீட்டுக்குச் செல்வதற்காகவே காரைச் சாரதி எடுத்துச் சென்றுள்ளார். இதன் போது, மோட்டார் சைக்கிளில் வெளியில் நின்றிருந்த இனந்தெரியாத ஆயுததாரிகள், கார் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதன்போது காரினுள் மருத்துவர் எலியந்த வைற் இருக்கவில்லை. இதனால் அவர் பாதுகாப்பாகத் தப்பியுள்ளார். (த-5)

## நெடுந்தீவில்

ததாகவும் அதனால் சிறுவனின் சடலம் அகற்றப்படாது இதுவரை சம்பவ இடத்திலேயே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்றையதினமே அந்த இடத்திலிருந்து சடலம் அகற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நெடுந்தீவு 5 ஆம் வட்டாரத்தில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

நெடுந்தீவில் நேற்று அதிகாலை தொடக்கம் மழை பெய்துள்ளது. அதனால் சம்பவ இடத்திலுள்ள ஆலமரம் ஒன்று சரிந்து மின்கம்பியில் முட்டியவாறு இருந்துள்ளது. அதில் பனையோலை ஒன்று காணப்பட்டமையால் அதனை எடுப்பதற்குச் சிறுவன் முற்பட்டபோதே மின் தாக்குதலுக்கு இலக்காகிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனைக் காணாது பெற்றோர் தேடியபோதே சிறுவன் உயிரிழந்தமை தெரியவந்தது. சிறுவனின் உடல் அந்த இடத்திலிருந்து இன்னும் அகற்றப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4-7)

## 2016 க்கு

கூட்டியே இந்த வருடம் அல்லது அடுத்த வருடத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்படுகிறது என்று கூறப்படுவது குறித்து ஜனாதிபதியிடம் அங்கு கேள்வி எழுப்பப்பட்டது. தனது இரண்டாவது பதவிக்காலம் 2016 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னதாக தேர்தல் நடத்தும் எண்ணம் எதுவும் தனக்குக் கிடையாது என்று மஹிந்த ராஜபக்ஷ அப்போது தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது அமெரிக்கா தலைமையிலான நாடுகள் கொண்டுவரவுள்ள தீர்மானத்தின் பின்னணியில் அமெரிக்காவுக்கு வேறு சதி நோக்கங்கள் இருக்கின்றன என்றும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார். இலங்கை அரசுக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் முதலில் அவை கட்டாயமாகத் தம்மிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (உ-5)

## யாழ்ப்பாண

தொடர்பில் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளிலும் தமது வீடுகளுக்கு வரும் இராணுவத்தினர், பெண்களை இராணுவத்துக்கு இணைத்துத் தருமாறு கோரி வற்புறுத்தி வருவதாகக் கிராம சேவையாளர்களால் குறித்த கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் தமது பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களின் விவரங்கள், அவர்களின் தொலைபேசி இலக்கங்கள், அவர்களுக்குள்ள காணிகள் - சொத்துக்கள், மற்றும் அவர்களின் ஏனைய விவரங்களையும் தமக்குத் திரட்டித் தருமாறு இராணுவத்தினர் கேட்பதாகக் கிராமசேவையாளர்கள் தெரிவித்தனர். (த-5)

## ராணுவத்தின்

திய அதிகாரி எஸ். சிவரூபனால் புதைகுழி தோண்டப்பட்டது.

"பாய்களில் சுற்றப்பட்டு ஒன்றின் மீது ஒன்று போடப்பட்ட நிலையில் இருந்த 9 சடலங்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன. இறுதிப் போரில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இங்கு புதைத்தனர் என்று சாட்சி ஒருவர் தெரிவித்திருக்கிறார்" என்று கூறினார் மருத்துவர் சிவரூபன்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் பெரும்பாலானவை பெண்களுடையவையாக இருக்கும் சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 830514988ஏ என்ற இலக்கமுடைய அடையாள அட்டை ஒன்றும் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மண்டையோடுகளில் சிலவற்றில் காயங்கள் காணப்படுகின்றன என்றும் சில எலும்புக்கூடுகளின் கை, கால்கள் மோசமாகச் சிதைந்து காணப்படுகின்றன என்றும் மருத்துவ அதிகாரி கூறினார்.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி 9ஆம் திகதி இந்தச் சடலங்கள் அந்த இடத்தில் புதைக்கப்பட்டன என்று சாட்சி ஒருவர் தெரிவித்தார். உழவு இயந்திரத்தில் சடலங்களை எடுத்து வந்து புதைத்த சாரதி இப்போதும் உயிருடன் இருக்கிறார் என்றும் விசாரணையில் கூறப்பட்டள்ளது.

இதே பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் மேலும் பல சடலங்கள் போடப்பட்டு மூடப்பட்டன என்றும் சாட்சியளிக்கப்பட்டுள்ளது. அந்தக் கிணறு பின்னர் 'கிரவல்' மண் போடப்பட்டு முற்றாக மூடப்பட்டுள்ளது. இதனைத் தோண்டுவதற்கான நடவடிக்கைகள் பின்னர் எடுக்கப்படுமா என்பது குறித்து உறுதியான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

"இராணுவத்தின் பல்குழல் எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த இவர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அருகில் இருந்த காணிக்குள் புதைக்கவே முதலில் முயன்றனர். அதற்கு காணி உரிமையாளர் அனுமதி மறுத்ததால் இந்த இடத்தில் புதைத்தனர்" என்று சாட்சி தெரிவித்தார். (உ-5, 55)

## இலங்கையின்

லர் ஜோன் ஹெரி.

வோசிங்டனில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடுகளின் மனித உரிமைகள் நடைமுறைகள்- 2013' என்ற அறிக்கையை வெளியிட்டு வைத்து, உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமைகளையும், மனித கௌரவத்தையும் மறுக்கின்ற நாடுகள் எமது நலன்களுக்கும் மனித நலன்களுக்கும் சவாலாக இருக்கும் என்பது எமக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

56 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில், மனித உரிமை மீறல்கள் ஒவ்வொன்றாகப் பட்டியலிடப்பட்டு, அதற்கு ஆதாரமான சம்பவங்கள், சாட்சியங்கள் என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த விரிவான அறிக்கையின் சுருக்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

**குடும்ப அரசியல்**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பமே அரசில் ஆதிக்கம் செலுத்துகிறது. அவரது இரண்டு சகோதரர்கள் முக்கியமான நிறைவேற்று அதிகாரப் பதவிகளில் இருக்கின்றனர். ஜனாதிபதியின் மகன் உள்ளிட்ட பெருமளவான அவரது உறவினர்கள் அரசியல் மற்றும், இராஜதந்திரப் பதவிகளை வகிக்கின்றனர்.

**சட்டநடவடிக்கை இல்லை**

பாதுகாப்புப் படைகள், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர். இலங்கை அரச அதிகாரிகள், மற்றும் ஆளும் கூட்டணியுடன் இணைந்துள்ள ஏனையோர், உயர்ந்த பட்ச தண்டனை விலக்கை அனுபவிக்கின்றனர்.

2009 இல் முடிவுக்கு வந்த போரின் போது இழைக்கப்பட்ட, அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக எந்த ஒருவரும் பொறுப்புக் கூற வைக்கப்பட வில்லை.

**துணை ஆயுதக் குழுக்கள்**

தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில், இராணுவம் மற்றும் அரச ஆதரவு துணை ஆயுதக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் நீதிக்குப் புறம்பான கொலைகளும், பொலிஸாராலும், இராணுவத்தினராலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் துன்புறுத்தப்படுவதும் மற்றொரு முக்கியமான பிரச்சினையாகும்.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோர் இலங்கை அரசுடன் இணைந்துள்ள தனிநபர்களால் தாக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது.

**மக்கள் இன்னும் மீளக்குடியமரவில்லை**

உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் ஏனைய சில இடங்களில் பொதுமக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தவர்கள் தாம் விரும்பிய இடங்களில் மீளக்குடியமர முடியவில்லை.

பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்களும், பாலியல் பாகுபாடுகளும் தொடர்வதுடன் சிறுவர் துஷ்பிரயோகங்களும் தொடர்கின்றன.

நம்பகமான பொறுப்புக்கூறல் இல்லாததுடன், இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடு செய்ய அச்சம் கொண்டுள்ளனர் என்றும் ஹெரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த-5)

## மிரட்டல்

கடந்த ஆண்டுக்கான இலங்கை மனித உரிமைகள் நிலை தொடர்பான அறிக்கை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையிலேயே மேற்படி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தலைமையாகக் கொண்ட ஈ.பி.டி.பி போர்க் காலத்தில் இலங்கை அரச படைகளுடன் சேர்ந்தியங்கியது. இராணுவத்துடன் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

போரின் பின்னரான காலப் பகுதியில் தமது வருமானத்துக்காகவும், தம்மை அந்தப் பகுதியில் நிலை நிறுத்திக் கொள்வதற்காகவும் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். மிரட்டல், மிரட்டிப் பணம் பறித்தல், ஊழல் போன்ற நடவடிக்கைகளில் ஈ.பி.டி.பி தொடர்புபட்டுள்ளது. மேலும் ஈ.பி.டி.பியினர் குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பிலும் ஆதாரங்களையும் அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

**அனந்தி வீட்டின் மீதான தாக்குதல்**

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி இரவு, 20 ஆம் திகதி அதிகாலையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் என்று நன்கறியப்பட்ட நபர், இராணுவ உடையில் வந்த நபருடன் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அனந்தி சசிதரனின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த வருடம் மே 6 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி. சகாதேவன் தலைமையிலான குழுவினர், ஈ.பி.டி.பி. யினருக்கு எதிரான துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த போது, 12 பேர் கொண்ட ஈ.பி.டி.பியினர் அங்கு வந்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

**ஊடகங்களை மிரட்டியமை**

கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நெடுந்தீவில் பத்து வயதுச் சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினரின் டி.என்.ஏ மாதிரி சம்பவத்துடன் ஒத்துப்போவதாகவும் அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த வருடம் மே மாதம் 6 ஆம் திகதி யாழ். நகரில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து ஊடகங்களிடம், தன்னால் ஊடகங்களின் கழுத்தை நெரிக்க முடியும் என்று தெரிவித்ததையும் அறிக்கையில் அமெரிக்கா கோடிட்டுகாட்டியுள்ளது. (த-5)

## டிப்பர்

மூளை வெளியேறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணித்த மற்றொருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

டிப்பர் வாகனத்தைச் செலுத்தி வந்த இந்தியாவைச் சேர்ந்த ஹிந்தி மொழி பேசும் நபர் விபத்தையடுத்து வாகனத்தை விட்டுத் தப்பிச் சென்று பொலிஸில் சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்தவரும் யாழ். அரசடி நல்லூர் பகுதியில் வசித்து வந்தவருமான பொன்னன் தர்மரட்ணம் (வயது-61) என்பவரே உயிரிழந்தார். அவருடன் சென்ற திருநெல்வேலியைச் சேர்ந்த வன்னியசிங்கம் (வயது-70) என்பவரே படுகாயமடைந்து கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

இருபாலைச் சந்தியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் கோண்டாவிலுக்குச் செல்லும் வீதியில் நேற்றுப் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து இருபாலைச் சந்தி நோக்கிச் செல்லும் வீதியில் பயணித்தனர். அவர்கள் இருபாலை - கோண்டாவில் வீதியில் ஏற முற்பட்டபோதே அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் கோண்டாவில் பக்கமாக இருந்து வந்த குறித்த டிப்பரும் மோதுண்டு விபத்து ஏற்பட்டது.

விபத்தையடுத்துச் சம்பவ இடத்திலேயே தர்மரட்ணம் மூளை வெளியேறிய நிலையில் வீதியின் மறுபுறத்துக்குத் தூக்கி வீசப்பட்டார். வீதியில் ரத்தம் தோய்ந்திருந்தது. அவரது உடலைப் பொலிஸார் கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றிருந்தனர். பின்னர் அங்கிருந்து சடலம் வாகனத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

காயமடைந்தவரும் உடனடியாகக் கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4-17)

## பயங்கரவாதச்

மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்ற பரிந்துரையும் இடம்பெறுள்ளது.

இந்தப் பரிந்துரை நியாயமற்றதொன்று எனத் தெரிவித்துள்ள இலங்கை அரசு, அதனை நீக்கமுடியாது என்று திட்டவட்டமாக மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களின் அனைத்துலக வலைப்பின்னல் அவர்களின் நாடு கடந்த அமைப்புகளின் மூலம் இலங்கையின் அமைதி மற்றும் உறுதிப்பாட்டையும், நல்லிணக்க செயல்முறைகளையும் சீர்குலைக்கத் தொடர்ந்தும் தீவிரவாத செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இலங்கைக்குத் தேவைப்படுகிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோருவது நியாயமற்றது. அமெரிக்காவும், பிரிட்டனும் இதைவிட இன்னும் வலுவான சட்டங்களைக் கொண்டுள்ளன என்றும் இலங்கைஅரசு பதிலளித்துள்ளது.

இதேவேளை கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித மனித உரிமை ஆணையாளர் இந்த விடயத்தை இலங்கை அரசிடம் நேரடியாகக் கேட்டிருந்தார். அப்போதும் இலங்கை அரசு அதனை நீக்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## உதயன்

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. 54 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் ஊடக சுதந்திரம் தொடர்பில் 24 ஆம் பக்கத்திலிருந்து 29 ஆம் பக்கம் வரை பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்படுள்ளன.

இதில் 26 ஆம், 27 ஆம் பக்கங்களில் 'உதயன்' மீதான தாக்குதல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உதயன் ஆசிரியர் மீதான தாக்குதல், உதயன் நிர்வாக இயக்குநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவனின் வாகனம் மீதான தாக்குதல், 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உதயன் விநியோக ஊழியர் மீதான தாக்குதல், அதன் பின்னர் உதயன் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரதானமாக உதயன் கிளிநொச்சி பிராந்திய அலுவலகம் மீதான தாக்குதல் மற்றும் உதயன் தலைமை அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அச்சகம் தீயிட்டு எரிக்கப்பட்டமை என்பனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு உதயன் செய்தி ஆசிரியர் மீதான தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் மீதே இன்னமும் நடவடிக்கை எடுக்காமை தொடர்பிலும் அமெரிக்கா தனது கவலையைத் தெரிவித்துள்ளது. (த-5)

## சர்வதேச

தமிழ் மக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த புதன் கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

கடந்த வருடம் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அமர்வுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

பிரிட்டன் பிரதமர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் எனக் கோரி, பிரிட்டன் பிரதமரின் இல்லத்தின் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (த-5)

## அரசுக்கு

பாகிஸ்தானும், வேறு சில முஸ்லிம் நாடுகளும் தாராளமாக உதவியுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள முஸ்லிம் வர்த்தகர் சமூகத்தின் குழுவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வர்த்தக பிரமுகர் ரிபாய் ஹாஜியாரின் இல்லத்தில் நடத்திய சந்திப்பின்போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக் காலத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகள் குறித்து இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டபோது அதற்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர், சிறு குழுக்கள் ஆட்டம் போடுகின்றன. அதனை நாம் அடக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்குப் பாதிப்பு ஏற்பட இடமளிக்கமாட்டோம். எதிர்ப்புச் சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். முஸ்லிம் சமூகம் ஒருபோதும் நாட்டுக்குத் துரோகமிழைக் கவில்லை. அவர்கள் அரசுக்கு விசுவாசமாகவே இருக்கின்றனர். இதனை நாம் ஒரு போதும் மறவோம். உங்கள் உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தார். (த-5)

# நவஜீவன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச்.1

மணிவண்ணன், பசீலன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தினால் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு தலைவர் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய 2014 ஆம் ஆண்டுக்கான தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.



கிண்ணம் வென்ற நவஜீவன்ஸ் அணியினர்

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது இரண்டு அணிகளும் எந்த வித கோல்களையும் பெறவில்லை. ஆட்டத்தின் 53 ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிக்கு கிடைக்கப் பெற்ற நேர் உதை ஒன்றை சரியான முறையில் உதைக்க மணிவண்ணன் அதனை தலையால் முட்டிக் கோலாக்கினார்.

டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் பதிலுக்கு கோல் போட முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை.

ஆட்டத்தின் 64 ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் பசீலன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான இரண்டாவது கோலினைப் போட்டார்.

ஆட்டத்தின் 80 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கு கிடைத்த தண்டனை உதையை அந்த அணி வீரன் அனுராகாந்தன் கோலாக்கினார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இருந்த போதும் இரு அணியினராலும் மேலதிக கோல்களைப் போட முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 2014 ஆம் ஆண்டுக்கான தலைவர் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற அணிக்கு 15 ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு 10 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

இறுதியாட்டத்தில் சிறந்த வீரனாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் மணிவண்ணன் தெரிவானார்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் உபாலி ஹேவகேயும், கௌரவ விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுரா டீ சில்வாவும் கலந்து கொண்டனர்.

(கு-23-422-86)

## கரவெட்டி பிரதேச செயலக தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்.1

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியின் தெரிவுப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (கு-23)

## வவுனியாவில் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடி, கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

கரப்பந்தாட்டப் போட்டி வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்திலும், கபடிப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்திலும் இடம் பெறவுள்ளன. (கு-23)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். வலைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 2014 ஆம் ஆண்டுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 10 விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றுகின்றன. (கு-23)


நெல்லை பிளாஸ்ரர் விளையாட்டுக்கழகம் நடத்திய 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் வெற்றி பெற்றுச் சம்பியனை தனதாக்கிய மைக்கல் விளையாட்டுக் கழக அணியினர். (கு-23)

## தடகளப் போட்டி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது உதைபந்தாட்ட போட்டிக்கான அட்டவணை தயாரித்தல் இடம்பெறவுள்ளது.

எனவே விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் நித்தில நாயகம் அறிவித்துள்ளார். (கு-23)

# வடமராட்சி லீக் அங்குரார்ப்பணம்


விளக்கேற்றும் ரஞ்சித் றொட்றிக்கோ

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் நேற்று வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதாபரணம் தலைமையில் அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ கலந்து கொண்டு புதிய லீக்கை ஆரம்பித்து வைத்தார்.


இதில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் உபாலி ஹேவகே. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுரா டீ சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடமராட்சிலீக்கில் அங்கம்வகிக்கும் 25 விளையாட்டுக்கழகங்களுக்கு இந்த நிகழ்வில் வைத்து உதைபந்துகள் வழங்கப்பட்டன.

பின்வருவோர் புதிதாக உருவாக்கப்பட்ட வடமராட்சி லீக்கின் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-டி.எம். வேதாபரணம், செயலாளர் -ரி வரதராஜன், பொருளாளர் யோ.ரஜனிகாந்த், உபசெயலாளர்- எஸ் கமல், உப தலைவர்களாக டாக்டர் கமலநாதன், க.சிறிஸ் கந்தராசா, எஸ்.பாஸ்கரன், உ. விணோத், எஸ்.ரதீஸ் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாகபிரசாந்தன் ஆகியோரும் தெரிவானார்கள். (கு-23)

## பூப்பந்தாட்டப் போட்டி இன்று



யாழ்ப்பாணம், மார்ச் 1

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு. விக்டோரியா வீதியில் அமைந்துள்ள பி.எம்.சி கட்டட உள்ளரங்கில் இடம் பெறவுள்ளது. போட்டிக்கான நிரல் ஒழுங்கு தயாரிக்கும் நிகழ்வு காலை 8 மணிக்கு இடம்பெறும்.- போட்டியில் பங்குபற்றவுள்ள போட்டியாளர்கள் நேர காலத்துடன் சமுகம் தருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் பிரசன்னா கேட்டுள்ளார். (கு-23)

## வலிகாமம் வலய பாடசாலைகளின் கரம் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரம்போட்டி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இராமநாதன் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (கு-23)

## விருந்தினரை காக்க வைத்த யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம்

வலி. வடக்கு, மார்ச் 1

முடிவெடுக்க முடியாது திண்டாடிய யாழ் மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் நடவடிக்கையினால் பல மணித்தியாலங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் விருந்தினர்களாகச் சென்று மைதானத்தில் காத்திருந்து விட்டுத் திரும்பிய சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் அளவெட்டியில் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் தாச்சிச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இறுதிப்போட்டியை நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டு அணிகளுக்கும் அறிவிக்கப்பட்டதுடன் விருந்தினர்களும் வந்து சேர்ந்தனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட கழக வீரர் ஒருவர் இரண்டு கழகங்களில் விளையாடியதாகக் கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனால் மற்றும் ஒரு கழகத்தை இறுதியில் விளையாட வரும்படி அறிவிக்கப்பட்டிருந்தது

இறுதியில் விளையாடுவதற்கு வருகை தந்த கழகங்கள் மைதானத்தில் தர்க்கத்தில் ஈடுபட்டதால் இதனைச் சமாளிக்க முடியாமல் தாச்சிச் சங்க நிர்வாகிகள் திண்டாடினர்.

இதனால் விருந்தினர்கள் பல மணி நேரம் மைதானத்தில் காத்திருந்து விட்டுத் திரும்பிச் சென்றனர்.

போட்டிகளை நடத்துபவர்களும், சங்கங்களும் உரிய முறையில் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்காத கழகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(கு-86)

# ரியல் மட்ரிட் கோல் மழை



சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி 6:1 என்ற கோல் கணக்கில் சால்கே அணியைத் தோற்கடித்தது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள கழக அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஜெல்சென்கிர்கென் நகரில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த சால்கே அணியும், ஸ்பெயின் சேர்ந்த ரியல் மட்ரிட் அணியும் மோதின.

ஆட்டம் தொடங்கியதில் இருந்தே ரியல் மட்ரிட் அணியினர் கோல்மழை பொழிந்தனர். ஆட்டத்தின் முடிவில் ரியல் மட்ரிட் அணி 6 கோல்களை அடித்திருந்தது. அந்த அணியின் நட்சத்திர வீரர்கள் கிறிஸ்டியானோ ரொனால்டோ (52, 89ஆவது நிமிடம்), கெரத் பேல் (21, 69 ஆவது நிமிடம்) மற்றும் பென்செமா (13, 57 ஆவது நிமிடம்) ஆகியோர் தலா இரண்டு கோல்கள் அடித்து அணியின் வெற்றிக்கு உதவினர்.

சால்கே அணிக்கு ஹன்டெலர் மட்டும் கடைசி நிமிடத்தில் ஒரு கோல் அடித்திருந்தார். இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது லீக் சுற்று மார்ச் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது. (த)

# இலங்கை வீரர்களுக்கு புதிய ஒப்பந்தம்

Sri Lanka Cricket

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான புதிய ஒப்பந்தத்தை நேற்று வெளியிட்டுள்ளது. 2014ஆம் - 2015 ஆண்டுக்கான ஒப்பந்தமே இது. கடந்த புதன்கிழமை தெரிவுக் குழுவினரின் கூட்டம் இடம் பெற்றது. இந்தக் கூடத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதுடன் சில புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டும் உள்ளன.

ஒப்பந்த உயர்வு வழங்கப்பட்டவர்கள் நான்கு பேர். தினேஷ் சந்திமால் தரம் 2 இல் இருந்து தரம் ஒன்றுக்கும், லகிறு திரிமான்னே தரம் 3 இல் இருந்து தரம் 2 இற்கும், குஷால் ஜனித் பெரேரா தரம் 4 இல் இருந்து தரம் 3 இற்கும், கௌஷால் சில்வா மாகாண தரம் ஒன்றில் இருந்து தேசிய தரம் 4 இற்கும் உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் 17 வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பத்தங்கள் கீழ் வருமாறு அமைந்துள்ளன.

**தரம் 01 :** குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, நுவான் குலசேகர, அஞ்சலோ மத்தியூஸ், ரங்கன ஹேரத், தினேஷ் சந்திமால்

**தரம் 02:** லஹிரு திரிமான்னே, அஜந்த மென்டிஸ்

**தரம் 03:** குஷால் ஜனித் பெரேரா, திசர பெரேரா

**தரம் 04:** சமின்ட எரங்க, சசித்திர சேனாநாயக்க, கௌசால் சில்வா, சுரங்க லக்மால்

**விசேட ஒப்பந்தம்**

பிரசன்ன ஜெயவர்த்தன, திலகரட்ன டில்ஷான், லசித் மாலிங்க

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தரப்படுத்தல்களின் அடிப்படையில் வீரர்களுக்கு இம்முறை சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. ஒருநாள் சர்வதேச தரப்படுத்தலில் 5ஆம் இடத்தில் இருப்பதற்காக 2 வீதமும், 20/20 தரப்படுத்தலில் முதலாமிடத்தில் இருக்கின்றமைக்கு 5 வீதமும் ஆக 7வீதம் உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிப்பட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல்களின் அடிப்படையில் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி குமார் சங்கக்கார (ஒரு நாள் மற்றும் டெஸ்ட்), ரங்கன ஹேரத் (ஒரு நாள் மற்றும் டெஸ்ட்), திலகரட்ன டில்ஷான் (ஒரு நாள்), அஜந்த மென்டிஸ் (20/20), நுவான் குல்சேகர (20/20) ஆகியோர் மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுள்ள வீரர்கள். (த)

# இலங்கையிடம் வீழ்ந்தது இந்தியா

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சங்கக்கார பொறுப்பாக ஆடிப் பெற்ற சதத்தின் உதவியுடன் இறுதிப் பத்துப் பரிமாற்றத்தில் 4 பந்துகள் மீதமிருக்க இரண்டு இலக்குகளால் வெற்றி பெற்றது இலங்கை அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி தலைவர் மத்யூஸ் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதன்படி இந்தியாவின் தவான்- ரோகித் சர்மா தொடக்க வீரர்களாக களம் இறங்கினார். சர்மா 13 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அப்போது இந்தியா 9.2 பந்துப்பரிமாற்றங்களில் 33 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து 2ஆவது இலக்காக தவானுடன், விராட் கோஹ்லி ஜோடி சேர்ந்தார். இருவரும் இலங்கை பந்தை வீச்சை எளிதாக எதிர்கொண்டு ஓட்டங்கள் சேர்த்தனர். தவான் அரை சதம் அடித்தார். மறுமுனையில் அரை சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட கோஹ்லி 48 ஓட்டங்களில் மென்டீஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். அதன் பின் வந்த வீரர்கள் சொதப்பியதால் இந்தியாவின் இலக்குகள் மளமளவென சரிந்தது. ரகானே (22), ராயுடு (18), கார்த்திக் (4), பின்னி (0) ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். தவான் 94 ஓட்டத்தில் ஆட்டம் இழந்தார்.

ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காமல் நிதானமாக நின்றார். அவருடன் அஸ்வின் சேர்ந்து ஓரளவு ஓட்டங்கள் சேர்த்தார். இருந்தாலும் அஸ்வின் 18 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். கடைசியாக வந்த சமி 2 ஆறு ஓட்டங்கள் அடிக்க இந்தியா 50 பந்துப்பரி மாற்றங்கள் முடிவில் 9 இலக்குகள் இழப்புக்கு 264 ஓட்டங்கள் சேர்த்தது.

ரவீந்திர ஜடேஜா 22 ஓட்டங்களுடனும், சமி 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இலங்கை அணி சார்பில் மென்டீஸ் 4 இலக்குகளையும், சேனநாயக 3 இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு 265 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 49.2 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. குசல் பெரேரா திருமன்னே ஆகியோரின் சிறந்த அடித்தளமும் சங்கக்காரவின் அணியின் நிலையுணர்ந்த பொறுப்பான ஆட்டமும் கைகொடுக்க வெற்றிக் கனியை ருசித்தது இலங்கையின் வெற்றியை தடுத்து நிறுத்த இந்திய அணித் தலைவர் கோஹ்லி பந்து வீச்சு, களத்தடுப்பு வியூகங்களில் பல மாற்றங்கள் செய்த போதும் அவை பயனற்றுப் போயின. ஒரு கட்டத்தில் 43.1 பந்துப் பரிமாற்றங்களில் 216 ஓட்டங்களைப் பெற்றபோது வெற்றியின் காற்று இந்தியாவின் பக்கம் வீசியது. ஆனால் சங்கக்காராவுடன் இணைந்த இலங்கையின் பின்கள வீரர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்க இறுதி 4 பந்துகள் மீதமிருக்க வெற்றியின் இலக்கை தொட்டது இலங்கை.

இலங்கையின் துடுப்பாட்டத்தில் குசல் பெரேரா 64 ஓட்டங்களையும் குமார் சங்கக்காரா 103 ஓட்டங்களையும் லகிரு திருமன்னே 38 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

இந்தியாவின் பந்துவீச்சு சார்பாக மொகமட் சமி, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 3 இலக்குகளையும் ரவிச்சந்திரன் அஸ்வின் 2 இலக்கையும் கைப்பற்றினர்.


இப் போட்டியின் ஆட்டநாயகனாக சதம் விளாசிய குமார் சங்கக்கார தெரிவுசெய்யப்பட்டார். (த-400)



# கௌசல் குற்றத்தை ஏற்றுக்கொண்டார்

பங்களாதேஷ் பிரீமியர்லீக் 20/20 போட்டித் தொடரில் ஆட்டநிர்ணய சதி தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டை இலங்கை வீரர் கௌசல் லொக்கு ஆராய்சி ஏற்றுக் கொண்டுள்ளார்.

நியூஸிலாந்தின் துடுப்பாட்ட வீரர் லூ - வின்சென்ட் மற்றும் பங்களாதேஷின் முன்னாள் தலைவர் மொஹமட் அஸ்ரப்புல் ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட ஏனைய இரண்டு வீரர்களாவார்.



பங்களாதேஷ் கிரிக்கட் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த மூன்று பேர் கொண்ட குழுவின் முன்பாக அவர்கள் இதனை ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொடரில் ஆட்ட நிர்ணயச் சதியை மேற்கொள்வதற்காகச் சூதாட்டக் காரர்கள் அணுகியிருந்தமை குறித்த தகவல்களை அதிகாரிகளுக்கு வழங்கவில்லை என்று அவர்கள் மீது குற்றஞ் சுமத்திப்பட்டிருந்தது. இந்த மூன்று வீரர்களும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் குல்னா ரோயல் பெங்காள்ஸ் அணிக்காக விளையாடி இருந்தனர். அவர்கள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கையை விரைவில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

**Sky Computers (Pvt) Ltd**

அனைத்துப் பாடத்துக்குமான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம் TP:0212221417


Ms office 2013, Internet & E-mail, Graphic Design, Video Mixing, DTP, Hardware, Computer Type Setting, Web Design, Kids Programme.

சிங்களம்: புதிய பிரிவுகள் ஆரம்பம்
(03-03-2014 திங். வெள் - 4:30 pm)

89,கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

# மஸ்ரபி மோர்தாசா வெளியேற்றம்

ஆசியக் கிண்ணப் போட்டித்தொடரில் இருந்து பங்களாதேஷ் அணி வீரர் மஸ்ரபி மோர்தாசா உபாதை காரணமாக அணியில் இருந்து விலகியுள்ளார். தொடரின் ஆரம்பத்திலேயே இவருக்கு உபாதை இருந்தது. 100 வீத தகுதியாக இவர் இருக்கவில்லை. இந்த நிலையில் இந்திய அணியுடனான போட்டியில் ஏற்பட்ட பக்கவாட்டு எலும்பு வலியே இவர் இனி இந்த தொடரில் விளையாட முடியாத நிலையை




ஏற்படுத்தியுள்ளது. அவருக்குப் பதிலாக சபியுள் இஸ்லாம் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சியான உபாதைகள் பங்களாதேஷ் அணியை இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளி வருக்கின்றது. ஏற்கெனவே தமிம் இக்பால் உபாதை காரணமாக அணியில்இடம்பெறவில்லை. கடந்த போட்டியில் அணித்தலைவர் முஸ்பிகீர்ரஹீமுக்குஉபாதை ஏற்பட்டு போட்டியில் முழுமையாக விளையாடவில்லை. விளையாடுவது சந்தேகம் என்ற நிலை உள்ளது. இந்த நிலையில் மஸ்ரபி மோர்தாசா விளையாட மாட்டார் என்பது பந்துவீச்சில் பெரிய பின்னடைவை உருவாக்கும். (த)

**MBA**

**MASTER OF BUSINESS ADMINISTRATION**

General / Marketing / Finance / HR / IT

TRUTH 1965 ALDERSGATE

Duration : 1 year

New Batch Starts on 02/03/2014 at 10.00 am.

Admission Requirements
- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

Accredited and UGC approved

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

மேலதிக விபரங்களுக்கு :
021 4 900 900
077 999 2484

**விற்பனைக்கு**

ஹோட்டல் கடைக்குரிய சகல தளபாடங்களும் மலிவு விற்பனைக்குள்ளன.
(T.V, டீ பிறிஜ் உள்ளிட்ட சவாரி மோட்டார் சைக்கிலும்)
(45152)(12.3.6) தொடர்பு:071 406 9295

**மிக பிந்திய அதிரடி**

எண்ணி 60 நாள்களில் கனடா பறக்கலாம்

கனடாவில் படிக்க, மாதம் 3 லட்சம்வரை உழைக்க
3 பேருக்கு மட்டும் 3 வருட விசா
வெல்ல பொன்னான வாய்ப்பு
(யாவும் நிபந்தனைகளுடன்)

7 நாள்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com (45254) (10.14)

**DOCTOR**

**MBBS / DENTAL**

From ASIA'S LARGEST MEDICAL & DENTAL UNIVERSITY

SICHUAN UNIVERSITY, CHINA

Approved by Sri Lankan Medical / Dental Council, Medical / Detal Council by India, GMC- UK, ECFMG-USA , IMED, WHO & UNESC
* Asia's No 1Medical / Dental University & 3rd largest in the world
* 33 hospitals in the campus including Asia's biggest hospital building with more than 5,000 beds
* 25% SCHOLARSHIP only for our students
* A large number of Sri Lankan Students studying in the campus

**MBBS / DENTAL IN EUROPE**

* UNIVERSITY OF LATVIA - LATVIA
* RIGA STRADINS UNIVERSITY - LATVIA
* VILNIUS MEDICAL UNIVERSITY - LITHUANIA
* CRIMEAN MEDICAL UNIVERSITY -UKRAINE
* ODESSA STATE UNIVERSITY - UKRAINE.
** TBILISI STATE MEDICAL UNIVERSITY - GEORGIA

Limited Seats only .... Register Now

ICS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna.
107, B 1/1 Galle Road, Colombo - 06
021 7306000, 077 3013060

**முதன் முறையாக ஆபரண மலிவு விற்பனைச் சந்தை வவுனியாவில்**

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேர்ல்ஸ், ரோடியம் முலாம் பூசப்பட்ட பெரியன் கல் பதித்த ஆபரணங்கள் முதலியனவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

10 இலட்சத்திற்கும் மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தரப்பம்.

ரூபா 200/- மற்றும் ரூபாய் 400/- மட்டுமே

இடம் : நெல்லி ஸ்டார் ஹொட்டல் கிளை - பாக்கியம் ரெஸ்ட்
1ம் குறுக்கு வீதி, வவுனியா.
தொ.இல. : 024 2220216, 024 2224477

4 நாட்கள் மட்டுமே 1,2,3,4ம் திகதி மார்ச் 2014
சனி, ஞாயிறு திங்கள் மற்றும் செவ்வாய் கிழமை
(நேரம்- காலை 10 மணிமுதல் மாலை 8 மணிவரை)

ஒவ்வொன்றும் ரூபாய் 2000 முதல் ரூபாய் 4000 வரையான ஏற்றுமதி விலை கொண்ட ஆபரணங்கள் ரூபாய் 200 முதல் ரூபாய் 400 வரை மட்டுமே விற்கப்படவுள்ளன.

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாமையால் சில மட்டுமே கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ் ........ Rs. 200/- மட்டுமே
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான ப்ரேஸ்லட் ........ Rs. 200/- மட்டுமே
- ஆவுஸ்திரேலியன் டயமண்ட் மோதிரம் ........ Rs. 200/- மட்டுமே
- வெஸ்டன் ஸ்டைல் தோடு ........ Rs. 200/- மட்டுமே
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் ........ Rs. 200/- மட்டுமே
- கொரியன் ஸ்டோன் தோடு ........ Rs. 200/- மட்டுமே
- வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு ........ Rs. 400/- மட்டுமே
- ஓசன் ப்ளு டயமண்ட் மோதிரம் ........ Rs. 400/- மட்டுமே
- அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் ........ Rs. 400/- மட்டுமே
- தங்க முலாம் பூசப்பட்ட வளையல் செட் ........ Rs. 400/- மட்டுமே
- தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி ........ Rs. 400/- மட்டுமே
- அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை செட் ........ Rs. 400/- மட்டுமே
- கிளசிக் பேர்ள் நெக்லஸ் செட் ........ Rs. 400/- மட்டுமே
- சுஹாகன் மங்கல் சூத்ரர் ........ Rs. 400/- மட்டுமே

விசேட சலுகை : திருமண மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரங்கள் ரூபாய் 500/- முதல் ரூபாய் 10000/- வரையான விலைகளில் விற்கப்படும்.

Entry : Free | Contact : 0755 075675 | Sunday Open

வழங்குவோர் : Beauty Tex, Colombo

**English Classes**

தனி மற்றும் குழு வகுப்புக்கள்.
Gr-3-O/L
T.P:077 331 4608 (45178)(3.6.4)

**தவறிவிட்டது**

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த
**கந்தையா சிவராசா**
என்பவரது தேசிய அடையாளஅட்டை (782341294V), சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் 26.02.2014 அன்று புதுக்குடியிருப்புச் சந்திக்கும் கோம்பாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(45115) (12.3.6) தொடர்பு:077 418 8583

**The Science Corner**

சிங்களம்
ஆரம்பம் 02.03.2014 ஞாயிறு 1.30-2.30 p.m
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் தேடுவோர், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்களம் கற்க விரும்பும் அனைவருக்கும் உகந்தது.

ஆங்கிலம்-English
Spoken with Grammar
ஆரம்பம் 02.03.2014 ஞாயிறு 2.30-3.30 p.m
ஆசிரியர் -T.சாம்சன்
சிங்களம், ஆங்கில பாட கற்பித்தலில் 35 வருட கால அனுபவம் வாய்ந்தவர்.

இடம்: The Science Corner (45170) (3.6.4)
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**The Science Corner**
கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
A/L-2016

ஆரம்பம்: 02.03.2014 ஞாயிறு காலை 9.00

Physics -M.ஸ்பெல்மன் (Bsc)
C.Maths -N.பிரதீபன் (Bsc)
Chemistry-S.சுரேஸ்குமார்(Bsc)
Biology -ஜக்ஷன்(Bsc)

A/L-2015,A/L-2014,Day class என்பன நடைபெறுகின்றன.
The Science Corner
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
நேரஅட்டவணையில் மாற்றங்கள் தேவைப்படின் அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும். (45171)(3.6.4)

**மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

அதி உயர் சம்பளத்துடன் மலேசியா ஐந்து நட்சத்திர (Five Star Hotel) ஹோட்டலில் உடனடி வேலைவாய்ப்பு. சாப்பாடு, தங்குமிடம் இலவசம்.
* Waiter * Waiter helper * Room boy * Cleaning போன்ற துறைகளில் உடனடி வேலைவாய்ப்பு விரையுங்கள். நாளை (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை Hospital வீதி, ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green grass hotel காலை 9.00 மணி தொடக்கம் ஒரு மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
உடன் விரையுங்கள்-075 409 9124 (43189)(3.6.4)

**மரண அறிவித்தல்**

**திருமதி சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை - பதுளை தமிழ் ம.வி, பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாசாலை)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி 27.02.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஓய்வுநிலை அதிபர் பொன்னையா சந்திரசேகரியின் அருமை மனைவியும், சத்தியராணி, காலஞ்சென்ற சத்தியலீலா மற்றும் சத்தியவதி, மகாலிங்கசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாலகௌரி, பாலச்சந்திரன், பாலேஸ்வரி, சந்திரபாலன், பாலரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரமூர்த்தி, சறோஜாதேவி, லோறன்ஸ், நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், சுபாஷன், சாமந்தி, ஷாருகி, நிராஷ்சன், அபிநயன், நிஷாந்தி, யதுர்ஷன், பிரணவி, லினுஷா, கவிதரன், ஷாருகா, தர்ஷிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்துமயானத்துக்கு (டிப்போ அருகில்) எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.021 490 2960 (45713) (12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.